ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2127/15 - 2019 ජුනි මස 12 වැනි බදාදා - 2019.06.12
2127/15 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு யூன் மாதம் 12 ஆந் திகதி புதன்கிழமை
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**தேசிய பௌதிக திட்டமிடல் சபையால் அனுமதிக்கப்பட்டுள்ள நிகழ் நிலைப்படுத்தப்பட்ட தேசிய பௌதிக திட்டமிடல் கொள்கை மற்றும் திட்டம் - 2050 இனை வெளியிடல்**

*மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர் பாட்டலி சம்பிக்க றணவக்க ஆகிய நான், 2000 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க, நகர மற்றும் நாட்டுத் திட்டமிடல் (திருத்தப்பட்ட) சட்டத்தின் 5 (அ) மற்றும் (ஆ) கூற்றுகளின் கீழ் ஒழுங்கமைக்கப்பட்ட தேசிய பௌதிக திட்டமிடல் கொள்கை மற்றும் திட்டம் உட்படும் திட்டமிடல் அறிக்கையினை, மேற்குறிப்பிட்ட சட்டத்தின் 4 (அ) கூற்றின் கீழ் தேசிய பௌதிக திட்டமிடல் சபையினால் 2019, சனவரி மாதம் 11 ஆந் திகதி அனுமதிக்கப்பட்டதால் அக்கொள்கை மற்றும் திட்டத்தை பொதுமக்களின் அறிவுக்காக இவ்வாறாக வெளியிடுகின்றேன்.*

பாட்டலி சம்பிக்க றணவக்க,
மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர்.

மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு,
"சுகுறுபாய",
பத்தரமுல்லை,
2019, யூன் 01.

1A — PG 4562- 517 (2019/05)
இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

**நிகழ்நிலைப்படுத்தப்பட்ட தேசிய பௌதிக திட்டமிடல் கொள்கை மற்றும் திட்டம் - 2050**

*03.07.2007 மற்றும் 09.11.2011 இல் அங்கீகரிக்கப்பட்ட தேசிய பௌதிக திட்டமிடல் கொள்கை மற்றும் திட்டம் - 2030 இனை அடிப்படையாகக் கொண்டது*

*2000 ஆம் ஆண்டு திருத்தப்பட்ட நகர மற்றும் நாட்டுத் திட்டமிடல் சட்டத்தின் 49 ஆம் இலக்க பகுதி 5A(b) இற்கமைய, தேசிய பௌதிக திட்டமிடல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு சட்டத்தின் பகுதி 4 B(C) இற்கமைய அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்திற்கமையவும் இவ் ஆவணமானது தயாரிக்கப்பட்டுள்ளது. இத்திட்டமானது அமைச்சுக்களுக்கிடையிலான ஒருங்கிணைப்புக் குழுவினால் 07.09.2017 ஆந் திகதியன்று அங்கீகரிக்கப்பட்டதுடன், சட்டத்தின் பகுதி 4(C) இற்கமைய மேன்மை தங்கிய சனாதிபதி தலைமையிலான தேசிய திட்டமிடல் சபையினால் 26.02.2019 ஆந் திகதியன்று அனுமதிக்கப்பட்டது.*

கலாநிதி ஜெகத் முனசிங்க,
பணிப்பாளர் நாயகம்.

தேசிய பௌதிகத் திட்டமிடல் திணைக்களம்,
5 ஆவது மாடி, "செத்சிறிபாய",
பத்தரமுல்லை.

**தேசிய பௌதிக திட்டமிடல் கொள்கை மற்றும் திட்டம் - 2050**

## 1.0 நோக்கு மற்றும் இலக்குகள்

1.1 **பின்னணி**.- தேசிய பௌதிக திட்டமிடல் கொள்கையினை நிகழ்நிலைப்படுத்துவதற்கான செயற்பாடானது, 1946 ஆம் ஆண்டு 40 ஆம் இலக்க நகர மற்றும் நாட்டுத் திட்டமிடல் சட்டம் மற்றும் 2000 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க திருத்தச் சட்டத்தின் ஏற்பாடுகளிற்கு அமைவாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்தச் செயற்பாடனது, பலதரப்பட்ட ஆரம்பநிலைக் கற்கைகள் மற்றும் நிபுணர்கள், அபிவிருத்திசார் நிறுவனங்கள், பங்காளர்கள் மற்றும் ஆர்வலர்களிடமான ஆலோசனைகளின் உதவியுடன் உருவாக்கப்பட்டுள்ளது.

நேர அட்டவணை.

1.2 **நேர அட்டவணை**.- இத்திட்டத்திற்காக நியமிக்கப்பட்ட நேர அட்டவணை கீழ்வருமாறு அமைகின்றது:

1. **குறுகிய கால இலக்குகள்:** திட்டமிடல் குழுவினுடைய அலுவலக விவகாரங்களினால் எதிர்வுகூறக்கூடிய ஐந்துவருட காலப்பகுதியை (2020-2025) இது உள்ளடக்குகின்றது. தற்போதைய அபிவிருத்தியின் போக்கு, தற்போதைய அரசாங்கத்தினால் முன்மொழியப்பட்ட கொள்கைகள் மற்றும் அவற்றின் பலன்கள், மற்றும் நாட்டின் பௌதிக மற்றும் சமூகச் சுற்றாடலில் பாரியளவான தாக்கத்தை செலுத்தக்கூடிய ஏற்கனவே அமுல்படுத்தப்பட்டுவரும் அபிவிருத்தித் திட்டங்கள் போன்றவை இந்தக் கால வரையறையில் பிரதானமாக கருதப்பட்ட அம்சங்களாகும்.

2. **இடைக்கால இலக்குகள்:** திட்டமிடல் குழுவினால் குறிப்பிடத்தக்களவு உறுதிப் படுத்தப்படக்கூடிய எதிர்காலத்தை உள்ளடக்கிய பத்து தொடக்கம் பதினைந்து வருடகால (2030-235) நிலைமைகளை உள்ளடக்குகின்றது. வாழ்க்கைத்தரம் மற்றும் சமூக அந்தஸ்த்துக்களை உயர்த்துதல், உள்ளூர் மற்றும் உலக அரசியல் மாற்றங்கள், நாட்டினுடைய ஒட்டுமொத்த அபிவிருத்திச் செயற்பாட்டையும் மாற்றக்கூடிய துரிதமாக வளர்ந்துவரும் தொழில்நுட்பச் சுற்றாடல், அவ்வாறான மாற்றங்களினால் ஏற்படக்கூடிய சாத்தியமுள்ள விளைவுகள் போன்றவை இந்தக் காலவரையறையில் கருத்தில் கொள்ளப்பட்டுள்ளன.

3. **நீண்ட கால இலக்குகள்:** தற்கால திட்டமிடல் சார்ந்த கொள்கைகளின் மூலம் எதிர்வு கொள்ளக்கூடிய எல்லைக்கு மேற்பட்டுக் காணப்படும் இருபத்துஐந்து தொடக்கம் முப்பது வருடம் வரையான காலப்பகுதியை (2050) இது உள்ளடக்குகின்றது. எச்சந்தர்ப்பத்திலும் பாதுகாக்கப்படக்கூடிய அடிப்படையான பெறுமதிகள், மாற்றங்களின்றி நிலைத்திருக்கச் செய்யப்படவேண்டிய அம்சங்கள் மற்றும் எந்தவொரு செலவினங்களைக் கொடுத்தாவது நிலைநிறுத்தப்படவேண்டிய குறிக்கோள்கள் போன்றவை இந்தக் காலவரையறையில் கருத்தில் கொள்ளப்பட்டுள்ளன.

*1.3* நோக்கு

நோக்கு.

සුනිත සුබල සුහුරු දැයක්
සුසැදි සුරැකි සොඳුරු බිමක්

நேர்த்தியான வளம் பொருந்திய திறன்மிகு நாட்டிற்கான
நிலையான தன்னிகரற்ற திட்டமிடப்பட்ட தேசம்

**Mannered, Geared and Smart Nation**
**in a Planned, Sustained and Adored Land**

1. திட்டமிடப்பட்ட (பொருளாதாரத்தில் சமரசங்களிற்கு இடம்கொடுக்காத வளர்ச்சி, தொடர்சியான சமூக நலன்புரி சேவைகளின் மேம்படுத்தல், பௌதிக, சமூக, பொருளாதார மற்றும் சுற்றாடல் வளங்களின் உச்சக்கட்ட பயன்பாடுகளை உறுதிப்படுத்தும் கட்டமைக்கப்பட்ட சூழல்)

2. நிலைபேறான (நிலம், சமுத்திரம், நீர், மனிதவளம், வனஜீவராசிகள் மற்றும் நாட்டினுடைய ஏனைய வளங்களின் நீடித்து நிலையான தன்மையை உறுதிப்படுத்தும் அபிவிருத்தி)

3. தன்னிகரற்ற (தனித்துவமான தரைத்தோற்ற அம்சங்கள் மற்றும் சமூக- கலாச்சார விழுமியங்கள் பேணிப்பாதுகாக்கப்பட்டதும் மேம்படுத்தப்படுவதுமான புதிய அபிவிருத்திகள்)

4. நேர்த்தியான (மக்களிடத்தில் அமைதி மற்றும் இணக்கத்தை ஏற்படுத்தக்கூடிய சுற்றாடலை உருவாக்குதல்)

5. வளம்பொருந்திய (ஆரோக்கியம், செழுமை (வேலைவாய்ப்பு), அறிவு (கல்வி), தகைமை (பயிற்சிகள்), சக்தியளித்தல் (சமத்துவம்) போன்றவற்றை மேம்படுத்துவதற்கான சந்தர்ப்பங்களை ஏற்படுத்தல்)

6. திறன்மிகு (புத்தாக்கம், அதிநவீன தொழில்நுட்பத்தின் பாவனை மற்றும் வளர்ச்சி, சிறந்த தொழில்முறை செயற்பாடுகள் போன்றவற்றிற்கான பாதையை உருவாக்குதல்)

*1.4* ***பரந்த குறிக்கோள்.***- உலக பொருளாதாரத்தின் போட்டித்தன்மையில் நன்மைகளை அடையக் கூடியதாகவும் நிலைநிறுத்துவதற்கு, தேசத்தினுடைய நிலம், மக்கள் மற்றும் கடல்ப்பரப்பை நிலைபேறான உச்சப் பயன்பாட்டிற்கு உட்படுத்தல் மற்றும் இந்து சமுத்திரத்தின் தந்திரோபாய புவியியல் அமைவிடத்தினால் ஏற்படும் வாய்ப்புக்களை பயன்படுத்துவதன்மூலம், இலங்கையை அடுத்துவரும் தசாப்தத்தில் திறன்மிகு தேசமாக மிளிர வைப்பதற்கான ஒட்டுமொத்தக் குறிக்கோளின் அடிப்படையில் முன்மொழியப்பட்ட திட்டமானது பௌதிக சுற்றாடலை அபிவிருத்திசெய்வதற்காக வழிகாட்டுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

கொள்கையினுடைய பரந்த குறிக்கோள்.

*1.5* இலக்கு :

*1.5.1* ***குறுகிய கால இலக்கு (2020-25).***- இடைக்கால மற்றும் நீண்டகால இலக்குகளை அடைவதற்கு வசதிகளை ஏற்படுத்துவதற்காக, பல இலக்குகள் அடுத்துவரும் ஐந்து முதல் பத்து வருட காலப்பகுதிக்குள் எட்டப்படவேண்டிய தேவைப்பாடு காணப்படுகின்றது.

அ. செயற்பாடுகளிற்கு இடமளிக்கக்கூடிய நிலப்பாவனையைக் கொண்ட, இயற்கை புவியியல் அம்சங்களுடன் இசைவாக ஒருங்கிணைக்கப்பட்டதும் படிநிலையான சேவை மத்திய நிலையங்களைக் கொண்ட இயைபுத் தன்மையுள்ள குடியிருப்புக்களின் பரம்பல், பரந்த வீதிகள், புகையிரத மற்றும் ஏனைய உட்கட்டமைப்புக்களால் இணைக்கப்பட்ட, வர்த்தகம் மற்றும் வேலைவாய்ப்பிற்கு சௌகரியமானதும், வினைத்திறன் மற்றும் பாதுகாப்பானதுமான அம்சங்களினூடாக **தடைப்படுத்தப்படாத பொருளாதார வளர்ச்சிக்கு வசதிசெய்யும், இடரீதியான கட்டமைப்பு.**

ஆ. **உச்சப் பாவனையை ஊக்கப்படுத்துவதற்காக** நன்கு ஒருங்கிணைக்கப்பட்டதும் ஒன்று சேர்ந்ததுமான பௌதிக அபிவிருத்தி செயற்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் இருப்பிலுள்ள நிலம் மற்றும் ஏனைய பௌதிக வளங்கள், உட்கட்டமைப்புக்கள், மற்றும் மனித வளத்தின் வினைத்திறனான பாவனை, மற்றும் நாட்டினுடைய தனித்துவமான தரைத்தோற்றத்திற்கு உயர் பெறுமதியை வழங்கும் **அபிவிருத்திக்கான வழிகாட்டல்**.

இ. நிலம், நீர் மற்றும் ஏனைய வளங்கள், இயற்கை உயிர்- தொகுதிகள், கலாச்சார தரைத்தோற்ற அம்சங்கள் மற்றும் குடிமக்களின் பாரம்பரியங்களின் **நிலை பேறான பாவனையை உறுதிப்படுத்துவதன்** மூலமாக பௌதிக அபிவிருத்தியை மேற்கொள்வதற்கான **நிறைவேற்றல் கட்டமைப்பு**.

**1.5.2 இடைக்கால இலக்குகள் (2025-30).**- இந்த இலக்குகள் நீண்ட கால அடிப்படையான தாகவும் எதிர்வரும் பத்திலிருந்து பதினைந்து வருட காலப்பகுதிகளில் எட்டப்படக் கூடியவை ஆகவும் அமைகின்றன.

அ. தேசிய பொருளாதாரத்தை அதனுடைய மரபுசார் விவசாயம், பெருந்தோட்டத் துறை மற்றும் பாரம்பரிய கைத்தொழில் போன்றவற்றிலிருந்து, உயர் தொழில்நுட்ப, அறிவுசார் மற்றும் புத்தாக்க அடிப்படையிலான கைத்தொழில்துறை மற்றும் சர்வதேச வர்த்தகத்தை அதிகரித்தல் போன்றவற்றை நோக்கி **சீராக மாற்றுவதற்காக வசதியளிக்கும் இடப்பரப்புக்கள்**.

ஆ. சந்தர்ப்பங்கள் மற்றும் நிலம், கடல் மற்றும் குடியிருப்பாளர்களிடம் காணப்படும் வெளிக்கொணரப்படாத வளங்களை **காலத்திற்கு தேவையான வகையில் இனங்காண்பதற்கு** வினைஊக்கியாக அமையும் **அபிவிருத்தி முயற்சிகள்**.

இ. முதலீடு மற்றும் வர்த்தக செயற்பாடுகளைக் **கவரும், பௌதிக சுற்றாடல்** மற்றும் துணைபுரியும் பௌதிக, சமூக மற்றும் பொருளாதார உட்கட்டமைப்புக்கள்.

**1.5.3 நீண்ட கால இலக்குகள் (2050).**- இவை நீண்டகால எப்பொழுதும் நிலைத்திருக்கும் இலக்குகளாக அமைவதுடன் இவற்றின் செல்லுபடியாகும் காலம் இத்திட்டத்தின் காலஎல்லையை கடந்தும் நீடிக்கப்பட வேண்டியவையாக அமைகின்றன.

அ. நிலம், நீர், கடல் மற்றும் நாட்டினுடைய ஏனைய வளங்களின் **நிலைபேறான** பாவனை, விவசாய நிலங்கள், பாரம்பரிய தொழிற்சாலைகள், கலாச்சார ;

ஆ. தரைத்தோற்றம் மற்றும் பாரம்பரிய செயற்பாடுகளை பாதுகாத்தல். காலநிலை மாற்றம் மற்றும் இயற்கை அனர்த்தங்களை **எதிர்நோக்குதல்** ;

இ. சமத்துவம், சமமான சந்தர்ப்பங்கள் மற்றும் வளங்களை பெற்றுக் கொள்வதற்கு அனைவரிற்கும் சமவுரிமையை வழங்கும் சமநிலைப்படுத்தப்பட்ட அபிவிருத்தி.

பொதுவான கொள்கைகள்.

**1.6 வழிகாட்டற் கொள்கைகள்.**- முன்மொழியப்பட்ட அபிவிருத்திக் கட்டமைப்பினுள் மேற்குறிப் பிடப்பட்ட இலக்குகளை அடைவதற்காகவும், ஆரம்பகட்ட கற்கைகளின் அடிப்படையில் இனங்காணப்பட்ட தற்போதைய மற்றும் எதிர்வுகூறக்கூடிய எதிர்கால நிலைவரங்களை அடிப்படையாகக் கொண்டு, கீழே குறிப்பிடப்பட்ட வழிகாட்டற் கொள்கைகள் உருவாக்கப் பட்டுள்ளன.

பாதுகாக்கப்பட வேண்டிய பிரதேசங்கள்.

**1.6.1 "முக்கியத்துவம் வாய்ந்த" மற்றும் "தனித்துவமானவற்றைப் பாதுகாத்தல்".**- நாட்டின் அனைத்துப் பகுதிகளிற்குமான எதிர்கால அபிவிருத்தித் தேவைகளிற்கான கேள்விகளை பூர்த்திசெய்வதற்கான தொகுதியை பொருளாதாரரீதியில் வினைத்திறனுடன் வழங்குவதற்கு, இலங்கையானது அதனுடைய இயற்கை உயிர்த்தொகுதி, நீர் வளம் மற்றும் தரைத்தோற்ற அம்சங்களில் அதிகளவு தங்கியுள்ளது. பொறியியல் ரீதியான பதிலீட்டுத் தீர்வுகளை வழங்குவது அவ்வாறான அபிவிருத்திகளில் அதிகளவு செலவினங்களை ஏற்படுத்த வல்லது. ஆனபடியால், தற்போதுள்ள சுற்றாடல் தொகுதி மற்றும் பௌதிக கட்டமைப்புக்களின் தந்திரோபாயம் மிக்க பாதுகாப்பு மற்றும் மேம்படுத்தல் செயற்பாடானது பௌதிக மற்றும் பொருளாதார ரீதியான நிலைபேறான அபிவிருத்திக்கு அத்தியாவசியமானதாகும்.

அதேவேளையில், ஆரம்ப கட்டத்திலேயே உரிய பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்படாத நிலையில், அதிகரித்துவரும் காலநிலை மாற்றம், மற்றும் மனித நடவடிக்கைகள் காரணமாக உருவெடுத்துவரும் எதிர்வுகூறுவதற்கு நிச்சயமற்ற தன்மையை கொண்ட அனர்த்தங்களிற்கான சந்தர்ப்பங்கள் போன்றவை இலங்கையினுடைய பொருளாதார மற்றும் பௌதிக அபிவிருத்தி மீது அதிகளவான தடைகளை ஏற்படுத்தும் வாய்ப்பு உள்ளது. கடற்கரை கூருணர்வுப் பகுதி மற்றும் மத்திய மலைநாட்டுக் கூருணர்வுப் பகுதிகள் போன்றவை அவ்வாறான இக்கட்டுக்களை எதிர்நோக்கும் பகுதிகளாக அமைகின்றன.

மறுமுகத்தில், நாட்டின் பலபகுதிகளில் காணப்படும் தனித்துவம் வாய்ந்த, கவர்ச்சிமிக்க தரைத்தோற்ற அம்சங்கள் அப்பகுதிகளின் பொருளாதாரத்தின் அடிப்படையாக அமைகின்ற அதேவேளை நாட்டினுடைய கலாச்சாரம் மற்றும் பாரம்பரியங்களின் அடையாளங்களாக அமைகின்றன. அவ்வாறான அம்சங்கள், கவனிக்கப்படாமை, அதிகளவான பாவனை மற்றும் பொறுப்பற்ற நடவடிக்கைகள் காரணமாக அதிகரித்துவரும் அழிவிற்கான அபாயத்தை எதிர்நோக்கிவருகின்றன. நிலைபேறான பொருளாதாரம் மற்றும் சமூக- கலாச்சார அபிவிருத்திகளிற்கு அவ்வாறான அம்சங்களின் சிறப்பம்சங்கள் பாதுகாக்கப்படவேண்டியமை முக்கியமானதாகும். ஆனபடியால், அபாயத்திலுள்ள உயிர்த் தொகுதிகள், கூருணர்வுப் பகுதிகள் மற்றும் தனித்துவமான தரைத்தோற்ற அமைப்புக்களை பாதுகாத்தல் இலங்கையினுடைய எதிர்கால பௌதிக அபிவிருத்திக்கான வழிகாட்டற் கொள்கைகளாக அமைகின்றன.

இது தொடர்பான கவனம் செலுத்தப்படவேண்டிய பகுதிகள் உரு 1.1 இல் காட்டப் பட்டுள்ளது.

*மனித குடியிருப்பிற்கு பொருத்தமான பகுதிகள்.*

**1.6.2 மனித சமுதாயத்திற்கு "வாழ்வதற்கு ஏதுவான தன்மையை" உருவாக்குதல்.**- நாட்டினுடை நீண்டதும் நிலையானதுமான அபிவிருத்தியானது, ஐக்கிய நாடுகள் சபையால் குறிப்பிடப்பட்ட குறிகாட்டிகளை அடைவதன்மூலம் உயர்வான வாழ்க்கைத் தரத்தை அனுபவிக்கும் மக்களைக் கொண்ட ஆரோக்கியமான சூழ்நிலையிலேயே எதிர்பார்க்கக் கூடியதாகும். "வாழ்வதற்கு ஏதுவான தன்மையை" உறுதிப்படுத்தும் பௌதிக சுற்றாடலின் தரம் இந்த விடயம் தொடர்பான முக்கிய காரணியாகும்.

வாழ்வதற்கு ஏதுவான பௌதிக சுற்றாடலானது பல வழிகளின் ஊடாக அடையக்கூடியதாக இருப்பினும், புவியியல் மற்றும் சீதோசன நிலைமைகளின் தன்மை இதுதொடர்பில் மிகவும் இலாபகரமான அம்சங்களாக அமைகின்றன. மனித வாழிடங்கள் சௌகரியம்மிக்கதாக அமைவதற்கு வழிகோலும் பல அம்சங்களில், வளிமண்டல வெப்பநிலை, காற்றின் ஈரப்பதன், மழைவீழ்ச்சி, இயற்கை அனர்த்தங்களிலிருந்து பாதுகாப்பான இடங்கள் மற்றும் வனவிலங்குகளின் தாக்கங்களிலிருந்து பாதுகாப்பான பகுதிகள் மிகவும் முக்கிய அம்சங்களாகும். ஏற்கனவே அமைந்துள்ள சாலைகள், போக்குவரத்து போன்ற பௌதிக உட்கட்டமைப்பு வசதிகளுடன், நிலம் மற்றும் நீர் வளத்தினை பெற்றுக்கொள்வதற்கான சந்தர்ப்பங்கள் மற்றும் பாடசாலைகள் மற்றும் மருத்துவமனைகள் போன்ற சமூக உட்கட்டமைப்பு வசதிகள் சௌகரியமாக வாழ்வதற்கு ஏதுவான தன்மையை எட்ட முக்கியமாக அமைகின்றன.

மக்களுடைய கலாச்சார விழுமியங்களில் இணைபிரியாத அம்சமான இயற்கையுடன் இணைந்து (தாவர மற்றும் விலங்கு) வாழ்வதற்கான சந்தர்ப்பங்களும் வாழ்வதற்கு ஏதுவான பௌதிக சுற்றாடல் அம்சங்களில் உள்ளடக்கப்படவேண்டியவை.


மனிதக் குடியிருப்புக்களின் அபிவிருத்தியில் வாழ்வதற்கு ஏதுவான தன்மைக்கு வேண்டிய மேலே குறிப்பிட்ட அம்சங்களின் தெரிவு, இலங்கையின் எதிர்கால பௌதிக அபிவிருத்திக்கான திட்டமிடல் கொள்கையாக முன்மொழியப்படுகின்றது.

இது தொடர்பான கவனம் செலுத்தப்படவேண்டிய பகுதிகள் உரு 1.2 இல் காட்டப்பட்டுள்ளது.

*ஆற்றல்களைக் கொண்ட பகுதிகள்.*

**1.6.3 மறைந்திருக்கும் "ஆற்றல்" மற்றும் "சந்தர்ப்பங்களை" இனங்காணலும் அவற்றின் பயன்பாட்டை "மேம்படுத்தலும்".**- பெரும்பாலான இலங்கையினுடைய பெறுமதிவாய்ந்த வழங்கள், அவற்றின் முழுமையான பயன்பாடு இனங்காணப்படாத நிலையில் மறைந்திருப்பது தெளிவான உண்மையாகும். வெளியக பொருளாதார வலயமாக இனங்காணப்பட்ட 2,50,000 சதுர கிலோமீற்றர்களிற்கும் அதிகமான இந்து சமுத்திரத்தின் இலங்கைக்கு செந்தமான பகுதி இவ்வாறான மறைந்திருக்கும்

**உரு 1.1 : பாதுகாக்கப்பட வேண்டிய பிரதேசம் (கூருணர்வுத் தன்மை காரணமாக பாதுகாக்கப்பட வேண்டிய பகுதி)**



வளங்களில் ஒன்றாகும். மீன் வளம் மற்றும் சிறு அளவான கனிய வளங்கள் தவிர்ந்த அனைத்து சமுத்திர வளங்களும் பயன்படுத்தப்படாமலேயே உள்ளன. சமுத்திரம் சார்ந்த வளங்களில், கடற்காற்று, கடலலை, சாத்தியக்கூறுள்ள பெற்றோலிய மற்றும் எரிவாயு படிவுகள் போன்ற வளங்களும் இதிலடங்குகின்றன. இவை போதுமானளவு பயன்பாட்டிற்கு உட்படுத்தப்படாது இன்னமும் உள்ளன. உயர்வான சுற்றுலாப் பிரயாணிகளை கவரக்கூடிய நிலப்பரப்புக்கள் திட்டமிடப்பட்ட முறையில் மேம்படுத்தப்பட வேண்டியுள்ளன. பிரபல்யம் அடைந்த அமைவிடங்கள் தவிர இன்னும் பல பகுதிகள் இனங்காணப்படாமலேயே உள்ளன.

பலதரப்பட்ட தகைமைகளை உடையதும் கல்வி அறிவு உள்ளதுமான இளையோரினைக் கொண்ட, மனித வளமானது, நிலைபேறான அபிவிருத்திக்காக இலங்கையினால் கருத்தில் கொள்ளக்கூடிய முக்கியமான வளமாகக் காணப்படுகின்றது. குடித்தொகை மதிப்பாளர்களின் கருத்துப்படி "சனத்தொகை ஈவுத்தொகையை" இலங்கை எட்டியுள்ள இந்தச் சந்தர்ப்பத்தில், மனித வளத்தை பிராந்தியங்களிற்கு இடையேயான போட்டித்தன்மையில் நன்மைகளைப் பெறுவதற்கான இன்னொரு சந்தர்பமாக பயன்படுத்த முடியும். இவ்வாறான பயன்பாடு, அபிவிருத்திக்கான இன்னுமொரு பெறுமானமாக அமையக்கூடும்.

தொடர்ச்சியாக மேம்பட்டுவரும் தொழில்நுட்பம்சார் புத்தாக்கமானது சர்வதேச போட்டியாளர்களிற்கு இணையாக பயன்படுத்தப்பட வேண்டியுள்ளது.

இந்த நிலையில், எதிர்கால பௌதிக சுற்றாடலிற்கான திட்டமிடலில், மறைந்திருக்கும் வளங்கள் மற்றும் இனங்காணப்படாத வளங்களின் பயன்பாடு போன்றவற்றை உள்ளடக்குவதற்கு அதிகளவான சந்தர்ப்பங்களை ஏற்படுத்தல் ஒரு கொள்கையாக முன்மொழியப்பட்டுள்ளது.

இது தொடர்பான கவனம் செலுத்தப்படவேண்டிய பகுதிகள் உரு *1.3* இல் காட்டப்பட்டுள்ளது.

*1.6.4* **கிடைப்பனவுகளின் "பயன்பாட்டை" உச்சப்படுத்தல்.**- கிடைக்கப்பெற்ற தகவல் களின்படி, மீளளிக்கப்படவேண்டிய கடன்தொகை மற்றும் அடுத்த பத்து ஆண்டு காலப்பகுதியில் முன்னுரிமை அளிக்கப்படவேண்டிய துறைகளில் மேற்கொள்ளப்பட வேண்டிய உடனடி மேம்படுத்தற் தேவைகளிற்கு மத்தியில், இலங்கையானது அதனுடைய எதிர்கால அபிவிருத்தியை பலதரப்பட்ட தடைகளிற்கு மத்தியில் கொண்டுசெல்ல வேண்டிய சூழ்நிலை காணப்படுகின்றது. தற்போதுள்ள சூழ்நிலையில், கட்டாயமான தேவைப்பாடு காணப்படாத சந்தர்ப்பங்களில் பாரிய உட்கட்டமைப்பு அபிவிருத்திகளில் அதிகளவான முதலீடுகளை மேற்கொள்வது ஆரோக்கியமானதாக அமையாது.


இருப்பிலுள்ள வளங்களின் உச்சப் பயன்பாட்டை கொண்ட பகுதிகள்.

அவ்வாறான தடைகளிற்கு மத்தியியல், ஐக்கிய நாடுகள் சபையினுடைய நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள், உட்கட்டமைப்புக்கள் மற்றும் இயற்கை வளங்களின் நிலைபேறான பாவனையை வலியுறுத்துகின்றன.


இந்த நிலைமையில், புதிய உட்கட்டமைப்பு அபிவிருத்திகளில் முதலிடுதல் பொருளாதார ரீதியில் மேலதிக சுமையை ஏற்றும் அதேவேளையில், தற்போதுள்ள சமூக மற்றும் பௌதிக உட்கட்டமைப்பு வளங்களின் பாவனையை மேம்படுத்தல், மற்றும் அபிவிருத்தித் தேவைகளிற்கு முன்னுரிமை அளித்தல் போன்றவை முதன்நிலை பெறுகின்றன.

எவ்வாறாயினும், மிகவும் அழுத்தமான தேவை காணப்படும் சந்தர்ப்பங்கள் தவிர்ந்த ஏனைய சந்தர்ப்பங்களில், உற்பத்தித் திறனை அதிகரித்தல், வினைத்திறன் மேம்பாடு, அதிநவீன தொழில்நுட்பங்களின் அறிமுகம் போன்றவற்றினூடாக, ஏற்கனவே கையிருப்பிலுள்ளவற்றின் தரத்தை உயர்த்துவதில்,எதிர்கால முதலீடுகளை வழிப்படுத்தல் உகந்ததாக அமைகின்றது. இதற்காக, உலகில் மேம்பட்டுவரும் தொழில்நுட்பங்களை தருவித்துக் கொள்வதில் இலங்கையினுடைய முதலீட்டை நெறிப்படுத்தி உள்ளூர் மட்டத்தில் புத்தாக்க செயற்பாடுகளை ஊக்குவித்தல் பொருத்தமானதாகும்.

உரு *1.2* : வாழ்வதற்கு ஏதுவான பிரதேசம் (வாழ்வதற்கு ஏதுவான சுற்றாடலைக் கொண்ட பகுதிகள்)




உரு *1.3* : ஆராயப்பட வேண்டிய பிரதேசங்கள் (ஆராய்வதற்கும் அவற்றின் உச்சப் பயன்பாட்டைப் பெறுவதற்குமான சந்தர்ப்பங்களைக் கொண்ட பகுதிகள்)



இந்த அடிப்படையில், கையிருப்பிலுள்ள வளங்கள் மற்றும் உட்கட்டமைப்புகளை மேம்படுத்துவதற்காக முதலீடுகளை கட்டாயப்படுத்தல், எதிர்கால அபிவிருத்திக்கான திட்டமிடலில் ஒரு கொள்கையாக முன்மொழியப்படுகின்றது.

இது தொடர்பான கவனம் செலுத்தப்படவேண்டிய பகுதிகள் உரு 1.4 இல் காட்டப்பட்டுள்ளது.

**உரு 1.4 : உச்சப் பயன்பாடு மற்றும் சிறந்த பயன்பாட்டிற்கு உகந்த பிரதேசங்கள் (அபிவிருத்திக்கான சந்தர்ப்பங்களைக் கொண்ட பகுதிகள்)**



திட்டம்.

## 2. தேசிய பௌதிக திட்டம் 2050

### 2.1 இடரீதியான கட்டமைப்பு

**2.1.1 இதற்கான குறிக்கோள்.-** இலங்கைப் பிரஜைகளைப் போன்று வெளிநாட்டவர்களாலும் இரம்மியம் மிக்கதும் தன்னிகரற்றதுமாகப் பார்க்கப்படக்கூடிய, நன்கு திட்டமிடப்பட்ட, நிலைபேறான அபிவிருத்தியை உள்ளடக்கிய, உபாயமார்கமுள்ள அபிவிருத்திப் பாதையில் இலங்கையை (இலங்கை அரசு) வழிநடத்துதல் இத்திட்டத்தினால் முன்மொழி யப்பட்ட இடம் சார்பான கட்டமைப்பின் முதன்மைக் கொள்கையாக அமைகின்றது. இந்த வழிகாட்டற் கட்டமைப்பானது பகுதி 1.6 இல் குறிப்பிடப்பட்ட நான்கு வழிகாட்டற் கொள்கைகளையும் அடிப்படையாகக் கொண்டு, புவியியல் ரீதியாகவும் துறைரீதியாகவும் சமநிலைப்படுத்தப்பட்ட அபிவிருத்தியை நோக்கிய நகர்விற்காக கட்டமைக்கப்பட்டுள்ளது.


**2.1.2 முன்மொழியப்பட்ட இடரீதியான கட்டமைப்பானது** உரு 2 இல் காட்டப்பட்டுள்ளது. முன்மொழியப்பட்ட இடம்சார் கட்டமைப்பானது, இவ்வறிக்கையின் பகுதி 1.2 இல் குறிப்பிடப்பட்ட மூன்றுவகையான கால அட்டவணைகளின் ஊடாக, புவியியல் ரீதியாக தூர இடங்களில் பரந்து காணப்படும் வெவ்வேறு அரச மற்றும் தனியார் துறைசார்ந்த நிறுவனங்கள் மற்றும் அமைப்புக்கள் ஊடாக, எதிர்கால பௌதிக அபிவிருத்தியை மேற்கொள்வதற்கான பலசந்தர்ப்பங்களைக் கொண்ட ஊக்கப்படுத்தவும், நெறிப்படுத்தவும், ஒருங்கிணைக்கவும் பொருத்தமான கட்டமைப்பாக திகழ்கின்றது.

இந்த நாட்டினுடைய ஒட்டுமொத்த நிலப் பாவனைக் கோலமானது, 2050 ஆம் ஆண்டிற்கான வரைபடத்தில் காட்டப்பட்ட கட்டமைப்பிற்கு உருமாற்றப்படுவதற்காக எதிர்பார்க்கப்படுகின்றது. இந்தக் கட்டமைப்பானது விரிவான கற்கைகளில் இனங்காணப்பட்ட கண்டுபிடிப்புக்களின் அடிப்படையில் பகுதி 1.6 இல் குறிப்பிடப்பட்ட வழிகாட்டற் கொள்கைகளின்படி வடிவமைக்கப்பட்டுள்ளது. ஆனபடியால், இங்கு முன்மொழியப்பட்ட கட்டமைப்பானது, மரபு ரீதியான திட்டங்களில் புரிந்துகொள்ளப்பட்ட நிலையான இறுதி அடைவாக அமையாது, தற்கால சூழ்நிலையில் உருவெடுத்துவரும் பொருளாதார, சமூக அபிவிருத்தி கேள்விகள் மற்றும் தேவைகளிற்கு வழிசமைக்கும் முகமாக, நான்கு வழிகாட்டற் கொள்கைகளின் தாக்கத்தினூடாக உருவெடுக்கக்கூடிய, இடரீதியான உருவாக்கத்திற்கான நேரடி உருவமைப்பாகப் பார்க்கப்படமுடியும்.

இடரீதியான கட்டமைப்பானது அடுத்துவரும் உப பகுதிகளில் குறிப்பிடப்பட்ட துறை ரீதியான உபாயமார்க்கங்களுடன் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு உபாயமார்க்கமும் தற்போதுள்ள சந்தர்ப்பங்களின் சிறந்த பாவனையை உருவாக்கும் அதேவேளை, கூருணர்வுத் தன்மை காரணமாக பொருத்தமில்லாத பகுதிகளில் பாதுகாப்பு, மற்றும் பேணவேண்டிய தேவை போன்ற காரணங்களிற்காக பௌதிக அபிவிருத்தியை தணித்தல் உள்ளடங்கலாக, எதிர்பார்க்கப்படும் வளர்ச்சிக் கோலத்தை எட்டுவதற்கு துணைபுரியும் குறிப்பிட்ட புவியியல் அங்கங்களின் அபிவிருத்தி மீது செல்வாக்குச் செலுத்தும் பகுதிகளை கோடிட்டுக்காட்டுகின்றன.

இந்த முன்மொழியப்பட்ட சட்டகத்தின் அடிப்படையில், பிரதான அபிவிருத்திச் செயற்பாடானது, நான்கு "அபிவிருத்தித் தடப் பிராந்தியம்", இரண்டு "பெருநகரப் பிராந்தியம்" மற்றும் ஒன்பது "பிரதான நகரங்கள்" உள்ளடங்கலான, அதிகரிக்கப்பட்ட நன்மைகளை வளங்கக்கூடிய முதலீடுகளிற்கு மிகவும் பொருத்தமான தந்திரோபாய அமைவிடங்களாக இனங்காணப்பட்டுள்ளன. மத்திய கூருணர்வுப் பிரதேசம், கடற்கரைக் கூருணர்வுப் பிராந்தியம், மற்றும் விவசாய, சூழலியல் மற்றும் வன ஒதுக்கங்கள் போன்ற நாட்டின் மூன்றில் ஒரு பங்களவான பகுதியை உள்ளடக்கும் பகுதி, பாதுகாக்கப்படவேண்டிய காரணங்களிற்காக, சமமான முன்னுரிமை அளிக்கப்பட்டு அபிவிருத்தியின் தலையீடுகளிலிருந்து முழுமையாக பாதுகாக்கப்படும். இதற்கு மேலதிகமாக, பகுதி 1.5 இல் குறிப்பிடப்பட்ட இலங்கை அரசாங்கத்தின், வீட்டு வசதி அபிவிருத்தி, கைத்தொழிற் பேட்டைகளை நிறுவுதல், வர்த்தக மற்றும் ஏனைய நகர்சார் நிலப்பாவனை போன்ற பிரதான அபிவிருத்தி இலக்குக்களை அடைவதற்கு மிகவும் பொருத்தமானதும் நன்மைகளை உள்ளடக்கியதுமான அமைவிடங்களை முன்மொழிகின்றது.

உரு. 2 : முன்மொழியப்பட்ட இடரீதியான கட்டமைப்புத் திட்டம் - 2050




தயாரிப்பு: தேசிய பௌதிக திட்டமிடல் திணைக்களம்

மத்திய கூருணர்வுப் பிரதேசம்.

2.1.3 உரு 2.2 இல் காட்டப்பட்ட **மத்திய கூருணர்வுப் பிரதேசமானது**, கூருணர்வுள்ள இயற்கை பல்லுயிர் வாழ்விடங்கள், உயரளவான மண்சரிவு அபாயங்களிற்கு முகம்கொடுக்கும், நீர்வளப் பாதுகாப்பு தொடர்பாக அதிகளவு முக்கியத்துவம் வாய்ந்த புவியியல் சார் அம்சமாகும். இந்தப் பகுதி நாட்டினுடைய அனைத்து பிரதான நீர் மூலங்களினதும் ஆரம்பப் பகுதி நீரேந்து பிரதேசங்களையும் உள்ளடக்குகின்றது. இதற்காக இனங்காணப்பட்ட பகுதிகள், கண்டி, நுவரெலியா, கேகாலை மற்றும் மாத்தளை, இரத்தினபுரி, மொனராகலை, காலி, மாத்தறை, களுத்துறை மற்றும் கொழும்பு (இனங்காணப்பட்ட சில பிரதேச செயலாளர் பிரிவுகள்) போன்ற தற்போதைய நிர்வாக அலகுகளை உள்ளடக்குகின்றது. இவற்றின் விரிவான தகவல் ***பின்னிணைப்பு 01*** இல் தரப்பட்டுள்ளது.

இந்தப் பகுதிகளில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி நடவடிக்கைகள், நடைமுறை யிலுள்ள சட்ட விதிகளிற்கு அமைவாக தயாரிக்கப்பட்ட விரிவான வழிகாட்டிகளின் அடிப்படையில், தொடர்புபட்ட நிறுவனங்களின் ஊடாக கடுமையான விதிமுறைகளிற் கூடாக முகாமை மற்றும் அமுலாக்கம் செய்யப்படுவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் (NBRO) ஏற்கனவே இந்தப் பகுதியை "மண்சரிவு அபாய" மாவட்டங்களின் தலைப்பில் பிரகடனப்படுத்தியுள்ளதுடன், இந்தப் பகுதிகளில் மேற்கொள்ளப்படும் கட்டுமான நடவடிக்கைகளிற்கான வழிகாட்டி ஒன்றும் தயாரிக்கப் பட்டுள்ளது. இந்தச் செயற்பாடானது புவியியல் ரீதியான கட்டமைப்பு, நீரியல் தொகுதிகள், மற்றும் அபிவிருத்திச் செறிவு போன்றவற்றை பாதுகாப்பதற்கு துணைபுரியும்.

பெரும்பாலான பௌதிக அபிவிருத்தியின் பகுதிகள் அதிகரித்துவரும் நகரமயமாக்கல் போக்கில் அமையும் அதேவேளை, "திட்டமிடப்பட்ட நகர அபிவிருத்தியானது" ஒரு தெரிவாக இல்லாது, இங்கு காணப்படும் அனைத்து உள்ளூர் பகுதிகளிற்குமான கட்டாய தெரிவாக அமைகின்றது. இது, நகர அபிவிருத்தி அதிகாரசபை சட்டம் 1978 இல் வழங்கப்பட்ட அதிகாரங்களிற்கமைய பிரகடனப்படுத்தப்பட்ட பகுதிகளில், அனைத்து உருவெடுத்துவரும் நகரப் பகுதிகளிற்கும் ஒருங்கிணைந்த வகையில் தயாரிக்கப்பட்டு அமுல்ப்படுத்தப்படும் நகர அபிவிருத்தித் திட்டத்தினூடாக சாத்தியமானதாகும்.

இந்தப் பிராந்தியத்திலுள்ள நெருக்கடிக்குள்ளான நில வளமானது மக்கள் தொகையை குறைப்பதற்கான உபாயங்களைப் பிரயோகிப்பதன் மூலம் பாதுகாக்கப்படமுடியும். அடுத்துவரும் சந்ததியை சேர்ந்த மக்கள் தொகையில் (2020 - 2050) பெரும் பாலானவர்களை, சிறந்த வேலைவாய்ப்புக்கள், கட்டுப்படியான விலையில் பெற்றுக்கொள்ளக்கூடிய வீட்டு வசதிகள் மற்றும் வாழ்வதற்கு ஏதுவான சுற்றாடல் போன்ற வசதிகளை பேணுவதன்மூலம், முன்மொழியப்பட்ட பொருளாதார அபிவிருத்தி வலயங்களின்பால் ஈர்க்கமுடியும்.


நிலப் பாதுகாப்பிற்கு மேலதிகமாக, நன்கு ஒருங்கிணைக்கப்பட்டதும் இணைக்கப் பட்டதுமான மர நடுகை/ மீள்காடாக்கல் நிகழ்ச்சித்திட்டமானது, இங்கு காணப்படும் நீர் வளத்தின் நீண்டகால பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு முக்கியமானதாகும். REDD+ இலங்கை தேசிய REDD+ முதலீட்டு கட்டமைப்பு மற்றும் நடவடிக்கை திட்டம் (2017) இனுடைய அமுலாக்கல் இந்த நோக்கை அடைவதற்கான போதுமான அனுசரணையை வழங்கவல்லது.

கடற்கரைப் பாதுகாப்பு வலயம்.

2.1.4 **உரு 2.3 இல் காட்டப்பட்ட, "கடற்கரைப் பாதுகாப்பு வலயமானது"** 1981 ஆம் ஆண்டு கடற்கரைப் பாதுகாப்புச் சட்ட இலக்கம் 57 இல் வழங்கப்பட்ட அதிகாரங்களிற்கு அமைவாக பிரகடனப்படுத்தப்பட்ட கடற்கரைப் பகுதிகளை உள்ளடக்குகின்றது. இலங்கையினுடைய பாரியளவான அபிவிருத்தி நடவடிக்கைகள் இந்தக் கடற்கரைப் பாதுகாப்பு வலயத்தினுள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றபோதிலும், கடலேரிகள், களப்புக்கள், சதுப்பு நிலங்கள் மற்றும் ஆற்றுப்படுக்கை போன்ற சுற்றாடல்கள், மற்றும் ஏனைய கூருணர்வுள்ள சுற்றாடற் பகுதிகளின் பாதுகாப்பு, இவற்றால் உயிர்ப்பல்வகைமைக்கு அளிக்கப்படும் சேவைகள், அப்பகுதிகள் கொண்டுள்ள கவர்ச்சியான தோற்றம் மற்றும் அவற்றுடன் தொடர்புபட்ட பொருளாதார நடவடிக்கைகள் போன்ற பலதரப்பட்ட காரணிகளால் முக்கியத்துவம் பெறுகின்றது. இந்தப் பகுதியில் அடங்கும் பிரதேச செயலாளர் பிரிவுகளின் பட்டியல் பின்னிணைப்பு 02 இல் தரப்பட்டுள்ளது.

கரையோரப் பாதுகாப்புத் திணைக்களமானது இந்தப் பகுதிகளைப் பாதுகாப்பதற்கு தேவையான வல்லமையைக் கொண்டிருப்பதுடன், தேசிய கடற்கரைப் பாதுகாப்புத்

உரு. 3 : உச்சப் பயன்பாடு மற்றும் சிறந்த பயன்பாட்டிற்கு உகந்த பிரதேசங்கள் (அபிவிருத்திக்கான சந்தர்ப்பங்களைக் கொண்ட பகுதிகள்)



**உரு. 4 : கடற்கரைப் பாதுகாப்பு வலயம்**



திட்டமொன்று ஏற்கனவே உருவாக்கப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக புவிச் சரிதவியல் அளவை சுரங்கப் பணியகம் அப்பகுதிகளில் அகழ்வு நடவடிக்கைகளை கட்டுப்படுத்துவதில் பாரிய பங்கை வகிப்பதுடன், மத்திய சுற்றாடல் அதிகார சபையானது கடற்கரை சுற்றாடல் தொகுதிகளைப் பாதிக்கும் நடவடிக்கைகளை சரிசெய்வதற்கான அதிகாரங்களைக் கொண்டுள்ளதுடன், ஒருங்கிணைக்கப்பட்ட நகர அபிவிருத்தித் திட்டமானது சுற்றுலா, மீன்பிடி, பொழுதுபோக்கு மற்றும் துறைமுகம் சார்ந்த நடவடிக்கைகளில் குறைந்தளவான பாதிப்பை கொண்ட பௌதிக அபிவிருத்தியை தெரிவுசெய்வதற்கு வழிவகுக்கும். எவ்வாறாயினும், கரையோரப் பாதுகாப்பு திணைக்களம், மத்திய சுற்றாடல் அதிகார சபை மற்றும் நகர அபிவிருத்தி அதிகாரசபைகளிற்காக தற்போதுள்ள சட்டங்கள் இப்பகுதிகளில் கடுமையாக அமுல்ப்படுத்தப்படவேண்டும்.

*விவசாயப் பாதுகாப்பு வலயம்.*

2.1.5 உரு 2.4 இல் காட்டப்பட்ட, "விவசாய பாதுகாப்பு வலயமானது", 1979ஆம் ஆண்டு 58 ஆம் இலக்க கமநல சேவைச் சட்டமூலத்தின் அடிப்படையில், பிரகடனப்பட்ட, பிரதானமாக விவசாய நடவடிக்கைகளிற்காக பயன்படுத்தப்படும் பகுதிகள் மற்றும் பிரதான நகரமயமாக்கல் திரள் மையங்களிலிருந்து வெளியே காணப்படும் இறப்பர் தெங்குப் பயிர்ச்செய்கை மற்றும் ஏனைய பெருந்தோட்டப் பயிர்ச்செய்கைக்குப் பயன்படுத்தப்படும் பகுதிகளை உள்ளடக்குகின்றது.

மிகவும் முக்கியமான DSD பகுதிகளிற்கான வெவ்வேறு வகையான விவசாயப் பயிர்ச்செய்கைகளின் நிலப்பரப்பு % பின்னிணைப்பு 03 இல் தரப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக, விவசாயப் பாதுகாப்பு வலயத்திற்கு பிரயோகிக்கப்படக்கூடிய சட்டங்களின் பட்டியல் பின்னியைப்பு 04இல் தரப்பட்டுள்ளது.

*நீர்ப் பாதுகாப்பு வலயங்கள்.*

2.1.6 உரு 2.5 இல் காட்டப்பட்ட, "நீர்ப் பாதுகாப்பு வலயமானது", பாரிய குளங்கள், இடைநிலை இணைப்புக் குளங்கள், அடைவுகளைத் தேக்கும் சேமிப்புக் குளங்கள், கிராமங்களிற்கான சிறு குளங்கள், போன்ற உலர் வலயங்களில் பிரதானமாக அமைந்துள்ள, நீரேற்றும் கால்வாய்களுடன் இணைந்த நீரேந்து பிரதேசங்களின் வழியாக அமைந்துள்ள அங்கங்களை உள்ளடக்கிய நீண்ட காலமாகப் பேணப்பட்டுவரும் அருவி விழுதொடர்களைக் கொண்ட பாதிப்புக்களிற்கு உள்ளாகக்கூடிய பகுதிகளை உள்ளடக்குகின்றது. பெரும்பாலும் அனைத்துப் பகுதிகளும் இந்த நீர்த் தொகுதிகளைக் கொண்டிருப்பினும், பின்னிணைப்பு 05இல் குறிப்பிடப்பட்ட நிர்வாக அலகுகள் இது தொடர்பாக அதிகளவு நெருக்கடியை எதிர்நோக்குகின்றன. நீர்ப் பாதுகாப்பு வலயம் தொடர்பான சட்டங்களின் பட்டியல் பின்னிணைப்பு 06இல் பட்டியலிடப்பட்டுள்ளது.

இந்த நீர் நிலைகள் மற்றும் அவற்றின் நீரேந்து பகுதிகளில் மேற்கொள்ளப்படும் பௌதிக அபிவிருத்திகள், தொடர்புபட்ட உள்ளூராட்சி அதிகார சபைகளுடனான ஒருங்கமைப்புடன் தொடர்புபட்ட பிரதேச செயலர் பிரிவுகளினால் கடுமையாக ஒழுங்குபடுத்தப்படவேண்டும்.


*வனப் பாதுகாப்பு வலயம்.*

2.1.7 உரு 2.6 இல் காட்டப்பட்ட, "**இயற்கைப் பாதுகாப்பு வலயமானது**", சதுப்பு நிலங்கள், நீர்ப்பாசனத்திற்கான நீர்த்தேக்கங்களின் நீரேந்து பிரதேசங்கள், அருவிகள் மற்றும் நீர்த்தேக்கங்கள், 1937 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க தாவர மற்றும் விலங்குகள் பாதுகாப்புச் சட்டமும் மற்றும் தொடர்புபட்ட சட்டத் திருத்தங்களால் வழங்கப்பட்ட அதிகாரங்களிற்கமைய வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தினால் பிரகடனப்படுத்தப்பட்ட சரணாலயங்கள் போன்றவற்றை உள்ளடக்குகின்றன. "வனப் பாதுகாப்பு வலயமானது", 1907 ஆம் ஆண்டு 16 ஆம் இலக்கச் சட்டம் மற்றும் அதன் திருத்தச் சட்டங்களின் அதிகாரங்களிற்கு அமைவாக வனப் பாதுகாப்புத் திணைக்களத்தினால் பிரகடனப்படுத்தப்பட்ட வன ஒதுக்கங்களை உள்ளடக்குகின்றது. இயற்கைப் பாதுகாப்பு வலயம் தொடர்பாக நடைமுறையிலுள்ள சட்டங்கள் மற்றும் கொள்கைகளின் பட்டியல் பின்னிணைப்பு 07 இல் தரப்பட்டுள்ளது.


*அபிவிருத்தித் தடப் பிராந்தியங்கள்.*

2.1.8 "**அபிவிருத்தித் தடப் பிராந்தியமானது**", ஒரு தொடர்ச்சியான பிரதான மற்றும் சிறு பொருளாதார நடவடிக்கைத் திரள் மையங்கள் இணையும், முன்நோக்கிய மற்றும் பின்னிணைந்த இணைப்புக்களின் ஊடாக பரஸ்பரம் ஒன்றுடன் ஒன்று அவற்றின் நிலைப்புத் தன்மைக்கான பலத்தினை வழங்கும் இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலை கைத்தொழில் அபிவிருத்தி துறைகளை உள்ளடக்கிய, பௌதிக, பொருளாதார, சமூக உட்கட்டமைப்புக்களின் ஒருங்கிணைந்த வலையமைப்பின்மூலம், வாழ்வதற்கும், வேலைசெய்வதற்குமான சௌகரியமான சேவைகளை கொண்டுள்ள, ஒப்பீட்டளவில் உயரளவான செறிவுடைய மக்கள் தொகையைக் கொண்ட திரண்ட நகரமயமாக்கல் வசதிகளை கொண்டுள்ள, நேர்கோட்டில் அமையும் புவியியல் அம்சமாகும்.


உரு 5 : விவசாயப் பாதுகாப்பு வலயம்



**உரு. 6 : நீர் பாதுகாப்பு வலயம்**



உரு. 7 : இயற்கை பாதுகாப்பு வலயம்/வனப் பாதுகாப்பு வலயம்



உரு 8 இல் காட்டப்பட்ட, இந்த அபிவிருத்தித் தடப் பிராந்தியமானது, கொழும்பு, திருகோணமலை மற்றும் அம்பாந்தோட்டை போன்ற சர்வதேச துறைமுகங்கள், ஒலுவில் மற்றும் யாழ்ப்பாணம் போன்ற சிறு துறைமுகங்கள், கட்டுநாயக்கா, மாத்தளை மற்றும் (முன்மொழியப்பட்ட) கிங்குறாங்கொடை சர்வதேச விமான நிலையங்கள், அதிவேக நெடுஞ்சாலைகள் மற்றும் மேம்படுத்தப்பட்ட புகையிரத போக்குவரத்து இணைப்புகள் போன்ற மூலதனங்களின் பயனாக பிரதானமாக உள்ளூர் வர்த்தகப் பொருட்களின் பெறுமதி சேர் செயற்பாடு மற்றும் ஏற்றுமதி - இறக்குமதி சார்ந்த சர்வதேச விநியோக இணைப்புக்களின் ஊடாக தேசிய பொருளாதாரத்திற்கு உயரளவான பங்களிப்பை செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. ஆனபடியால் அவை, முதலீடுளை ஈர்ப்பதற்கும் வேலை வாய்ப்புக்களை ஏற்படுத்துவதற்குமான பிரதான மூலங்களாகச் செயற்படும்.

கற்கைகளின் முடிவுகளின்படி 2050 ஆம் ஆண்டில், இந்த மக்கள் தொகையில், குறைந்தது 60% ஆனவர்கள் முன்மொழியப்பட்ட நிலம் தொடர்பான கட்டமைப்பினுள் அமைந்த, அபிவிருத்தித் தடப் பிராந்தியத்தில் செறிந்து வாழ்வதற்கான சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றன. இவ்வாறான செறிவாக்கலில் சில பாரிய உட்கட்டமைப்பு வசதிகள், உயர்தரமான நகர வசதிகளை வழங்குதல், மற்றும் நிலைபேறான தன்மையைப் பேணுவதற்கு தேவையான குறைந்தளவான மக்கள் தொகையை பேணுதல் அத்தியாவசியமாக அமைகின்றது.

கிழக்கு-மேற்கு அபிவிருத்தி தடப் பிராந்தியம்.

**2.1.9 கிழக்கு-மேற்கு அபிவிருத்தித் தடப் பிராந்தியமானது**, கொழும்பு மற்றும் திருகோணமலை மாவட்டங்களிற்கு இடையே முன்மொழியப்பட்டுள்ளது. கொழும்பு மற்றும் திருகோணமலைப் பகுதிகளில் காணப்படும் இரண்டு பிரதான துறைமுகங்களை முதலீடாகக் கொண்டு நன்மைகளைப் பெறுவதற்கு, போக்குவரத்து உட்கட்டமைப்பு மற்றும் சாதகமான வாழ்வதற்கு ஏற்ற நிலைமைகளுடன், இலங்கையின் எதிர்கால சனத்தொகையில் குறிப்பிடத்தக்களவான உயர்ந்தளவான பங்கு (அண்ணளவாக 34-40%) முன்மொழியப்பட்ட கிழக்கு - மேற்கு அபிவிருத்தித் தடப் பிராந்தியத்தினுள் குடியமர்த்தப்பட வேண்டும். இந்தத் தடப் பிராந்தியத்தின் அமைவிடம் சார்ந்த பரம்பலானது முன்மொழியப்பட்ட அதிவேக நெடுஞ்சாலை மற்றும் நெடுஞ்சாலை வழியாக அண்ணளவாக 10 கிலோ மீற்றர்கள் (உயர் செறிவு), மற்றும் 10-20 கிலோ மீற்றர் (நடுத்தர செறிவு) மற்றும் 20-30 கிலோ மீற்றர்கள் (மட்டுப்படுத்தப்பட்ட செறிவு) வரை அமையும்.

இந்த அபிவிருத்தித் தடப்பிராந்தியத்தில், கொழும்புப் பகுதியை அண்மித்த அதிகளவான நகர மத்திய நிலையங்களின் திரள் மையமான கொழும்புப் பெருநகர்ப் பிராந்தியமானது, அதிகளவான குடிப்பரம்பல் செறிவாக்கலைக் கொண்ட பகுதியாகத் திகழ்வதுடன், இது மூன்றரை மில்லியன் (3,500,000) குடியிருப்பாளர்களின் வதிவிடமாகத் திகழ்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. ஏனைய பெருநகர்ப் பிராந்தியங்கள், நீர்கொழும்பு (600,000), கம்பகா (700,000), குருநாகல் (1,000,000), தம்புள்ளை (500,000), மற்றும் திருகோணமலை (1,000,000) ஆகிய ஐந்து பிரதான பெருநகர்ப் பிராந்தியம், உள்ளடங்கலாக, பேருவளை, களுத்துறை தொடக்கம் - மத்துகமை, பாணந்துறை தொடக்கம்- கொறணை, மீரிகமை-வரக்காபொலை, பொல்ககவத்தை, அளவை, இப்பாகமுவை, கலேவல்ல, மற்றும் கந்தளை போன்ற, 100,000- 200,000 வரையான மக்கள் தொகையைகொண்ட நகரங்கள் மற்றும் ஒப்பீட்டளவில் இவற்றைவிட குறைவான மக்கள் தொகையை கொண்ட நகரங்களின் தொடரைக்கொண்டமைகின்றது. (அட்டவணை 02)


இந்தத் தடப் பிராந்தியங்களிற்காக இனங்காணப்பட்ட பகுதிகள் 71 பிரதேச செயலாளர் பிரிவுகளைக் கொண்ட (அட்டவணை 01) (தற்போதைய நிர்வாக கட்டமைப்பிற்கு அமைவாக) நாட்டின் மொத்த நிலப்பரப்பில் 12.3% ஆன பகுதியை (8069 $km^2$) உள்ளடக்குகின்றது.

வடக்கு அபிவிருத்தித் தடப் பிராந்தியம்.

**2.1.10 வடக்கு அபிவிருத்தித் தடப் பிராந்தியமானது** ஒரு மில்லியன் இற்கும் மேலதிகமான சனத்தொகையை (1,200,000) கொண்டிருப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. இந்தப் பகுதியில் தற்போது அவதானிக்கப்படும் குறைந்தளவான சனத்தொகை வளர்ச்சி வீதமானது சாத்தியமான 1.2 சதவீத வருடாந்த வளர்ச்சி வீதத்தை எட்டும் சந்தர்ப்பத்தில் மேற்குறிப்பிட்ட எண்ணிக்கையானது 2050 ஆம் ஆண்டளவில் எட்டப்பட முடியும். (அட்டவணை 02)

இந்தத் தடப்பிராந்தியமானது, காலி, மாத்தறை மற்றும் அம்பாந்தோட்டைப் பகுதிகளை மையமாகக் கொண்ட பெருநகர்ப் பிராந்தியத்துடன் கூடிய தங்காலை, எம்பிலிப்பிட்டி, மற்றும் திஸ்ஸமகராமை ஆகிய பிரதான நகரங்கள் மற்றும் ஒப்பீட்டளவில்

**உரு 8 : முன்மொழியப்பட்ட நகராக்கற் திரள்வுக்கோலம் - 2050**



குறைந்தளவான சனத்தொகையைக் கொண்டுள்ள ஏனைய சிறு நகரங்களை உள்ளடக்குகின்றது. தற்போதைய வளர்ச்சி வீதமானது 2050 ஆம் ஆண்டளவில் எதிர்பார்க்கப்படும் சனத்தொகையை எட்டுவதற்கு போதுமானதாக அமைகின்றது. இந்தத் தடப் பிராந்தியமானது 15 பிரதேச செயலாளர் பிரிவுகளை உள்ளடக்குவதுடன் நாட்டின் மொத்தப் பரப்பளவில் 2.9% (1925km$^2$) நிலப்பரப்பை கொண்டமைந்துள்ளது.

2.1.11 **தெற்கு அபிவிருத்தித் தடப்பிராந்தியமானது**, தற்போதுள்ள 1.0 என்ற வருடாந்த சராசரி வளர்ச்சி வீதத்தினடிப்படையில் வதிவிட சனத்தொகையில் அண்ணளவாக **ஒன்றரை மில்லியனை (1,700,000)** எட்டுவதற்கான வாய்ப்புக்களைக் கொண்டுள்ளது. (அட்டவணை 02)

தெற்கு அபிவிருத்தித் தடப் பிராந்தியம்.

திருகோணமலைப் பகுதியானது 300,000 சனத்தொகையைக் கொண்ட பெருநகர்ப் பிராந்தியமாக அபிவிருத்திசெய்யப்படுவதற்கு முன்மொழியப்படுவதுடன், வாளைச் சேனை, கல்முனை, அம்பாறை, மற்றும் அக்கரைப்பற்றுப் பகுதிகள் 250,000 மற்றும் 100,000 வரையான மக்கள் தொகையைக் கொண்ட நகரங்களாக, ஏனைய "சிறு நகரங்களை" உள்ளடக்கி அபிவிருத்தி செய்யப்படுவதற்கு முன்மொழியப்படுகின்றது.

தெற்குத் தடப் பிராந்தியமானது 32 பிரதேச செயலாளர் பிரிவுகளை (அட்டவணை 01) உள்ளடக்குவதுடன் நாட்டின் மொத்தப் பரப்பளவில் 3.4% (2221km$^2$) நிலப்பரப்பை கொண்டமைந்துள்ளது. (அட்டவணை 02)

2.1.12 **கிழக்கு அபிவிருத்தித் தடப் பிராந்தியமானது**, இதனுடைய தற்போதைய வருடாந்த வளர்ச்சி வீதமான 1.0 என்ற அளவிலிருந்து சற்று அதிகமான வளர்ச்சி வீதத்தை உள்ளடக்குவதன் மூலம் **ஒரு மில்லியனிற்கும்** கூடுதாலன மக்கள் தொகையை **(1,200,00)** எட்ட முடியும். (அட்டவணை 02)

கிழக்கு அபிவிருத்தித் தடப் பிராந்தியம்.

திருகோணமலைப் பகுதியானது 300,000 சனத்தொகையைக் கொண்ட பெருநகர்ப் பிராந்தியமாக அபிவிருத்திசெய்யப்படுவதற்கு முன்மொழியப்படுவதுடன், வாழைச் சேனை, கல்முனை, அம்பாறை, மற்றும் அக்கரைப்பற்றுப் பகுதிகள் 250,000 மற்றும் 100,000 வரையான மக்கள் தொகையைக் கொண்ட நகரங்களாக, ஏனைய "சிறு நகரங்களை" உள்ளடக்கி அபிவிருத்தி செய்யப்படுவதற்கு முன்மொழியப்படுகின்றது. இந்தத் தடப் பிராந்தியமானது 29 பிரதேச செயலாளர் பிரிவுகளை (அட்டவணை 01) உள்ளடக்குவதுடன் நாட்டின் மொத்தப் பரப்பளவில் 4.6% (3021km$^2$) நிலப்பரப்பை கொண்டமைந்துள்ளது. (அட்டவணை 02)

2.1.13 **"பெருநகர்ப் பிராந்தியமானது"** புவியியல் ரீதியாக பாரிய அளவான பொருளாதாரத் திரள் நடவடிக்கைகளைக் கொண்ட, இரண்டாம் நிலை மற்றும் உயர் நிலைத் துறை சார்ந்த வேலைவாய்ப்புக்களை பெறுகின்ற மக்களை உள்ளடக்கும் தனி மையம் அல்லது பல நகரங்களின் தொகுப்பாக அமைந்த நகர வசதிகளைக் கொண்ட சுற்றாடலை உள்ளடக்குகின்றது. இந்தக் கோட்பாட்டிற்கு அமைய பெருநகர்ப் பிராந்தியமானது குறைந்தளவு 500,000 மக்கள் தொகையையும், சராசரி வதிவிட மக்கள் செறிவு சதுரக் கிலோ மீட்டரிற்கு 5,000 இனைவிட அதிகமானதாவும் கொண்டிருக்க வேண்டும்.

**கண்டி பெருநகர்ப் பிராந்தியமானது ஏழு இலட்சம் மக்கள் தொகைக்கான (1,000,000)**(அட்டவணை 02) வசதிகளை வழங்கும் வகையில் முன்மொழியப்படுகின்றது. கண்டிப் பகுதியில் முன்மொழியப்பட்ட பெருநகர்ப் பிராந்தியத்திற்காக இனங்காணப்பட்ட பகுதியானது தற்பொழுது 680,000 மக்கள் தொகையை கொண்டிருப்பதுடன், எதிர்காலத்தில் முன்மொழியப்பட்ட சனத்தொகையிலும் மேலதிகமான சனத்தொகை வளர்ச்சிக்கு முகம்கொடுப்பதற்கான சாத்தியங்களைக் கொண்டிருப்பதனால், பொருத்தமான முகாமைத்துவ நடவடிக்கைகள் பயன்படுத்தப்படாத சந்தர்ப்பங்களில், எதிர்காலத்தில் இப்பகுதி மேலும் அதிக சனத்தொகையை ஈர்க்கும் தன்மையைக் கொண்டுள்ளது.

கண்டி பொருநகர்ப் பிராந்தியம்.

கண்டி பெருநகர் பிராந்தியமானது 8 பிரதேச செயலாளர் பிரிவுகளை (அட்டவணை 01) உள்ளடக்குவதுடன் நாட்டின் மொத்தப் பரப்பளவில் 30.7% (430km$^2$) நிலப்பரப்பை கொண்டமைந்துள்ளது. (அட்டவணை 02)

அநுராதபுர பெருநகர் பிராந்தியம்.

அநுராதபுர பெருநகர் பிராந்தியம்.

**அனுராதபுர பெருநகர்ப் பிராந்தியமானது**, இதனுடைய நேரடித் தாக்கத்தினுள் அமைகின்ற பகுதியினுள் ஐந்து இலட்சம் மக்களிற்கான (500,000) வசதிகளை வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. அனுராதபுர பெருநகர்ப் பிராந்தியத்தில் காணப்படும் தற்போதைய மக்கள் தொகை **311,00 ஆக** அமைவதுடன், வருடாந்த சராசரி வளர்ச்சி வீதத்திலும் அதிகமான 1.6% என்ற வளர்ச்சி வீதத்தில் மேற்குறிப்பிட்ட மக்கள் தொகையை எட்டுவதற்காக வளர்ச்சியடைய வேண்டிய தேவையைக் கொண்டுள்ளது. (அட்டவணை 02)

அனுராதபுர பொருநகர்ப் பிராந்தியமானது 8 பிரதேச செயலாளர் பிரிவுகளை (அட்டவணை 01) உள்ளடக்குவதுடன் நாட்டின் மொத்தப் பரப்பளவில் 2.5% (1670$km^2$) நிலப்பரப்பை கொண்டமைந்துள்ளது. (அட்டவணை 02)

பிரதான நகரங்கள்.

**2.1.14** **"பிரதான நகரங்கள்"** ஒப்பீட்டளவில் உயரளவான பொருளாதார நடவடிக்கைகள், நகர வசதிகள், வதிவிடச் சனத்தொகைகளைக் கொண்டிருப்பதுன், உயரளவான விஸ்த்தீரணத்தை உடைய பகுதிக்கான சேவை மத்திய நிலையங்களாக விளங்குகின்றன. இக்கொள்கையின் அடிப்படையில், பிரதான நகரம் ஒன்றானது குறைந்தளவு சனத்தொகையாக 100,000 பேரையும், சராசரி வதிவிட மக்கள் செறிவு சதுரக் கிலோ மீற்றரிற்கு 5,000 இனைவிட கூடியதாகவும் கொண்டிருக்க வேண்டியுள்ளது.

கீழே காட்டப்பட்ட அமைவிடங்கள் தனித்தியங்கும் நடுத்தர நகர வசதிகளை வழங்கும் ஒரு இலட்சத்திலிருந்து இரண்டு இலட்சம் (100,000– 200,000) மக்கள் தொகையைக் கொண்ட அமைவிடங்களாக முன்மொழியப்பட்டுள்ளன (அட்டவணை 02) :

1. மன்னார்
2. முல்லைத்தீவு
3. வவுனியா
4. புத்தளம்
5. பொலன்னறுவை
6. நுவரெலியா
7. இரத்தினபுரி
8. மகியங்கனை
9. வெள்ளவாய

உரு 8 இல் காட்டப்பட்ட **பிரதான நகரங்கள்,** அபிவிருத்தி தடப் பிராந்தியங்கள் மற்றும் இரண்டு பெருநகரப் பிராந்தியங்களிலும் உள்ளடக்கப்படாத எதிர்கால நகர வளர்ச்சியின் பெரும்பாலான பகுதியை உள்ளடக்கும் அதேவேளை, இவ்வாறான பிரதான நகரங்கள் உருவாகாத சந்தர்ப்பத்தில் அவற்றில் உள்ளடக்கப்படவேண்டிய நகர வளர்ச்சியானது எதிர்வரும் 20 வருட காலப்பகுதியில் நாட்டின் அனைத்துப் பகுதியிலும் பரவிச் செல்வதற்கான வாய்ப்பைக் கொண்டுள்ளது. அவை அனைத்தும் உள்ளடங்கலாக 2.6-2.7 மில்லியன் குடியிருப்பாளர்களை தமது சேவைப் புலப் பரப்பளவினுள் கொண்டிருக்கும். எவ்வாறாயினும், நுவரெலியா மற்றும் இரத்தினபுரிப் பகுதிகள் அவற்றின் சுற்றாடல் சார் கூருணர்வுத் தன்மையை கருத்தில் கொண்டு எதிர்காலத்தில் மேலதிக சனத்தொகையை வேறு பகுதிகளை நோக்கி நகர்த்த வேண்டும்.

சிறிய நகரங்கள்.

**2.1.15** முன்றாம் நிலை திரள்சேர் மையம் நகரப் பிராந்தியங்களாக கருதப்படுகின்ற மற்றும் கிராமியப் பகுதிகளை உள்ளடக்குகின்ற பரந்தளவான பகுதிகளில், 50,000 இலும் குறைவான சனத்தொகையை கொண்டமைந்த, கிட்டத்தட்ட இருநூறு நடுத்தர மற்றும் சிறிய அளவான நகரங்கள், நாட்டின் ஏனைய பகுதிகளில் பரந்து காணப்படும் குடியிருப்புக்ளிற்கு அடிப்படை வசதிகளை வளங்குவதற்காக அமைந்திருத்தல் எதிர்பார்க்கப்படுகின்றது.

**2.1.16** இடரீதியான கட்டமைப்பின் **அமுலாக்கலானது**, தொடர்புபட்ட நிறுவனங்களின் ஊடாக கீழே காட்டப்பட்ட நடவடிக்கைளை மேற்கொள்வதன் மூலமாக உறுதிப்படுத்தப்பட வேண்டும் :

1. இத்திட்டத்தால் முன்மொழியப்பட்ட மையங்களில், தொழிற்படையில் இணையும் புதிய தலைமுறைக்காக மிகவும் கவர்ச்சி மிக்க வேலைவாய்ப்பு மற்றும் வர்த்தக வாய்ப்புக்களை (பிரதானமாக உற்பத்தி மற்றும் சேவைத் துறைகளில்) உருவாக்குவதற்கான தந்திரோபாய செயற்திட்டங்களில் முதலிடுதல்.

2. முன்மொழியப்பட்ட நகரமயமாக்கல் திரள் மையங்களில் குடியிருப்புக்களை அபிவிருத்தி செய்வதற்காக தெரிவுசெய்யப்பட்ட, கட்டுப்படியான விலையில் நிலம்/ வீட்டுவசதி மற்றும் நகர உட்கட்டமைப்புக்களை (விசேடமாக நீர்வழங்கல் மற்றும் பொதுப்போக்குவரத்து வசதிகள்) பெற்றுக்கொள்வதற்கான சந்தர்ப்பங்களை அதிகரித்தல்.

3. இந்தத் திட்டத்தில் முன்மொழியப்பட்ட பிரதான நகரப் பிராந்திகங்களில் உயர் சேவைத்திறன் வாய்ந்த சமூக உட்கட்டமைப்புக்களை வழங்குதல் (பிரதானமாக கனிஷ்ட மற்றும் இடைநிலைப் பாடசாலைகள், உயர்தர சுகாதார வசதிகள் மற்றும் பொழுதுபோக்கு வசதிகள்).

**2.2 நகர அபிவிருத்தி உபாயமார்க்கம்**

நகர அபிவிருத்தி உபாயமார்க்கம்.

**2.2.1** நகர அபிவிருத்தி உபாயமார்க்கத்தின் குறிக்கோளானது நகரப் பகுதிகளை விரிவான அபிவிருத்தி வழிகாட்டிகளினூடாக ஒழுங்குபடுத்துவதும் மேம்படுத்துவதும் ஆகும். நகர அபிவிருத்தி அதிகார சபை மற்றும் ஏனைய நிறுவனங்களினால் தயாரிக்கப்படும் நகர அபிவிருத்தி திட்டங்கள் கீழே காட்டப்பட்ட அம்சங்களை கண்டிப்பாக கவனத்திற் கொள்ளவேண்டும்.

**2.2.1.1 கவர்ச்சிகரமானதும் வாழ்வதற்கு ஏதுவானதுமான காரணிகள்.-** நகரப் பிராந்தியங்களின் சுற்றாடலானது வாழ்வதற்கும், வேலை செய்வதற்கும், பொழுதுபோக்கு நடவடிக்கைகளிற்கும் சாதகமான சூழ்நிலையைக் கொண்டிருக்க வேண்டியுள்ளது. பெரும்பாலான நகரச் சுற்றாடல்களில் காணப்படும் வெப்ப மண்டல காலநிலைகள் கவனமான முறையில் கையாளப்படவேண்டும். உயரளவான பகல்நேர வெளிச்சம், நிலையான வெப்பநிலை மற்றும் ஈரப்பதன் போன்ற சாதகமான காரணிகளுடன், அதிகளவான சூரிய வெப்பம், மற்றும் கடுமையான மழைவீழ்சியை ஏற்படுத்தும் காலநிலை போன்ற சவாலான அம்சங்கள், பொருத்தமான நகரத் திட்டமிடல் மற்றும் நகர வடிவமைப்புக்களின் ஊடாக இரம்மியமானதும் வாழ்வதற்கு ஏதுவான சௌகரியம் மிக்கதுமான சுற்றாடலை உருவாக்குவதற்காக கவனத்திற் கொள்ளப்பட வேண்டும்.

**2.2.1.2 பாதுகாக்கப்பட்ட பிரதேசம்.-** வெள்ளப்பெருக்கு, மண்சரிவு, கடலரிப்பு போன்ற வெளியக காரணிகள் மற்றும் சாலை விபத்துக்கள், பொது மக்களிற்கான இடையூறு போன்ற உள்ளக குறைபாடுகள், தொற்று நோய்களின் பரவல் போன்ற பாதிப்புக்கள், நகரப் பிராந்தியங்களிற்கான திட்டமிடலில் கவனத்திற் கொள்ளப்படவேண்டிய அம்சங்களாகும். சிறுவர்கள், மாற்றுத்திறனாளிகள் மற்றும் வயோதிபர்களிற்கான பாதுகாப்பான பௌதிக சுற்றாடல் அமைப்பிற்காக விசேட கவனம் செலுத்தப்படவேண்டும். பாதுகாப்பு அம்சங்களிற்கு மேலதிகமாக திருட்டு, கொள்ளை, குற்றச் செயல்கள் மற்றும் பயங்கரவாதச் செயற்பாடுகளிலிருந்து பாதுகாப்பதற்கான தேவைப்பாடுகளும் பௌதிக மற்றும் பௌதிக அம்சங்களற்ற வழிமுறைகளின்மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டிய தேவைப்பாடுகளாக அமைகின்றன.

**2.2.1.3 திறன் மற்றும் சௌகரியமான வசதிகள்.-** நாளாந்த செயற்பாடுகளுடன் தொடர்புபட்ட தகவல்களை இலகுவாக பெற்றுக்கொள்ளல், வெவ்வேறு அரச நிறுவனங்களினால் வழங்கப்படும் பொதுமக்கள் சேவைகளின் நம்பகத் தன்மை, மற்றும் நகர வசதிகளை பயன்படுத்துவதற்கான சௌகரியத் தன்மை போன்றவை நகரப் பிராந்தியமொன்றை திறன் மிக்கதாக மாற்றுகின்றது. தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியானது திறன் சேவைகள் ஊடாக விரைவானதும் நம்பகத் தன்மை உடையதுமான தகவல்களை வழங்கக்கூடியதாக அமைந்திருப்பினும், அவற்றின் விநியோகம் அதற்காக நியமிக்கப்பட்ட தொழிற் தொகுதி மற்றும் நபரில் தங்கியுள்ளது. இவ்வாறான தொகுதிகளிற்கான பிரதான பங்களிப்பு பௌதிகக் கட்டமைப்பு சாராததாக அமைந்திருப்பினும், பௌதிகச் சுற்றாடலானது தேவையான பல்வகைத் திறன்களுடன் வழங்கப்படும் சந்தர்ப்பங்களில் அவ்வாறான வசதிகளின் உத்தரவாதமளிக்கப்பட்ட பாவனைக்கு உறுதுணையாக அமைகின்றது.

**2.2.1.4 பசுமையானதும் நிலைபேறானதுமான சூழல்.**- மிகவும் பொருத்தமான நிலத்தின் தெரிவு, பாதுகாப்பானதும் நம்பகத்தன்மை உடையதுமான கட்டுமான முறைகளைப் பயன்படுத்தல், கட்டுமானம் மற்றும் பாவனைக் காலங்களில் நீரினைச் சேமித்தல், மீளாக்கக்கூடிய சத்தியின் பாவனை, பொருத்தமான மூலப்பொருட்களின் கொள்ளளவில் உச்சப்பயன்பாடு, உஸ்ணமான காலநிலைகளிற்கு முகம்கொடுத்தல், செயற்திறன் மிக்க உபகரணங்களின் பாவனை போன்ற நடவடிக்கைகள் ஒரு கட்டடத்தினை சுற்றாடல் ரீதியாக நிலைபேறானதாகவும் "பசுமையானதாகவும்" மாற்றுகின்றது.

நகர வசதிகள்.

**2.2.2** முன்னேற்றப்பட்ட பொதுப் போக்குவரத்து, செயற்திறன் மிக்கதும், கட்டுப்படியானதும், நம்பகத்தன்மை உடையதுமான பொதுப்போக்குவரத்தானது நகரப் பிராந்தியங்களில் வாழ்வதற்கான ஏதுநிலையை உறுதிப்படுத்துவதற்கான முக்கியமான காரணியாக அமைகின்றது. ஆனபடியால், பகுதி 2.1 இனுயை அறிக்கையில் முன்மொழியப்பட்டதும் சிறப்பான கவனம் செலுத்தப்பட்டதுமான 2025 ஆம் ஆண்டிற்கான நகரத் திரள்வுச் செயற்பாட்டிற்கு முக்கியத்துவம் வாய்ந்த நாடு தழுவிய பொதுப் போக்குவரத்து சேவையை மேம்படுத்துவதற்காக, மீள ஒழுங்கமைத்தல், போக்குவரத்து ஊடகங்களை ஒன்றிணைத்தல் மற்றும் அதி நவீன பயணிகள் சேவைகளுடன் கூடிய செயற்பாட்டு பொறிமுறைத் தொகுதியை ஒழுங்கமைத்தல் போன்ற செயற்பாடுகளிற்கான முதலீடு முக்கியத்துவம் பெறுகின்றது.

கொழும்புப் பெருநகர்ப் பிராந்தியம் தவிர்ந்த ஏனைய பெருநகர்ப் பிராந்தியங்கள் மற்றும் நகரங்களின் வதிவிடச் சனத்தொகையின் அளவானது ஒரு மில்லியனைக்கூட எட்டாத நிலையில், பொதுமக்கள் போக்குவரத்திற்காக அதியுயர் தொழில்நுட்பம் வாய்ந்த கட்டமைப்புக்களில் அதிகளவான பணத்தினை முதலீடுசெய்தல் பொருளாதார ரீதியில் சாத்தியமற்றதாக அமைகின்றது. பெரும்பாலான நகர்ப் புறங்களில், 2030 ஆம் ஆண்டு வரை, உள்ளூர் பொதுமக்கள் போக்குவரத்து தேவைகள், தற்போதுள்ள பேருந்துப் போக்குவரத்தை மேம்படுத்துவதன் மூலம் சிறந்தமுறையில் பூர்த்தி செய்யப்படுவதற்கான வாய்ப்புக்கள் உள்ளன. எவ்வாறாயினும், அவற்றின் செயற்பாடுகள் கடுமையான விதிமுறைகளினால் ஒழுங்குபடுத்தப்படவேண்டியுள்ளதுடன், பேருந்துகள் மற்றும் பேருந்துத் தரிப்பிடங்கள் சிறந்த சௌகரியம் மிக்க வசதிகளுடன் அமைக்கப்படுவதுடன், தன்னியக்க பேருந்துக் கட்டணம் செலுத்தும் முறை, தகவல் அறிக்கைப் பலகைகள் போன்ற வசதிகளுடன் வினைத்திறனானதும் செலவு குறைவானதுமான பயணிகளைக் கவரக்கூடிய சேவை அம்சங்களை உள்ளடக்குவது முக்கியமானதாகும்.

முன்மொழியப்பட்ட அபிவிருத்தி தடப் பிராந்தியத்தியங்களினுள், புகையிரதப் போக்கு வரத்தானது பொருளாதார ரீதியில் அதிக வினைத்திறனானதாகவும் சுற்றாடல் ரீதியில் நிலைபேறானதுமான நகரங்களிற்கு இடையேயான பயணிகள் மற்றும் சரக்குப் போக்குவரத்திற்கான சிறந்த தெரிவாக அமைகின்றது.

**2.2.3** உயர்தர அடிப்படை வசதிகள், நகர அபிவிருத்தியை துரிதப்படுத்துவதற்காகவும், உபய மார்க்க முதலீடுகளை ஏற்படுத்துவதற்காகவும், வழங்கப்பட வேண்டும். தற்போதுள்ள நீர்வழங்கல் செயற்திட்டங்களின் திறனை அதிகரித்தல், வடிகாலமைப்புக்களை மேம்படுத்தல், நிலத்தடி கழிவு நீர் வடிகாலமைப்புக்களை அறிமுகப்படுத்தல், மின்சார வலையமைப்பை மேம்படுத்தல், தீயணைப்பு சேவைகளை அறிமுகப்படுத்தல், போன்ற வசதிகள், சுயாதீனமான இரு பெருநகர் பிராந்தியங்கள் மற்றும் ஒன்பது பிரதான நகரங்கள் உள்ளடங்கலான பெருநகர் பிராந்தியங்கள் மற்றும் அபிவிருத்தித் தடப் பிராந்தியங்களில் அமைந்த நகரப்பகுதிகளில், முன்னுரிமை அடிப்படையில் 2020-2030 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் மேற்கொள்ளல் அவசியமாகின்றது.

முன்மொழியப்பட்ட அபிவிருத்தித் தடப் பிராந்தியத்தியத்தில், தடங்கலற்ற பொருத்த மானதும் ஒழுங்குபடுத்தப்பட்டதுமான விநியோக சேவைகளை உறுதிப்படுத்துவதற்காக, வெவ்வேறு நிலையங்களில் அமைந்திருக்கும் பல மூலங்களினூடாக விநியோகிக்கப்படும், ஒருங்கிணைக்கப்பட்ட நீர் வழங்கல், மின்சாரம் மற்றும் எரிவாயு வலையமைப்புக்களை மேம்படுத்துவதற்கான முன்மொழிவு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**2.2.4** சமூக உட்கட்டமைப்புக்களை மேம்படுத்துதல், உயர்தரம் வாய்ந்த கல்வி வசதி, சுகாதாரம், தொலைத்தொடர்பு மற்றும் பொழுதுபோக்கு அம்சங்களுடன் கூடிய வீட்டு வசதி மற்றும் வேலைவாய்ப்புக்கள், முன்மொழியப்பட்ட நகரப் பிராந்தியங்களிற்கு எதிர்கால சந்ததியினரை வரவளைப்பதற்காக மேம்படுத்தப்படவேண்டிய அவசியமான அம்சங்களாக அமைகின்றன.

இந்த அறிக்கையின் பகுதி 5.2 இல் இனங்காணப்பட்ட பெருநகர் பிராந்தியங்கள் மற்றும் பிரதான நகரங்களின் அமைவிடங்கள் ஏற்கனவே போதுமான கல்வி மற்றும் சுகாதார வசதிகளைக் கொண்டுள்ளமை அவதானிக்கக்கூடியதாக உள்ளது. புதிய வசதிகளை அபிவிருத்தி செய்வதற்குப் பதிலாக, ஏற்கனவே உள்ள வசதிகளின் தரம் மற்றும் கொள்ளளவுகளை மேம்படுத்தலில் முதலிடுவது, உடனடிக் தேவையாக அமைகின்றது. இந்த நிலையில், அதிகளவான மக்கள் செறிவைக் குறைப்பதற்கும், வாகன நெரிசல், பாவனையாளர் பாதுகாப்புப் பிரச்சனைகள் போன்ற காரணங்களின் அடிப்படையிலும், சில நகரப் பகுதிகளில் அமைந்துள்ள பாடசாலைகள் மற்றும் வைத்தியசாலைகள், அவற்றின் தற்போதைய அமைவிடங்களின் பொருத்தப்பாடு தொடர்பான போதுமான ஆய்வுகளின் அடிப்படையில் வேறு இடங்களிற்கு இடம் மாற்றப்பட வேண்டிய தேவைப்பாட்டினைக் கொண்டுள்ளன.

**2.2.5** நகரப் பகுதிகளை மிகவும் கவர்ச்சிமிக்கதாக உருவாக்குவதற்காக, **மேம்படுத்தப்பட்ட பொது இடங்களை**, உருவாக்குவதற்கான முன்னுரிமை அனைத்து நகர அபிவிருத்தி செயற்திட்டங்களிலும் வழங்கப்படவேண்டும். பாதசாரிகள் பயன்பாட்டுப் பகுதிகளை மேம்படுத்தல் மற்றும் அவற்றிற்கான விதிமுறைகளை உருவாக்குதல் போன்ற உபாயமார்க்கங்களின் ஊடாக, நகர்ப் பிராந்தியங்கள் மிகவும் கவர்ச்சிமிக்கதாக மாற்றப்படமுடியும். இலங்கையின் நகர்ப் புறங்களில் காணப்படும், வாகன நெரிசல், சட்டவிரோத வாகனத்தரிப்பு, சாலை விபத்துக்கள் போன்ற பல பிரச்சனைகளிற்கு நடை பாவனை சிறந்த ஒரு தீர்வாகக் காணப்படுகின்றது. இவ்வாறான நிலைவரங்களைக் கட்டுப்படுத்துவதற்கு நகரத் திட்டமிடலாளர்கள் மற்றும் கொள்கை வகுப்பாளர்களின் மனப்பாங்கில் மாற்றம் ஏற்படுவது முக்கியமானதாகும். முன்னுரிமை நடவடிக்கையாக, வாகனப் போக்குவரத்தை மேம்படுத்துவதற்கு கொடுக்கப்படும் முக்கியத்துவத்திற்குப் பதிலாக பாதசாரிகளிற்கு சௌகரியமான வசதிகளை உருவாக்குதல் எதிர்கால நகரத் திட்டமிடலின் முக்கிய குறிக்கோளாக கருதப்படமுடியும். பாதசாரிகள் பாவனைப் பகுதிகள் வெப்ப மண்டல காலநிலைக்குப் பொருத்தமானதாகவும் அதற்கு உகந்த வடிவமைப்புக்களை கொண்டதாகவும் அமைக்கப்படமுடியும்.

**2.2.6** அதிகரிக்கப்பட்ட பொழுதுபோக்கு வசதிகள் உள்ளூர் மட்டத்தில், குடியிருப்பாளர்களின் அதிகரித்துவரும் நகரப்புற வாழ்க்கைமுறையில், பொழுதுபோக்கு அம்சங்கள் மீதான அதிகரித்துவரும் கேள்வியை ஈடுசெய்யக்கூடிய வகையில் உருவாக்கப்படவேண்டும். ஆரோக்கியமான நாட்டினை உருவாக்குவதற்கும் சுகாதாரச் செலவினங்களைக் குறைப்பதற்கும் பொழுதுபோக்கு வசதிகள் இன்றியமையாததாக விளங்குகின்றன.

பொதுவான தர நியமமாக 1,000 மக்களிற்கு ஒரு கெக்டயர் விஸ்த்தீரணமுடைய பொழுதுபோக்குப் பகுதிகள் தேவைப்படுகின்ற போதிலும், தற்போதைய நகர அபிவிருத்தி செயற்திட்டங்களில் இவ்வாறான அம்சங்கள் அரிதாகவே உள்ளடக்கப்பட்டுள்ளன. எவ்வாறாயினும், நகர்ப் பிராந்தியங்களில் காணப்படும் அபிவிருத்திக்கான நிலத்தின் பற்றாக்குறைக்கு மத்தியில் பொழுது போக்கு அம்சங்களிற்காக பெருமளவான திறந்தவெளிகளை ஒதுக்குவது சவால்மிக்க அம்சமாகக் காணப்படுகின்றது. இந்த நிலையில், கால்வாய்களிற்கான ஒதுக்கப்பகுதிகள், அருவிகளின் கரைகள், சதுப்பு நிலங்கள், மற்றும் கடற்கரைகளை போதுமான வசதிகளுடன் சிறந்த முகாமைத்துவத்தின் கீழ் இப்பாவனைகளிற்காக பயன்படுத்துதல், பொதுமக்களிற்கான திறந்த வெளிகளை வழங்குவதில் காணப்படும் தட்டுப்பாடுகளை நிவர்த்திசெய்வதற்கான புத்தாக்க முயற்சியாக அமையும். இதற்குச் சமாந்தரமாக, குடியிருப்புப் பகுதிகளில் அகலமான வீதிகளை பேணுவதன் மூலம் இவற்றை சிறுவர்கள் விளையாடுவதற்கான பகுதிகளாகவும் பொதுமக்கள் கூடுகின்ற இடமாகவும் பயன்படுத்துவதன் மூலம் பொதுத் திறந்த வெளிகளிற்கான பதிலீடாக இவற்றை மாற்றி அமைக்கக் கூடிய வாய்ப்புக்கள் காணப்படும் அதேவேளை "அயலவர்கள்" அல்லது "வீதிச் சமூகத்திற்கு" இடையேயான உறவுகளைப் பலப்படுத்த உதவியாக அமைகின்றன.

**2.2.7** **பௌதிக அபிவிருத்திக்காக அதிகளவான பிரதேசங்கள்** ஒதுக்கப்படுவதன் மூலமாக, தெரிவுசெய்யப்பட்ட நகரப் பிராந்தியங்களில் செறிவான அபிவிருத்திகளைச் செய்வதற்கு அதிகளவான நிலப்பரப்பு விகிதாசாரத்துடன் (FAR), உயர் செறிவானதும்

கலப்பு அபிவிருத்திகளை கொண்டதுமான செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு, விரிவான அபிவிருத்தி வழிகாட்டற் திட்டங்கள் தேவைப்படுகின்றன. குறிப்பிடப்பட்ட நகர அபிவிருத்தித் தடப் பிராந்தியம், மற்றும் பிரதான நகரங்களிற்காக, நகர அபிவிருத்தி அதிகார சபையினால் தயாரிக்கப்படும் அபிவிருத்தித் திட்டங்கள், அவ்வாறான நகர்ப் புறங்களில் காணப்படும் பொருளாதார நடவடிக்கைகள் மற்றும் அப்பகுதிகளிற்காக எதிர்பார்க்கப்படும் மக்கள் செறிவுகளிற்கு ஏற்ற கேள்விகளைப் பூர்த்திசெய்யும் வகையில் பொருத்தமான செறிவுகளையும் நிலப்பரப்பளவிற்கான விகிதாசாரங்களை தீர்மானிப்பதில் கவனம் செலுத்தவேண்டியுள்ளது.

*2.2.8* **வேலைவாய்ப்பிற்கான அதிகளவு தெரிவுகள்** இவ்வாறான பகுதிகளில் எண்ணிக் கையில் அதிகரிக்கப்பட்ட நேரடியானதும் மறைமுகமானதுமான வேலை வாய்ப்புக்களை ஏற்படுத்துவதற்காக இவற்றிற்கு பொருத்தமான தொழிற்சாலைகளை அமைப்பதற்கு தேவையான நிலம் மற்றும் ஏனைய உட்கட்டுமான வசதிகளை ஏற்படுத்துவதன் மூலமாக உருவாக்கப்படவேண்டும்.

*2.2.9* ***திறன் வசதிகள்*** உள்நாட்டு மற்றும் சர்வதேச ரீதியில் மக்களிற்கு இடையேயான இணைக்புக்களை மேம்படுத்துவதற்கு உயர்தர தொடர்பாடல் உட்கட்டமைப்பு வசதிகள் தேவைப்படுகின்றன. தற்போது செயற்படுத்தப்பட்டு வரும் திறன் நகரங்களிற்கான (Smart Cities) கொள்கையானது இது தொடர்பான முற்போக்கான தெரிவாக அமைகின்றது. துரித கதியில் வளர்ந்துவரும் தொலைத்தொடர்பு தொழில்நுட்பம் மற்றும் இலத்திரனியல் உட்கட்டமைப்பு வசதிகள் காரணமாக, எதிர்காலத்தில், தகவல்களை இலகுவாகப் பெற்றுக்கொள்ளல், தன்னியக்க பொதுமக்கள் சேவைகள், அரச செயற்பாடுகளில் அதிகளவான வெளிப்படைத் தன்மை போன்ற திறன் உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொள்ளுதல் செலவு குறைந்த அம்சமாக அமைகின்றது.

இந்த நிலையில், அனைத்து நான்கு பொருளாதாரத் தடப் பிராந்தியங்கள், பெருநகர் பிராந்தியங்கள் மற்றும் பிரதான நகரங்களிற்கான திறன் சுற்றாடலை 2020-2050 காலப்பகுதிகளில் நிறுவுதல் முன்மொழியப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து இவ்வாறான வசதிகள் ஏனைய பகுதிகளிற்கும் விஸ்த்தரிக்கப்பட வேண்டும்.

*2.2.10* **பசுமையான கட்டமைக்கப்பட்ட சூழலானது** அனைத்து பௌதிக அபிவிருத்திக்குமான கருதுகோளாக அமையவேண்டும். நகர்ப் பிராந்தியங்களில் சுற்றாடல் ரீதியான நிலைபேறான தன்மையை உறுதிப்படுத்துவதற்காக, 2020 ஆண்டிலிருந்து, கட்டிடங்கள், சாலைகள், பொழுதுபோக்கு வசதிகள் போன்ற அனைத்து பௌதிக அபிவிருத்தியிலும் கட்டாயமாக பசுமைக் கட்டுமான வழிமுறைகள் பின்பற்றப்படுதல் முன்மொழியப்படுகின்து.

நகர அபிவிருத்திச் செயற்பாட்டிற்கான திட்டமிடல் மற்றும் அமுலாக்கல்களின் பயன்படுத்தப்பட வேண்டிய பொதுவான கொள்கையாக கீழே தரப்பட்டுள்ள உபாயமார்க்கங்கள் பரிந்துரைக்கப்படுகின்றன:

1. தெரிவு செய்யப்பட்ட அமைவிடங்களில் திறந்த குளங்கள், நிலத்தடி நீர்த்தேக்கம் போன்ற நகர்ப் பிராந்தியம் தழுவிய மழைநீர் சேமிப்பு வசதிகளை நிறுவுதல்.

2. தெரிவு செய்யப்பட்ட உள்ளூராட்சிப் பகுதிகளில் பொருத்தமான வகையில் கட்டிடங்களின் கூரைகளில் சூரியசக்திக் கூரைகளை அமைத்தல்.

3. உற்பத்தி நிலையில் முகாமைசெய்தல், வேறுபடுத்தல், சேகரித்தல் மற்றும் மீழ்சுழற்சிக்கு உட்படுத்தல் போன்றவற்றை உள்ளடக்கும் சமூக அடிப்படையிலான கழிவு முகாமைத்துவ கட்டமைப்பை அனைத்து கூட்டு ஆதன அபிவிருத்திப் பகுதிகளிலும் அறிமுகப்படுத்தல்.

4. தொடர்புபட்ட நகர அபிவிருத்தித் திட்டங்களில் குறிக்கப்பட்டதற்கமைய, நகர்ப் புறங்களில் பேணப்படவேண்டிய குறைந்தபட்ச திறந்த வெளிகள் மற்றும் பசுமைப் பகுதிகளிற்காக ஒதுக்கப்படவேண்டிய நிலப்பரப்புக்களை கடுமையான விதிமுறைகளின் ஊடாக பேணுதல்.

5. நகர அபிவிருத்த அதிகார சபையினால் அமுல்படுத்தப்பட்டுள்ள பசுமை கட்டிட சான்றிதழை அனைத்து வகையான அபிவிருத்தி நடவடிக்கைகளிற்கும் விஸ்தரித்தல்.

6. அனைத்து நகரப் பகுதிகளிலும் காணப்படும் பிரதான வீதிகள் மற்றும் பிரதான பொது இடங்களையும் உள்நாட்டு மர இனங்களை நடுவதன் மூலமாக நிழல்படுத்துவதற்கான நாடளாவிய நிகழ்ச்சித் திட்டமொன்று, நகர அபிவிருத்தி அதிகார சபையினால் அமுல்ப்படுத்தப்படல்.

7. நகர அபிவிருத்தி நடவடிக்கைகளிற்காக கொள்வனவு செய்யப்படும் உபகரணங்கள் மற்றும் பயன்படுத்தப்படும் கருவிகள் மற்றும் அனைத்து செயற்திட்டங்களிற்குமான கேள்விக் கோரல்களில் பசுமை வழிகாட்டல் அம்சங்களை உள்ளடக்குவதை கட்டாயமாக அமுல்ப்படுத்தல்.

போக்குவரத்து அபிவிருத்தி உபாயமார்க்கம்

### 2.3 போக்குவரத்து அபிவிருத்தி

**2.3.1 குறிக்கோள்.**- 2009ஆம் ஆண்டில் அமைச்சரவையால் பிரகடணப்படுத்தப்பட்டதும் தற்போதைய போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சினால் பயன்படுத்தப்பட்டுவருவதுமான தேசிய போக்குவரத்து கொள்கையுடன் இணைந்ததாக, கீழே தரப்பட்ட குறிக்கோள்கள் இத்திட்டத்தினால் முன்மொழியப்பட்டுள்ளன:

**2.3.1.1 முன்நடவடிக்கை அணுகுமுறை.**- இணைப்புக்கள், போக்குவரத்து நகர்வுத் தன்மை மற்றும் பரிமாற்றுத்திறன் போன்றவை, முன்மொழியப்பட்ட நிலப் பாவனை மற்றும் குடியிருப்புக்களின் பரம்பலின் செயற்பாட்டில் செல்வாக்குச் செலுத்தும் பிரதான காரணங்களாக அமைகின்றன. ஆனபடியால், போக்குவரத்திற்கான திட்டமிடலானது, நிலப்பாவனைக்கான திட்டமிடலுடன் ஒன்றிணைந்ததாக செயற்படுத்தப்படுதல், ஆரோக்கியமான நிலப் பாவனை மற்றும் நிலைபேறான உட்கட்டமைப்புக்களின் அபிவிருத்தி போன்றவற்றிற்கு முக்கியமாக அமைகின்றது. நிலைபேறான போக்குவரத்துத் திட்டமிடலானது: **தவிர்த்தல், மாற்றுதல்** மற்றும் **மேம்படுத்துதல்** ஆகிய மூன்று பிரதான தூண்களில் தங்கியிருப்பதுடன் இது, தற்போதைய கேள்விக்கு நேரடியாக தீர்வு தேடும் வகையிலும், போக்குவரத்துத் துறையில் வினைத்திறனற்ற முதலீடுகளை மேற்கொள்வதைத் தவிர்த்து, எதிர்கால நிலப்பாவனை மற்றும் குடியிருப்புக்களின் பரம்பலை பொருத்தமான திசையில் வழிநடத்துவதற்கான முன்கூட்டிய நடவடிக்கையாகத் திகழ்வதுடன் நின்றுவிடாது, தனியார் துறை போக்குவரத்து ஊடகங்களின் பாவனையிலிருந்து பொதுப் போக்குவரத்து வசதிகளை பயன்படுத்துவதற்கான சந்தர்ப்பங்களையும் உருவாக்கவல்லது.

**2.3.1.2 தற்போதுள்ள உட்கட்டமைப்பு வசதிகளை உச்சமாகப் பயன்படுத்தல்.**- பயணிகள் மற்றும் சரக்குப் போக்குவரத்து ஊடகங்கள் மற்றும் அவற்றிற் கான உட்கட்டமைப்புக்கள் அதிகளவான முதலீட்டுத் தேவையைக் கொண்டிருப்ப துடன், நாட்டினுடைய தற்போதைய பொருளாதாரச் சூழ்நிலை அடுத்துவரும் இருபது தொடக்கம் முப்பது வருடக் காலப்பகுதிக்கு பாரிய கடன் சுமையை விட்டுச் சென்றுள்ளமையால், தற்போதுள்ள போக்குவரத்து உட்கட்டமைப்பு வசதிகளை குறைந்தளவான மாற்றங்களிற்கு உட்படுத்துவதன் மூலம் சிறந்த பலன்களைப் பெறுதல், போக்குவரத்து உட்கட்டமைப்புக்களை வழங்குவதற்கான மிகவும் பொருத்தமான தீர்வாக அமைகின்றது.

**2.3.1.3 பொருளாதார ரீதியாக வினைத்திறனுடைய செயற்திட்டங்களில் முதலீடு.**- துரிதகதியில் வளர்ந்துவரும் தொழில்நுட்பம் மற்றும் மாறிவரும் வாழ்க்கை முறைக்கமைய, போக்குவரத்துச் செயற்பாடு மற்றும் பயணிகள் மற்றும் சரக்குப் போக்குவரத்திற்காக பயன்படுத்தப்படும் போக்குவரத்து ஊடகங்களிற்கான தெரிவுகள் இத்திட்டத்திற்கான கால எல்லையினுள் மாற்றங்களிற்கு உட்படுவதற்கான சந்தர்ப்பங்கள் உள்ளமையால், அனைத்து முதலீடுகளும் அவ்வாறான மாற்றங்களை எதிர்நோக்கும் சந்தர்ப்பங்களில் சிறந்த வசதிகள் மற்றும் அவற்றின் ஊடாக சிறந்த நன்மைகளைப் பெற்றுக்கொள்வதில் குறிப்பிடத்தக்களவான அபாயங்களை எதிர்நோக்குகின்றன. ஆனபடியால், போக்குவரத்து அபிவிருத்தியில் முதலீடுகளை மேற்கொள்வதற்கான முடிவுகளை எடுக்கும் சந்தர்ப்பங்களில், அவ்வாறான செயற்திட்டங்களை உருவாக்குவதற்கு முன்னதாக விரிவான சாத்தியக்கூற்றுக் கற்கைகளிற்கு உட்படுத்தப்பட வேண்டியுள்ளது.

***2.3.1.4 சுற்றாடல் ரீதியில் நிலைபேறான தெரிவுகளை மேற்கொள்ளல்.–*** *போக்குவரத்துத் துறையானது இலங்கையில் பச்சை இல்ல வாயுக்களின் வெளியீட்டில் பிரதான அங்கம் வகிக்கின்றது. சுற்றாடலின் நிலைபேறான பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக நிர்ணயிக்கப்பட்ட எல்லையினுள் பச்சை இல்ல வாயுக்களின் வெளியீட்டினைக் கட்டுப்படுத்துவதற்கு, தனியார் போக்குவரத்துப் பாவனைக்குப் பதிலாக பொதுப் போக்குவரத்து சேவை களை ஊக்கப்படுத்துவதற்கான கொள்கைகளை எதிர்கால அபிவிருத்தியில் உள்ளடக்க வேண்டியுள்ளது. கையிருப்பிலுள்ள பொதுப் போக்குவரத்து ஊடகங்களில் புகையிரத போக்குவரத்தானது சிறந்த தெரிவாக அமைகின்றது.*

***2.3.1.5 வினைத்திறன் மற்றும் சௌகரியங்களிற்காக அதிநவீன தொழில் நுட்பத்தினை அறிமுகப்படுத்தல்.–*** *பொருளாதார ரீதியான சாத்தியக்கூற்றுத் தன்மையானது கவனத்தில் எடுக்கப்படும் அதேவேளை, போக்குவரத்து ஊடகங்களின் தெரிவில் பாதுகாப்பு மற்றும் நம்பகத்தன்மை போன்ற அம்சங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. ஆனபடியால், வாகனங்களை தன்னியக்கச் செயற்பாட்டிற்கு உட்படுத்தல், இலத்திரனியல் போக்குவரத்து சீட்டுக்களை வழங்கல், போக்குவரத்து ஊடகங்களை ஒன்றுடன் ஒன்று ஒருங்கிணைத்தல் போன்ற அதிநவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி அவற்றின் செயற்திறனை அதிகரிப்பதுடன், எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பயணிகள் மற்றும் சரக்குப் போக்குவரத்தில் பாவனையாளர்களிற்கான சௌகரியங்களிற்கு பாதிப்பிற்கு உள்ளாகாத வகையில் மேம்படுத்தலிற்கு உட்படுத்தப்படமுடியும்.*

***2.3.1.6 சமத்துவம் மற்றும் முதலீடுகளில் சமமான சந்தர்ப்பங்கள்.–*** *பிராந்தியங்களிற்கு இடையேயான இணைப்புக்கள் மற்றும் தொடக்கத்திலிருந்து இறுதி மைலிற்கு இடையேயாக இணைப்புக்கள் சமமான முறையில் கவனத்திற் கொள்ளப்படமுடியும். பிராந்தியங்களிற்கு இடையேயான பாரியளவான போக்குவரத்துக் கட்டமைப்பில் மேற்கொள்ளப்படும் பலமான முதலீடுகள், உள்ளூர் மற்றும் நகரத்திற்கு உட்பட்ட பகுதிகளிற்கான போக்குவரத்து வசதிகளின் மீது கவனம் செலுத்தப்படாது மேற்கொள் ளப்படும் சந்தர்ப்பங்களில் தேவைப்படும் நன்மைகளை நாட்டிற்கு ஏற்படுத்தப்போவதில்லை. அதேநேரத்தில், முன்னுரிமை கொடுக்கப்படவேண்டிய ஒழுங்கானது: பாதசாரிகள், துவிச்சக்கர வண்டிப் பாவனையாளர்கள், மற்றும் மோட்டார் சைக்கிள் பாவனையாளர்களிற்கு அமையவேண்டும். தற்போதைய வீதி அபிவிருத்தி செயற்திட்டங்கள் போக்குவரத்துக் கொள்கையில் வளங்கப்பட்ட முன்னுரிமைகளிற்கு முரணான வகையில், பாதசாரிகள் மற்றும் துவிச்சச்சர வண்டிப் பாவனையாளரிற்கு மிகவும் குறைவான கவனத்தை செலுத்திவருகின்றமை குறிப்பிடத்தக்கது.*

*புகையிரத போக்குவரத்து.*

***2.3.2 புகையிரதப் போக்குவரத்து.–*** *பயன்பாட்டிலுள்ள அனைத்துப் போக்குவரத்து ஊடகங்களிற்கும் மத்தியில், புகையிரதப் போக்குவரத்தானது, பிராந்தியங்களிற்கு இடையேயான பயணிகள் மற்றும் சரக்குப் போக்குவரத்து மற்றும் பாரியளவான நகர் சேர் போக்குவரத்து செயற்பாடுகளிற்கான மிகவும் மலிவான ஊடகமாக கற்கைக ளின் மூலம் இனங்காணப்பட்டுள்ளது. நகரமயமாக்கல் திரள்வு மையங்களாக இனங்காணப்பட்ட பெரும்பாலான பிராந்தியங்கள் ஏற்கனவே புகையிரதப் போக்கு வரத்து மற்றும் அதனுடன் இணைந்த சேவைகளுடன் இணைக்கப்பட்டுள்ளன. ஆனபடியால், நான்கு நகர்த் தடப் பிராந்தியங்களிற்குமான கவர்ச்சிமிக்க பிரதான மான போக்குவரத்து ஊடகமாக அமைவதற்கு புகையிரதப் போக்குவரத்து சேவை எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த எதிர்பார்ப்பை எட்டுவதற்காக, தற்போதைய புகையிரத வலையமைப்பில் குறிப்பிடத்தக்க பாரியளவு மேம்படுத்தற் செயற்பாடு அவசியமாகின்றது.*

*அளுத்கமையிலிருந்து வியாங்கொடை மற்றும் கொழும்பிலிருந்து நீர்கொழும்பு வரையான புகையிரத சேவையை 2025 ஆம் ஆண்டளவில் மின்சார மயமாக்குவதற்கான தீர்மானம் புகையிரத மேம்பாட்டுத் தலைமைத் திட்டத்தில் முன்மொழியப்பட்டுள்ளது. இந்த செயற்திட்டமானது முன்மொழியப்பட்ட கிழக்கு மேற்கு அபிவிருத்தித் தடப்பிராந்தியத்திற்கான வரப்பிரசாதமாக அமையும். இந்த முன்மொழிவை மேலும்*

வினைத்திறனானதாக மாற்றுவதற்கு, மின்சாரமயமாக்கல் செயற்திட்டத்தை 2030ஆம் ஆண்டளவில் குருநாகலிலிருந்து, தம்புள்ளை ஊடாக கபறணை வரை நீட்சிப்பதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. இந்த முன்மொழிவானது முன்மொழியப்பட்ட தடப் பிராந்திய அபிவிருத்திச் செயற்பாட்டில் முக்கியத்துவம் வாய்ந்த அம்சமாக கருத்திற் கொள்ளப்படுகின்றது. கபறணையிலிருந்து திருகோணமலை வரையான தற்போதைய புகையிரதப் பாதையுடன் கூடிய நீட்சியானது, 2030ஆம் ஆண்டளவில் மின்சாரமயப்படுத்தப்பட்டு மேம்படுத்தப்படுவதன் மூலம் முன்மொழியப்பட்ட கிழக்கு - மேற்கு அபிவிருத்தித் தடப்பிராந்தியங்களிற்கு இடையேயான அதிவேக இணைப்புக்களை உருவாக்க உதவிசெய்யும்.

தெற்கு அபிவிருத்தித் தடப்பிராந்தியத்திற்கான அபிவிருத்திக்கு வசதிசெய்யும் முகமாக, அளுத்கமையிலிருந்து மாத்தறை வரையிலான புகையிரதப் போக்குவரத்து சேவையினை மேம்படுத்தவேண்டி உள்ளது. தற்போது உள்ள முன்மொழிவுகளின் படி இந்த சேவையானது 2030 ஆம் ஆண்டளவில் மாத்தறையிலிருந்து அம்பாந்தோட்டை வரை விஸ்தரிக்கப்பட முடியும்.

வடக்கு நகர அபிவிருத்தித் தடப் பிராந்தியத்தினுள் கிளிநொச்சி மற்றும் காங்கேசந்துறை வரையிலான புகையிரத சேவைகள் 2025ஆம் ஆண்டளவில் மேலும் விஸ்தரிக்கப்படும். குருநாகல் மற்றும் கபறணைக்கு இடைப்பட்ட புதிய புகையிரத இணைப்பானது, கபறணை மற்றும் அனுராதபுரத்திற்கு இடையே மேலதிக இணைப்பை ஏற்படுத்துவதன் மூலம் நீட்சிக்கப்படும் சந்தர்ப்பத்தில் தற்போதுள்ள மாகோவினூடான பொல்காவலை வரையான இணைப்புடன் சேர்ந்து 2030ஆம் ஆண்டு மற்றும் அதற்குப் பிந்திய காலப்பகுதிகளிற்கான கேள்விகளைப் பூர்த்திசெய்வதற்கான திறனைப் பெற்றுக்கொள்ளும்.

கிழக்கு அபிவிருத்தித் தடப் பிராந்தியத்தில், வாழைச் சேனையிலிருந்து மட்டக்களப்பு வரையான புகையிரதப் பாதை மேம்படுத்தப்பட வேண்டியுள்ளதுடன், கபறணையுடன் உள்ள தற்போதைய இணைப்பானது 2030ஆம் ஆண்டு வரையான போக்குவரத்துத் தேவைகளைப் பூர்த்திசெய்ய வல்லது. இந்த தடப்பிராந்தியத்தினுள் இணைப்புக்களை மேம்படுத்துவதற்காக, கல்முனை ஊடாக அம்பாறை வரையாக தற்போதைய இணைப்பை 2025ஆம் ஆண்டளவில் விஸ்தரித்தல் முன்மொழியப்பட்டுள்ளது.

ஏனைய பகுதிகளில் அமைந்துள்ள புகையிரத வலையமைப்பு மற்றும் சேவைகளின் மேம்படுத்தலானது பிராந்தியங்களிற்கு இடையேயான போக்குவரத்துத் தேவைகளைப் பூர்த்திசெய்வதற்காகப் பயன்படுத்தப்படமுடியும். தற்போதுள்ள வலையமைப்பிற்கு மேலதிகமாக, புதிய புகையிரத இணைப்புக்கள், குருநாகல் மற்றும் கண்டிப் பகுதிக்கு இடையே (2025), வெள்ளவாய மற்றும் மகியங்கனை ஊடாக அம்பாந்தோட்டை மற்றும் பொலன்னறுவைக்கு இடையே (2030), பதுளையில் தற்போதுள்ள வலையமைப்புடன் இணைந்ததாக இரத்தினபுரி மற்றும் எம்பிலிப்பிட்டிய ஊடாக கொழும்பு மற்றும் அம்பாந்தோட்டை வரையான இணைப்பு (2030), அம்பாறை மற்றும் வெள்ளவாய பகுதிகளிற்கு இடையேயான இணைப்பு (2030) போன்றவை முன்மொழியப்பட்டுள்ளன. எவ்வாறாயினும், தேவைப்படும் அதிகளவான முதலீடு மற்றும் அவற்றின் பயன்பாடு போன்றவற்றை கருத்தில் கொள்ளும் பொழுது இவ்வாறான இணைப்புக்களிற்கான மின்சாரமயமாக்கல் செயற்பாடு தற்போதைய உடனடித்தேவையாக அமையவில்லை.

மேற்குறிப்பிட்ட அபிவிருத்திக்கு மேலதிகமாக, வினைத்திறனான புகையிரதப் போக்குவரத்துச் சேவையை வழங்குவதற்காக, தற்போதுள்ள புகையிரதத் தடங்களிற்கு மேலதிகமான தடங்களை உருவாக்குதல், தற்போதுள்ள தடங்களை மேம்படுத்தல் போன்ற ஏற்கனவே உள்ள புகையிரத உட்கட்டமைப்புக்களை மேம்படுத்துவதற்கான தேவைப்பாடு உள்ளது. கொழும்பு மற்றும் இறாகமை, கொழும்பு கோமாகமை, கொழும்பு மற்றும் மொரட்டுவைப் பகுதிகளிற்கு இடையேயான இணைப்புக்களை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் ஏற்கனவெ புகையிரதத் திணைக்களத்தினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இது தொடர்பான அதிகார சபைகளினால் கவனத்தில் எடுக்கப்பட வேண்டிய இன்னுமொரு முக்கிய அம்சமாக பயணிகள் சேவை அமைகின்றது. இந்த விடயம், புகையிரத நிலையங்களில் காணப்படும் வசதிகளை சௌகரியம் மிக்கதாக மாற்றுதல், சிறந்த காத்திருப்பு வசதிகள், திறன் சுற்றாடல், போன்ற அம்சங்களுடன் இலத்திரணியல் பயணச் சீட்டு வழங்கல், இணையம் மூலமான முன்கூட்டிய பதிவு வசதிகள், தனிப்பட்ட சேவைகள், புகையிரதங்களை கண்காணிப்பதற்கான வசதிகள் போன்ற வர்த்தக சமூகத்தினரிற்கான சேவைகள் உள்ளடங்கலான மேம்பாடுகளை உள்ளடக்குகின்றது. சேவைகளின் செயற்திறன் மேம்படுத்தலுடன் கூடிய மேற்குறிப்பிட்ட மேம்பாடுகளின் ஊடாக வீதிப் போக்குவரத்தை அதிகளவில் தெரிவுசெய்பவர்களை புகையிரதப் போக்குவரத்தை தெரிவுசெய்வதற்கு ஈர்ப்பதற்கு உறுதுணையாக அமையும்.

வீதி அபிவிருத்தி.

**2.3.3 வீதி உட்கட்டமைப்பு**.- மத்திய மற்றும் மாகாண அரச அமைப்புக்களினால் பாராமரிக்கப்படும் சாலைகளின் மொத்த நீளமானது 30,000 கிலோமீட்டர்களிற்கு அதிகமாகக் காணப்படுகின்றது. இலங்கையானது அதனுடைய பிராந்திய நாடுகளுடன் ஒப்பிடுகையில் சாலைகளின் செறிவின் அடிப்படையில் முதல் நிலையிலுள்ளது. இருப்பினும், தேவையான மேம்படுத்தல் நடவடிக்கைகள் மற்றும் காலத்துக்குக் காலம் மேற்கொள்ள வேண்டிய பராமரிப்பு தேவைகளின் அடிப்படையில், குறிப்பாக மாகாண வீதிகளின் பராமரிப்பு திருப்திகரமானதாக அமையவில்லை. வீதிப் போக்குவரத்தானது போக்குவரத்திற்கான கேள்வியில் 90% இற்கும் மேலதிகமாகவும், இறுதி மயிலிற்கான இணைப்பை ஏற்படுத்துவதில் அதிக சௌகரியமான தெரிவாகவும் அமைவதனால், தொடர்ந்து அதிகரித்துவரும் வீதி உட்கட்டமைப்பு வசதிகளை பராமரித்தல் அரசாங்கத்திற்கு பொருளாதார ரீதியில் அதிகளவு செலவினங்களை ஏற்படுத்தும் விடயமாக அமைகின்றது. இவ்வாறான நிலைமையில், வீதிப் போக்குவரத்து அபிவிருத்தியில் முன்னுரிமைத் தெரிவுகளை மேற்கொள்ளல், மற்றும் ஏற்கனவே உள்ள உட்கட்டமைப்பு வசதிகளை உச்சப் பயன்பாட்டிற்கு உட்படுத்தல் போன்ற தேவைப்பாடு பொருளாதார ரீதியில் வினைத்திறனானதும் நிலைபேறானதுமான போக்குவரத்து உபாயமார்க்கத்திற்கு தேவையான அம்சமாக அமைகின்றது.

அதிவேக நெடுஞ்சாலைகள் ஒப்பீட்டளவில் அதிகளவு செலவினங்களைக் கொண்டமைந்த உட்கட்டமைப்புக்களாகக் காணப்படுகின்றபோதிலும், அமைவிடங்களிற்கு இடையே மிகவும் துரிதமான இணைப்புக்களை ஏற்படுத்த வல்லவை. தெற்கு அதிவேக நெடுஞ்சாலை, கொழும்பு - கட்டுநாயக்கா அதிவேக நெடுஞ்சாலை, வெளியகச் சுற்றுவட்ட நெடுஞ்சாலை, மற்றும் மாத்தறையிலிருந்து அம்பாந்தோட்டை வரையும், கொழும்பிலிருந்து குருநாகல் வழியாக தம்புள்ளை வரையும் அபிவிருத்தி செய்யப்பட்டு வரும் அதிவேக நெடுஞ்சாலைச் செயற்திட்டங்கள், முன்மொழியப்பட்ட அபிவிருத்தித் தடபகுதியில் அமைந்துள்ள அமைவிடங்களிற்கு இடையேயான இணைப்புக்களை மேம்படுத்துவதற்கும் வேகமான போக்குவரத்திற்கும் வழிசெய்யும்.

இந்தத் திட்டதில் குறிப்பிடப்பட்ட எதிர்கால நகர அபிவிருத்திகள், குடியிருப்புக்களின் பரம்பல், தொழிற்சாலைகளின் அமைவிடங்கள், சுற்றுலாத்துறை மேம்படுத்தல்கள் மற்றும் ஏனைய தொடர்புபட்ட அபிவிருத்தி திட்டங்களில் எதிர்பார்க்கப்பட்ட நகர்வுக் கோலங்கள் மற்றும் எதிர்வு கூறல்களிற்குத் தேவையான பாரியளவான வீதி உட்கட்டமைப்பு வசதிகளை, ஏற்கனவே உள்ள அதிவேக நெடுஞ்சாலைகளின் தொகுப்பு மற்றும் கொழும்பு - அம்பாந்தோட்டை, கொழும்பு - தம்புள்ளை, மற்றும் கொழும்பு வெளியக சுற்றுவட்ட வீதியின் இறுதிப் பகுதி போன்ற செயற்படுத்தப்பட்டு வரும் அதிவேக நெடுஞ்சாலைத் திட்டங்கள் 2030 ஆம் ஆண்டுவரை பூர்த்திசெய்யக்கூடிய கொள்ளளவை கொண்டுள்ளன. இதற்கு மேலாக ஏற்படவிருக்கும் எதிர்கால போக்குவரத்து தேவைக்கான அதிவேக நெடுஞ்சாலைகளின் விஸ்தரிப்பானது 2030 ஆம் ஆண்டில் காணப்படும் கேள்விகளின் அடிப்படையில் தீர்மானிக்கப்பட முடியும். இதற்கு மேலதிகமாக, இதற்கு முன்னைய பகுதியில் குறிப்பிடப்பட்டதற்கிணங்க, உயரளவில் ஒருங்கிணைக்கப்பட்டதும், உள்ளூர் பேரூந்துப் போக்குவரத்துடன் இணைக்கப்பட்டதும் மேம்படுத்தப்பட்டதுமான, புகையிரதப் போக்குவரத்து சேவையில் துரித அபிவிருத்தி, மற்றும் தற்போதுள்ள பிராந்தியங்களிற்கு இடையேயான அதிவேக நெடுஞ்சாலைப் போக்குவரத்து வசதிகளின் மேம்படுத்தல் செயற்பாடுகள் 2030ஆம் ஆண்டுவரையான பயணிகள் போக்குவரத்துத் தேவைகள்

மற்றும் சரக்குப் போக்குவரத்திற்கான தேவைகளை பூர்த்தி செய்வதற்கு போதுமாக அமைவதுடன், முன்மொழியப்பட்ட பௌதிக அபிவிருத்திக் கோலத்தை எட்டுவதற்கு உறுதுணையாகவும் அமையும்.

எவ்வாறாயினும், பிராந்தியங்களிற்கு இடையேயான இணைப்புக்களை மேம்படுத்து வதற்கும், விரைவான நகர்வுகளிற்கு துணை புரிவதற்கும், முன்மொழியப்பட்ட பெருநகர்ப் பிராந்தியங்கள் மற்றும் பிரதான நகரங்களை இணைக்கின்ற தற்போதுள்ள நெடுஞ்சாலைக் கட்டமைப்பானது முன்னுரிமை அடிப்படையில் மேம்படுத்தப்பட்டு பராமரிக்கப்படமுடியும். இதற்காக இனங்காணப்பட்ட முன்னுரிமை அளிக்கப்பட்ட நெடுஞ்சாலைகள், அம்பாந்தோட்டை- வெள்ளவாய- மட்டக்களப்பு (A2), நீர்கொழும்பு - புத்தளம் (A3), தம்புள்ளை - திருகோணமலை (A6), தம்புள்ளை- யாழ்ப்பாணம் (A9), மதவாச்சி- மன்னார் (A14), மற்றும் மாங்குளம்- முல்லைத்தீவு (A2) போன்றவற்றை உள்ளடக்குகின்றது. இந்த இணைப்பில் (மற்றும் ஏனைய நெடுஞ்சாலைகளில்) காணப்படும் பிரதான தடையாக, அவ்வாறான வீதிகள் பயணிக்கும் பகுதிகளில் அமைந்துள்ள நகர்ப் புறங்களில் ஏற்படும் வாகன நெரிசல்கள் முதன்நிலை வகிக்கின்றன. இவ்வாறான குறைபாடுகள் வீதி அபிவிருத்த மற்றும் போக்குவரத்து நிர்வாக பொறியியல் வழிமுறைகளின் உதவிளுடன் தீர்க்கப்பட முடியாத பிரச்சினைகளாக அமைவதனால், விரிவான ஒருங்கிணைந்த நகர அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் முன்கூட்டிய நகர அபிவிருத்தி உபாய மார்க்கங்களை உள்ளூர் மட்டங்களில் பிரயோகித்தல் போன்ற நடைமுறைகளின் ஊடாகக் கட்டுப்படுத்த முடியும்.

மாகாண மற்றும் உள்நாட்டு மட்டங்களில், மேம்படுத்தல், காலத்திற்குக் காலம் பராமரித்தல் மற்றும் தவிர்க்க முடியாத தேவைகள் காணப்படும் சந்தர்ப்பங்கள் தவிர்ந்த ஏனைய சந்தர்ப்பங்களில் புதிய வீதிகளை உருவாக்குவதற்குப் பதிலாக, ஏற்கனவே உள்ள வீதிகளை உச்சப் பயன்பாட்டிற்கு உட்படுத்தல் போன்றவை வீதி அபிவிருத்திக்கான கொள்கைகளாக அமையமுடியும்

**2.3.4 விமானப் போக்குவரத்து**.- இலங்கைக்கான தேசிய சிவில் விமானப் போக்குவரத்து கொள்கை (2016), "இலங்கையை ஆசியப் பிராந்தியத்திற்கான எதிர்கால முன்னணி வகிக்கும் விமானப் போக்குவரத்திற்கான மையமாக மாற்றுவதன் மூலம் நாட்டினை சிறந்த விமான சேவைகளை வழங்கும் நிலையமாக்குவதுடன் உலகளவிலான விமானப் போக்குவரத்து வலையமைப்புடன் இணைவதை குறிக்கோளாகக் கொண்டுள்ளது. இந்தக் கொள்கையானது விமானப் போக்குவரத்துக் கட்டமைப்பை (Air Traffic Management) நவீனமயப்படுத்துதல் மற்றும் விமான நிலையங்களிற்கான உட்கட்டுமைப்புக்களை விஸ்தரித்தல் மற்றும் மேம்படுத்துதல் போன்றவை, வளர்ந்து வரும் விமான போக்குவத்தின் தேவைகள், வான் போக்குவரத்து வழி மற்றும் விமான நிலையங்களின் வினைத்திறனை உறுதிப்படுத்துவதில் முக்கியத்துவம் வகிக்கின்றன. விமானப் போக்குவரத்து.

இலங்கைச் சமூகத்தினரின் மேம்பாடு, மேம்படுத்தப்பட்டுவரும் வர்த்தக சுற்றாடல் மற்றும் அபிவிருத்தி அடைந்துவரும் சுற்றுலாத்துறைகளுடன், விமான நிலையங்கள் மற்றும் விமானப் போக்குவரத்து வசதிகளிற்கான அதிகரித்துவரும் கேள்வி காணப்படுகின்றது. அதிகரித்துவரும் விமானப் போக்குவரத்து மற்றும் விமானப் பயணிகளின் எண்ணிக்கையின் அடிப்படையில், தற்போதுள்ள பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தினுடைய (BIA) கொள்ளளவானது குறுகிய காலகட்டத்தினுள் முழுமையான பாவனையை எட்டிவிடும். ஆனபடியால், தரையிறங்குவதற்கான வசதிகள், பயணிகள் போக்குவரத்து நிலையம் மற்றும் சரக்குக்களை கையாளும் பகுதி போன்றவற்றை விஸ்தரிப்பதற்கான திட்டங்கள் ஏற்கனவே தயாரிக்கப்பட்டு வருகின்றன. BIA இனுடைய அதிகரிக்கப்பட்ட பாவனையின் நன்மைகளை சர்வதேச மயப்படுத்துவதற்காக, கட்டுநாயக்கா விமான நிலையத்தை சூழவுள்ள பகுதிகள் இன்னுமொரு விமானப் போக்குவரத்து சார் நகரமொன்றை அமைப்பதற்கான வசதிகளுடன் அபிவிருத்தி செய்யப்படுவதற்காக முன்மொழியப்பட்டுள்ளது. இந்த அபிவிருத்தியானது கிழக்கு- மேற்கு அபிவிருத்தித் தடப் பிராந்தியத்தில் அமைந்துள்ள நீர்கொழும்பு- கட்டுநாயக்கா பெருநகர்ப் பிராந்தியத்தின் அபிவிருத்திக்கான வினைஊக்கியாக அமைகின்றது.

இதற்கு மேலதிகமாக, மத்தளையில் அமைந்துள்ள மகிந்த ராஜபக்ச சர்வதேச விமான நிலையமானது (MRIA), அதன் மீது மேற்கொள்ளப்பட்டுள்ள உயரளவான முதலீடு மற்றும் இந்த விமான நிலையத்தின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த அமைவிடம் காரணமாக இலங்கையை சர்வதேச விமானப் போக்குவரத்துப் பாதையில் நிலைப்படுத்துவதற்கான வாய்ப்புக்கள் காரணமாக முக்கியத்துவம் வாய்ந்த அம்சமாக அமைகின்றது. இந்த விமான நிலையத்திலிருந்து நன்மைகளைப் பெற்றுக்கொள்வதற்கும் விரயமாவதைத் தவிர்ப்பதற்கும் உடடினயாகப் பாவனைக்கு உட்படுத்தப்படவேண்டியுள்ளது.

இந்த இரண்டு விமான நிலையங்களும் அண்மித்த எதிர்காலத்தில் சர்வதேச விமானப் போக்குவரத்து தேவைகளை பூர்த்திசெய்வதற்கு வசதியாக அமையும். தற்போது வியாபித்து வரும் சர்வதேச வர்த்தக அபிவிருத்தி தொடரும் சந்தர்ப்பத்தில் மேலும் அதிகப்படியான விமானப் போக்குவரத்திற்கான கேள்விகள் எதிர்வரும் பத்து வருடகாலத்தில் அதிகரிப்பதற்கான வாய்ப்புக்கள் காணப்படுவதுடன் இதை நிவர்த்தி செய்வதற்காக முன்றாவது சர்வதேச விமான நிலையம் ஒன்றிற்கான தேவையும் உருவாகும் சந்தர்ப்பங்களும் உள்ளது. இவ்வாறான நிலைமையில், தற்போது வளர்ந்து வரும் பௌதிக அபிவிருத்திகளின் கோலம் மற்றும் கையிருப்பிலுள்ள வளங்களை உச்சப்பயன்பாட்டிற்கு உட்படுத்துவதற்கும், கிங்குறாங்கொடை விமான நிலையமானது ஏனைய தெரிவுகளுடன் ஒப்பிடுகையில் சர்வதேச விமான நிலையமாக தரமுயர்துவதற்கான தேவைப்பாட்டைக் கொண்டுள்ளது. மேலும் இந்த விமான நிலையமானது கிழக்கு- மேற்கு அபிவிருத்தித் தடப்பிராந்தியத்திற்காக முன்மொழியப்பட்ட பிரதான உட்கட்டமைப்புக்களிற்கு மிகவும் அண்மித்ததாக அமைவதனால், கிங்குறாங்கொடை விமான நிலையமானது அனைத்து தேவைகளை எதிர்நோக்கும் பிரதேசங்களிற்குமான சேவைகளைப் பொருத்தமான இணைப்புக்களுடன் வழங்க வல்லது.

தேசிய சிவில் விமானப் போக்குவரத்துக் கொள்கையானது, சிறு விமான இறங்கு துறைகளை அமைப்பதன் மூலம் சேவை வழங்கப்படாத அல்லது தூர இடங்களில் அமைந்துள்ள பகுதிகளில் வேலைவாய்ப்பு, பொருளாதார நடவடிக்கைகள், சிறந்த இணைப்புக்கள் மற்றும் தேசிய பொருளாதாரத்தில் சமூகங்களை இணைப்பதற்கு துணைசெய்கின்றமையை இனங்கண்டுள்ளது. இதனடிப்படையில், BIA மற்றும் MRIA இனுடைய அபிவிருத்திக்கு சமாந்தரமாக, உள்நாட்டு விமான சேவைகளிற்கான கேள்விகளும் அதிகரிப்பதற்கான சந்தர்ப்பங்களை எதிர்பார்க்கமுடியும். கேள்விகளை பூத்திசெய்வதற்காக, இரத்மலானை, அம்பாறை, திருகோணமலை, புத்தளம், பலாலி மற்றும் அனுராதபுரம் ஆகிய பகுதிகளில் தற்போது காணப்படும் உள்நாட்டு விமான நிலையங்கள் சிறந்த பயணிகள் மற்றும் சரக்குப் போக்குவரத்து வசதிகளுடன் அபிவிருத்தி செய்யப்படுவதற்கு முன்மொழியப்படுகின்றது. எவ்வாறாயினும், இவ்வாறான அபிவிருத்தித் தேவைகள், விரிவான போக்குவரத்துக் கேள்வி சார்ந்த பகுப்பாய்வுகள் மற்றும் சாத்தியக்கூற்றுக் கற்கைகளிற்கு உட்படுத்தப்பட வேண்டியவை.


பௌதிக உட்கட்டமைப்பு அபிவிருத்தி.

### 2.4 பௌதிக உட்கட்டமைப்புக்களின் வழங்கல்

**2.4.1 குறிக்கோள்.**- திட்டமிட்டு அபிவிருத்தி செய்யப்பட்ட மனிதக் குடியிருப்புக்கள், சௌகரியமான வாழ்க்கை மற்றும் வினைத்திறன் மிக்க பொருளாதார நடவடிக்கைகளின் செயற்பாடுகளிற்கு, வசதிகள் மற்றும் சேவைகள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைகின்றன. குளாய் மூலமான குடிநீர் வழங்கல், மழைநீர் வடிகாலமைப்பு வசதிகள், பொதுக் கழிவு நீர் வடிகால்கள், திரவ மற்றும் திண்மக் கழிவுகளைச் சேகரித்தல் மற்றும் அகற்றுவதற்கான தொகுதிகள் போன்ற பௌதிக உட்கட்டமைப்புக்கள், அவ்வாறன வசதிகளாக அமைவதுடன், எதிர்பார்க்கப்படும் அபிவிருத்திக் கோலத்தை எட்டுவதில் இவை முக்கிய இடம் வகிக்கின்றன. இதனைக் கருத்திற் கொண்டு, கீழே குறிப்பிடப்பட்ட கொள்கைகள், முன்மொழியப்பட்ட இடம்சார் குடியிருப்புக்களிற்கான உபாயமார்க்கத்திற்கு பக்கபலமாக முன்மொழியப்பட்டுள்ளன.

**2.4.1.1 சேவை வழங்குநர் மற்றும் பாவனையாளர்களிற்கான சௌகரியம்.**- வசதிகளை பெற்றுக்கொள்வதற்காக பாவனையாளர்களின் ஏதுநிலை, மற்றும் அவ்வாறான வசதிகளை வழங்கும் சேவை வழங்குநர்கள் பாவனையாளர்களை எட்டுவதற்கான ஏதுநிலை, போன்றவை அவ்வாறான

**உரு 5 : 5 : முன்மொழியப்பட்ட பௌதிக உட்கட்டமைப்பு அமைவடிவம் - 2050**



சேவைகளை வெற்றிகரமாக வழங்குவதில் முக்கியத்துவம் பெறுகின்றது. குடியிருப்புக்களின் பரம்பற் கோலமானது இவ்விடயம் தொடர்பாக நேரடியான தொடர்புகளைக் கொண்டுள்ளது.

**2.4.1.2 உபாய மார்க்கமுடைய மற்றும் செயற்திறனுடைய முதலீடு**.- மின்சார வசதிகள் மற்றும் வீதிப் போக்குவரத்து வசதிகள் நாட்டினுடைய மக்கள் தொகையில் 95% இற்கும் அதிகமானவர்களை தற்போது எட்டியுள்ளதை அவதானிக்கமுடியும். சேவைகளின் நிலையான தன்மை, செயற்படுத்தல் மற்றும் ஒழுங்கான பராமரிப்புச் செயற்பாடுகள், இந்தச் சேவைகளை அதிகரித்தல் போன்ற அம்சங்கள் இவற்றில் காணப்படும் பிரதான குறைபாடுகளாக அமைகின்றன. தற்பொழுது, நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு வசதிகள் பல பிரதேசங்களில் விரைவான முன்னேற்றத்தை அடைந்து வருகின்றன. ஏற்கனவே உள்ள உட்கட்டமைப் புக்களிற்குப் பதிலாக புதிய இணைப்புக்கள் மற்றும் விஸ்த்தரிப்புக்களை மேற்கொள்ளும் செயற்பாடு அதிகளவான செலவினங்களைக் கொண்டுள்ளமையால், சிறந்த பெறுதிகளை ஏற்படுத்துவதற்காக தெரிவுசெய்யப்பட்ட உபாயமார்க்க செயற்திட்டங்களில், கையிருப்பிலுள்ள நிதியினை உச்சப்பயன்பாட்டை எட்டும் வகையில் முதலிடுதல் முக்கியத்துவம் பெறுகின்றது.

**2.4.1.3 அடிப்படை வசதிகளின் உச்சப் பயன்பாடு மற்றும் நிலைபேறான சுற்றாடல்**.- வசதிகளை வழங்குவதில் அவற்றிற்கான சேவை வழங்குநர்கள், மக்கள் தொகை மற்றும் ஏனைய செயற்பாடுகளின் அடிப்படையிலான செயற்திட்டங்களை நிலைபெறச் செய்யக்கூடிய குறைந்தளவான சேவை பெறுநர் இருப்பதை உறுதிப்படுத்தும் வகையில் முன்னுரிமைகளைத் தெரிவுசெய்ய முடியும்.

அதேநேரத்தில், இவ்வாறான வசதிகள் அபிவிருத்திகளை எதிர்பார்க்கப்படும் திசையை நோக்கி நகர்த்திச் செல்வதற்கு வழிவகுக்கின்றன. சுற்றாடற் கூருணர்வுள்ள பகுதிகள் மற்றும் பாதுகாக்கப்படவேண்டிய பகுதிகள் இவ்வாறான வசதிகளை வழங்குவதிலிருந்து தவிர்ப்பதன்மூலம் பாதுக்காக்கப்படமுடியும்.

நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு.

**2.4.2 நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு**.- நீரானது: வீட்டுத்தேவை மற்றும் தொழிற்சாலைகள், விவசாயம் மற்றும் நீர்ப்பாசனம், இயற்கையான பல்லுயிர் வாழிடங்களின் நிலைபேறான தன்மைக்கு மிகவும் முக்கியமான பொருளாக அமைகின்றது.

நகர்ப் புறங்களில் காணப்படும் வீட்டு மற்றும் தொழிற்சாலைகளிற்கான நீர்த் தேவைகள் தற்பொழுது தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையினால் பூர்த்தி செய்யப்பட்டு வருகின்றது. 2020ஆம் ஆண்டை இலக்காகவைத்து தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையினால் ஏற்கனவே பல செயற்திட்டங்கள் அமுல்ப்படுத்தப்பட்டு வருகின்ற போதிலும், இவை உள்ளூர் மற்றும் பிராந்திய ரீதியில் மட்டுப்படுத்தப்பட்ட செயற்திட்டங்களாகவே காணப்படுகின்றன. இவற்றிற்கு மேலதிகமாக, எதிர்கால அபிவிருத்திக்காக பாதுகாப்பானதும், போதுமானதும் நிலைபேறானதுமான நீர் விநியோகத்தை மேற்கொள்ளுவதற்கு தேசிய மட்டத்திலான நீர் வள முகாமைத்துவ செயற்திட்டமொன்றின் தேவைப்பாடு காணப்படுகின்றது. அவ்வாறான செயற்திட்ட மொன்றில் கீழே தரப்பட்ட அம்சங்கள் சேர்த்துக்கொள்ளப்பட முடியும்:

முன்பு குறிப்பிட்டதற்கிணங்க, உச்சப் பயன்பாடு மற்றும் பொருத்தமான பாவனையை உறுதிப்படுத்துவதற்கும், முன்மொழியப்பட்ட குடியிருப்புக்களின் பரம்பற் கோலத்தற்கு துணைபுரிவதற்கும், சிறந்த தெரிவாக, முன்மொழியப்பட்ட அபிவிருத்தித் தடப்பிராந்தியத்தில் ஒருங்கிணைந்த வலையமைப்பிலான நீர் வழங்கல் தொகுதியொன்றை அமைக்கவேண்டியுள்ளது. அவ்வாறான வலையமைப்பானது, ஆற்றுப்படுக்கைகளை நிலைமாற்று நெறிப்படுத்தலுக்கு உட்படுத்தி விசாலமான சேவைக் கட்டமைப்பினூடாக கேள்விகள் உள்ள பகுதிகளிற்கான விநியோகத்தை மேற்கொள்ளவதுடன், நீர் ஆதாரங்களில் ஏற்படும்

தட்டுப்பாடுகள், நீராதாரங்களிலிருந்து நீரை உள்ளெடுப்பதிலுள்ள சிரமங்கள் மற்றும் பருவகால மாற்றங்களினால் ஏற்படும் சவால்களை கட்டுப்படுத்தமுடியும். எதிர்காலத்தில் மழைவீட்சி அளவில் வீழ்ச்சி ஏற்படுவதற்கான சாத்தியங்கள் எதிர்வுகூறப்பட்டிருப்பினும், 2030ஆம் ஆண்டுவரை (மற்றும் அதற்குப் பின்னரான காலப்பகுதி) முன்மொழியப்பட்ட அபிவிருத்தி கட்டமைப்பிற்கான கேள்விகளை தற்போது அருவிகளில் உள்ள நீர் ஆதாரங்கள் மற்றும் ஏனைய சில மாற்றுவழிகளுடன் அவதானமாக முகாமை செய்வதன்மூலம் ஈடுசெய்யமுடியும்.

மகாவலி கங்கை, களு கங்கை மற்றும் களனி கங்கையில் காணப்படும் நீர் வளங்களிற்கு மேலதிகமாக, ஆற்றுப் படுக்கைகளை நிலைமாற்று நெறிப்படுத்தலுக்கு உட்படுத்தும் ஒருங்கிணைந்த தொகுதியின் மூலமாக கொழும்பு- திருகோணமலைக்கு இடையேயான அபிவிருத்தித் தடப் பிராந்தியத்திற்கான 2030ஆம் ஆண்டு வரையான நீரின் கொள்ளளவை ஈடுசெய்யமுடியும். தெற்குத் தடப் பிராந்தியத்திற்கான நீர்த்தேவையானது கின் கங்கை மற்றும் நில்வளா கங்கை ஆகிய நீர் மூலங்களை நிலைமாற்று ஆற்றுப்படுக்கை நெறிப்படுத்தற் செயற்திட்டத்தின் மூலமாக ஈடுசெய்யமுடியும்.

எவ்வாறாயினும், வடக்கு மற்றும் கிழக்குப் பிராந்தியத்தில் காணப்படும் அருவிகளின் நீரின் கொள்ளவானது அப்பிராந்தியங்களிற்கான நீரை தொடர்ச்சியாக வழங்குவதற்குப் போதுமானதாக இல்லாமையினால் புதிய நீராதாரங்களை இனங்காண்பதற்கான தேவைப்பாடு உள்ளது. தற்போது அரசாங்கத்தினால் கருத்தில் கொள்ளப்பட்டுவரும், முன்மொழியப்பட்ட "யாழ்ப்பாணத்திற்காகன அருவி" (ஆறுமுகம் அவர்களின் திட்டம், 1965) திட்டமானது வட அபிவிருத்திப் பிராந்தியத்திற்கு நீரை வழங்குவதற்கான உயர்வான ஏதுநிலையைக் கொண்டிருக்கும் அதேவேளை, இத்திட்டமானது வட பிராந்தியத்தின் மலர்ச்சிக்காண எண்ணற்ற சந்தர்ப்பங்களைக் கொண்டுள்ளதுடன் விவசாய ரீதியான அபிவிருத்திக்கும் பாரிய பங்களிப்பை வழங்கவல்லது.

கழிவு நீர் அகற்றற் செயற்பாடானது உள்ளூர் மட்டத்தில் கையாளப்படவேண்டிய விடயமாக அமைகின்றது. பகுதி 5.2இல் குறிப்பிடப்பட்ட, முன்மொழியப்பட்ட குடியிருப்புக்களின் பரம்பற் கோலத்தில் குறிப்பிடப்பட்ட எண்ணிக்கைகளிற்கமைய, ஸ்ரீ ஜயவர்த்தனபுர, கடுவலை, பிலியந்தலை, வத்தளை, கொலண்ணாவை, மகரகமை, போன்ற கொழும்பு பெருநகர் பிராந்தியத்தினுள் அமையும் பகுதிகள், நீர்கொழும்பு, இராகமை, கம்பகா, மீரிகமை, குருநாகல், தம்புள்ளை, திருகோணமலை, கிண்ணியா, மூதூர், காலி, கிக்கடுவை, மாத்தறை, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, கல்முனை, கண்டி, அனுராதபுரம், மற்றும் நுவரெலியா போன்ற இனங்காணப்பட்ட கேந்திரப் பகுதிகளில், 2030ஆம் ஆண்டில் தேவையான ஏனைய வசதிகளுடன் இணைந்த நிலத்தடி வடிகாலமைப்புக்களை ஏற்படுத்துதல் அவசியமாகின்றது. 2030ஆம் ஆண்டிற்கு மேற்பட்ட எதிர்கால அபிவிருத்திக் கோலத்தின் அடிப்படையில், அம்பாந்தோட்டை, அம்பாறை, புத்தளம், மன்னார், கிளிநொச்சி, ஏறாவூர், இரத்தினபுரி மற்றும் ஏனைய முன்மொழியப்பட்ட நகரமயமாதல் திரள் மையங்களில் கழிவுநீர் வடிகால்களை அமைப்பதற்கான தேவைப்பாடு உள்ளது. அவ்வாறான வலையமைப்புக்களை நிறுவுதல், அப்பகுதிகளின் கொள்திறனை அதிகரிப்பதுடன், கூருணர்வுள்ள பல்லுயிர் வாழிடங்களைப் பாதுகாப்பதற்கும் உதவிசெய்கின்றன.

மேற்பரப்பு வடிகாலமைப்புக்களை நிறுவுவதற்கு உள்ளூர் மற்றும் பிராந்திய ரீதியான பலதரப்பட்ட கணிப்பீடுகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளன. பொதுவான கொள்கையாக, அனைத்து கட்டியமைக்கப்பட்ட பகுதிகள், மற்றும் விசேடமான நகர்ப் பிராந்தியங்களில் மேற்கொள்ளப்படும் தனிப்பட்ட அபிவிருத்திகள் மற்றும் நகரப்புற குடியிருப்பபுக்கள் உள்ளடங்கலான ஒப்பீட்டளவில் பாரியளவான அபிவிருத்திகளில் மழைநீர் சேமிப்பு வசதிகளை உருவாக்குவதற்கு ஊக்குவித்தல் பரிந்துரைக்கப்படுகின்றது. இச்செயற்பாடானது நீரின் கேள்விக்கு பதிலீடாகவும், கட்டமைக்கப்பட்ட பகுதிகளில் மேற்பரப்பு நீரோட்டம் காரணமாக மழை காலத்தில் ஏற்படும் உள்ளக வெள்ளப்பெருக்கை குறைப்பதற்கும், நிலத்தடி நீரின் மீள் சேமிப்பிற்கும் இவ்வாறான செயற்திட்டம் அவசியமாகின்றது.

அனைத்து நீரேந்து பகுதிகளிலும் பொருத்தமான அமைவிடங்களில் அணைகளை அமைப்பதும் சிறிய விழுதொடர் தொகுதிக் குளங்களை அமைப்பதும், அவற்றை சமூக நிறுவனங்கள் அல்லது பொருத்தமான உள்ளூர் அதிகார சபைகளின் ஊடாக முகாமை செய்வதும் குறைவான அபிவிருத்திச் செறிவுள்ள பகுதிகளிற்கான நீர்முகாமைத்துவத்திற்கு பொருத்தமான வழிமுறையாக அமைகின்றது.

சக்தி.

***2.4.3 சக்தி***.- *இலங்கை மின்சார சபையின், நீண்டகால உற்பத்தி விரிவாக்கல் திட்டம் - 2018-2037 (வரைபு), இலங்கை பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவினால் தயாரிக்கப்பட்ட, சவால்களைத் தாண்டிய 2020ஆம் ஆண்டிற்கான மின் வழங்கல் மற்றும் பரிந்துரைகள், இலங்கை நிலையான சக்திவள அதிகாரசபை யினால் தயாரிக்கப்பட்ட, சக்திவள ரீதியில் தன்னிறைவான இலங்கையை நோக்கி, நிலையான சக்திவள செயற்திட்டம் 2015-2020, இலங்கையின் மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க வலுசக்தி அமைச்சினால் பிரசுரிக்கப்பட்ட, அறிவுசார் பொருளாதாரத்திற்கான வலுசக்தி துறை அபிவிருத்தித் திட்டம் 2015-2020, பெற்றோலிய வள அபிவிருத்தி அமைச்சினால் தயாரிக்கப்பட்ட பெற்றோலிய ஆய்வு அபிவிருத்தி திட்டம் (2017), 2003 ஆம் ஆண்டு 26 ஆம் இலக்க பெற்றோலிய வளச் சட்டமூலம், போன்ற ஏற்கனவே இத்துறை சார்பாக உள்ள திட்டங்கள், ஏற்கனவே சக்தி வளத்துறைக்கு போதுமான கவனம் செலுத்தப்பட்டுள்ளதை உறுதிப்படுத்துகின்றது. இவ்வாறான திட்டங்களின் இலக்கு மற்றும் குறிக்கோள்களிற்கு அமைவாகவும், இத்திட்டத்தின் பௌதிக அபிவிருத்தி இலக்குக்களை எட்டுவதற்கும், கீழ்க்காட்டப்பட்ட நிலரீதியான உபாயமார்க்கங்கள் முன்மொழியப்பட்டுள்ளன.*

*மேலே குறிப்பிட்ட "2020 மற்றும் அதற்குப் பின்னரான மின்சார விநியோகம்: சவால்கள் மற்றும் பரிந்துரைகள்" அறிக்கை குறுகிய கால, இடைக்கால மற்றும் நீண்டகால சக்திவள பாதுகாப்பினை நிலைபேறான முறையில் பேணுவதற்கான தீர்வுகளை வழங்குகின்றது. இந்த அறிக்கையின் படி, இலங்கையின் சக்திவளத் தொகுதியானது 2016 இன் முடிவில் அண்ணளவாக 4054* MW *மொத்த நிறுவப்பட்ட கொள்ளளவையும் 3538* MA *விநியோக கொள்ளளவையும் கொண்டுள்ளது. 2016 இல் பதியப்பட்ட உச்ச அளவான கேள்வி 2453* MW *ஆக அமைகின்றது. உற்பத்தி விரிவாக்கற் திட்டமானது மேற்குறிப்பிட்ட குறிக்கோளை எட்டுவதற்கான ஒரு அம்சமாக அமைகின்றது. மின்சக்திக்கான அதிகரிக்கும் கேள்வியை ஈடுசெய்வதற்கும், அனல் மின்நிலையங்களை மூடுவதனால் ஏற்படும் குறைவுகளை நிரப்புவதற்கும், தேவையான சந்தர்ப்பங்களில் புதிய உற்பத்தி நிலையங்களை நிறுவவேண்டிய தேவைப்பாடு காணப்படுகின்றது.*

*பெற்றோலிய வள அபிவிருத்திச் செயலாளலர்* (PRDS) *குறுகிய கால, இடைக்கால மற்றும் நீண்ட கால மசகு எண்ணெய் மற்றும் எரிவாயு அகழ்வு அபிவிருத்தி திட்டத்திற்கான உபாய மார்க்கத்தினை, வளர்ந்துவரும் வர்த்தக மாதிரிகள், புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட கேள்வி கோரல் வழிமுறைகள், சந்தை நிலைவரங்கள், மற்றும் தேசிய நலன்கள் போன்ற தேவைப்பாடுகளை கவனத்திற்கொண்டு நேரடி வெளிநாட்டு முதலீட்டு* (FDI) *செயற்திட்டங்களின் ஊடாக முன்நோக்கிக் கொண்டுசெல்வதற்காக செயற்படுகின்றார். இச்செயற்பாடானது இலங்கையின் ஆரம்பநிலை அருவி நீரோட்டத்தில் நீர் மின்சக்தி உற்பத்திக்காக சர்வதேச ஒப்பந்தகாரர்கள் அல்லது செயற்படுத்துபவர்களின் பங்களிப்புடன் நாட்டினுடைய தேசிய மனித வளத்தை பயிற்றுவித்தல் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சியையும் கருத்தில் கொண்டு தேசிய பொருளாதாராத்திற்கு பெறுமதிசேர்ப்பதற்காகப் பயன்படுத்தப்படமுடியும்.*

*2003 ஆம் ஆண்டு 26ஆம் இலக்க பெற்றோலிய வளச் சட்டமூலம், இலங்கையில் பெற்றோலிய ஆய்வு மற்றும் அபிவிருத்திக்களை நெறிப்படுத்துவதற்கான சட்டரீதியான கட்டமைப்பை வழங்குகின்றது. இந்தச் சட்டமூலத்தில் வழங்கப்பட்ட அதிகாரங்களிற்கமைய உருவாக்கப்பட்ட பெற்றோலிய வள அபிவிருத்திக் குழுவானது* (PRDC) *இச்சட்டத்தினால் வழங்கப்பட்ட கடமைகளை நிறைவேற்றுவதற்கான பொறுப்பைக் கொண்டிருப்பதுடன், பெற்றோலிய வள அபிவிருத்தி செயலாளர்* (PRDS) *இலங்கையின் அனைத்து பெற்றோலிய ஆய்வு மற்றும் உற்பத்தி நடவடிக்கைகளையும் நெறிப்படுத்தும் நிர்வாகத்திற்கான பொறுப்புக்களைக் கொண்டுள்ளார்.*

*அபிவிருத்தித் தடப்பிராந்தியத்தில் மின் சக்தி மற்றும் பெற்றோலிய அடிப்படையிலான எரிபொருளிற்கான பாரிய கோள்வி எதிர்காலத்தில் உருவாகும். பகுதி 5.1இல் குறிப்பிடப்பட்ட நில ரீதியான உபாயமார்க்கங்களிற்கு அமைவாக முன்மொழியப்பட்ட குடியிருப்புக்களின் கோலம், கைத்தொழில்களின் அபிவிருத்தி, மற்றும் போக்குவரத்து உட்கட்டமைப்பு போன்றகட்டமைப்புக்களிற்கமைய, மேற்குறிப்பிட்ட வளங்களிற்கான எதிர்கால கேள்வியில் அரைப்பங்கிற்கு மேலதிகமானவை (50%) கிழக்கு மேற்கு அபிவிருத்தித் தடப் பிராந்தியத்தில் அமையும்.*

இந்தக் கட்டமைப்பினுள், நீர் விநியோகத்திற்கு முன்மொழியப்பட்டதைப் போன்று, சுழற்சி அமைப்பில் தொடராக இணைக்கப்பட்ட சேவை வலையமைப்பை கிழக்கு மேற்கு அபிவிருத்தித் தடப் பிராந்தியத்தினுள் அமைப்பதன் மூலம் பிரதான அபிவிருத்திப் பகுதிகளிற்கு அத்தியாவசியமான மின்சாரம், பெற்றோலிய எரிபொருள் மற்றும் எரிவாயு வழங்கற் கட்டமைப்பை உருவாக்குவதற்கு முன்மொழியப்படுகின்றது. தற்போதுள்ள தொகுதிகளை மேம்படுத்துவதற்கு மேலதிகமாக, புதிய பெற்றோலிய மற்றும் LGN கட்டமைப்புக்கள், திருகோணமலை மற்றும் கொழும்பிற்கு அண்மித்ததாக (கெரவலப்பிட்டிய) மின்சத்தி உற்பத்தி அலகு, போன்றவை, மின்சக்தி, திரவ எரிபொருள் மற்றும் எரிவாயு விநியோகத்தை நாடு முழுவதும் தொடர்ச்சியான வடங்களின் ஊடாக மேற்கொள்வதற்கு வசதியாக அமையும். அதேபோன்ற கட்டமைப்புக்களை தேவையான ஏனைய வசதிகளை வளங்குவதற்காக 2030ஆம் ஆண்டளவில் ஏனைய அபிவிருத்தித் தடப்பகுதிகளிலும் நிறுவுவதற்கு பரிந்துரைக்கமுடியும். இவ்வாறான வசதிகளை அமைப்பதற்காக, பிரதான அபிவிருத்தித் தடப்பகுதிகளில் முன்மொழியப்பட்ட அதிவேக நெடுஞ்சாலை, மற்றும் புகையிரத சேவைத் தடங்களிற்கு சமாந்தரமாக "வசதிகள் சேவைத் தடப் பிராந்தியமாக" உருவாக்க முடியும்.

இலங்கை நிலைபெறு தகு வலு அதிகார சபையின் (SLSEA), சக்தி முகாமைத்துவ நடவடிக்கைத் திட்டத்தின்படி (2016-2020) 2020ஆம் ஆண்டில் 20% ஆன சக்கி உற்பத்தியை நிலைபேறான சக்கி மூலங்களினூடாக பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளதுடன் இது அடைவதற்கு சாத்தியமான இலக்காகவும் காணப்படுக்கின்றது. இந்தச் சதவீதமானது 2050ஆம் ஆண்டளவில் 30-40% வரை அதிகரிக்கப்பட முடிவதுடன், மொத்த சக்தித் தேவையானது 2050 ஆம் ஆண்டில் முழுமையாக மீள் உருவாக்கக்கூடிய சக்தி மூலங்களினூடாக பூர்த்திசெய்யப்பட முடியும். இந்த நிலையில், இலங்கையானது சர்வதேச ஒப்பந்தங்கள் மற்றும் வரைமுறைகளிற்கமைய வாயு வெளியீடுகளைக் கட்டுப்படுத்துவதற்கான இலக்குகளை எட்டுவதற்கு இணங்கியுள்ளதுடன், பசுமையான சக்தி வழங்கலை உறுதிப்படுத்துவதற்கு, அனைத்து குடியிருப்பு, வர்த்தக மற்றும் நிறுவனங்களின் கட்டுமான அபிவிருத்திகளில், தொடர்புபட்ட நகரப் பிராந்தியங்களிற்கான சக்தித் தேவையில் குறைந்தபட்சம் 20% ஆவது பூர்த்திசெய்வதற்காக, சூரிய சக்தி தகடுகளை கூரைகளில் பொருத்துவதை கட்டாயமாக்கவேண்டிய தேவைப்பாடு காணப்படுகின்றது. அனைத்து பெருநகர் பிராந்தியம் மற்றும் பிரதான நகரங்களிற்கு அண்மித்த பொருத்தமான அமைவிடங்களில் திறந்த வெளிகளில் பொருத்தப்படும் சூரிய சக்தி அபிவிருத்தித் தளங்களை அமைப்பதற்கு பரிந்துரைக்கப்படுகின்றது.

இலங்கை மின்சார அபிவிருத்தி அதிகார சபையினால் சீதாவாக்கை (கித்துள்கல), பிரோட்லான்ட் (ஹட்டன்), மல்வல (இரத்தினபுரி) போன்ற மத்திய கூருணர்வுப் பகுதிகளில் அமைந்த பொருத்தமான நிலையங்களில் சில பாரியளவான நீர் மின்சார உற்பத்தி நிலையங்களைப் அமைப்பதற்கு இத்திட்டத்தினால் இனங்காணப்பட்டுள்ளது. இந்தத் திட்டமானது கூருணர்வுள்ள பகுதிகளில் சனத்தொகையை குறைப்பதற்கான உபாயங்களை பரிந்துரைக்கும் அதேவேளை, இயற்கைச் சுற்றாடல் வளங்களின் மீது ஏற்படக்கூடிய பாதிப்புக்கள் தொடர்பான பொருத்தமான கற்கைகளின் அடிப்படையில் இவ்வாறான திட்டங்களை சிறப்பாக அமுல்படுத்த முடியும்.

***2.4.4* கழிவு முகாமைத்துவம்**.- முன்மொழியப்பட்ட பௌதிக மற்றும் பொருளாதார அபிவிருத்தியை மேற்கொள்ளவதற்கு வினைத்திறன் மிக்க திண்மக் கழிவு முகாமைத்துவ தொகுதிகள் அத்தியாவசியமாகின்றன. முன்மொழியப்பட்ட நகரமயமாதல் திரள் மையங்களில் அமைகின்ற இப்பகுதிகள், அதிகளவான குடியிருக்கும் சனத்தொகைக்கு மேலதிகமாக, தொழிற்சாலைகள், வர்த்தகம், சுகாதாரம், மற்றும் எனைய சேவைகளை உள்ளடக்கவேண்டிய தேவைப்பாட்டை கொண்டுள்ளது. கழிவு முகாமைத்துவம்.

கரவலப்பிட்டி, பொரளஸ்கமுவை, கண்டிப் பகுதியில் முன்மொழியப்பட்ட கழிவிலிருந்து சக்தி செயற்திட்டம், அறுவக்காட்டுப் பகுதியில் முன்மொழியப்பட்ட பாரியளவான சுகாதாரமுறை திண்மக்கழிவு சேமிப்புப் பகுதிபோன்ற எதிர்வரும் தசாப்தத்திற் செயற்படுத்தப்படவிருக்கும் செயற்திட்டங்கள் 2020 ஆம் ஆண்டளவில் அவற்றின் தொழிற்பாட்டை ஆரம்பிக்கவுள்ளன. இந்த அடிப்படையில், தேசிய மட்ட

கழிவு முகாமைத்துவ அதிகார சபையொன்றினால் செயற்படுத்தப்படும் அதி நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய, ஒருமையப்படுத்தப்பட்ட, சேகரிப்பு, போக்குவரத்து மற்றும் கொட்டுதல் போன்ற செயற்பாடானது நான்கு அபிவிருத்தித் தடப் பிராந்தியங்கள், பெருநகர்ப் பிராந்தியங்கள் மற்றும் பிரதான நகரங்களில் 2020 ஆம் ஆண்டளவில் அமைக்கப்படுவதற்கு முன்மொழியப்படுகின்றது.

தற்பொழுது முன்னெடுக்கப்பட்டுவரும் கழிவுகளைக் குறைப்பதற்கான ஊக்குவிப்பு நிகழ்ச்சித் திட்டங்கள், மற்றும் குறைந்தளவான சனத்தொகை போன்ற காரணங்களினால், ஏனைய பகுதிகளில் திண்மக்கழிவு உருவாக்கமானது ஒப்பீட்டளவில் குறைந்தளவாக இருப்பதற்கு எதிர்பார்க்கப்படுவதுடன், இவற்றின் முகாமைத்துவம், மரபு ரீதியான மீள் சுளற்சி, சேதனப் பசளை ஆக்கல், மற்றும் சுகாதார முறையில் கழிவுகளை கொட்டுதல் போன்ற முறைகளின் மூலம் முகாமை செய்யப்படமுடியும்.

கழிவுகளை குறைத்தல், மீள் பாவனைக்கு உட்படுத்தல், மற்றும் மீள் சுளற்சிக்கு உட்படுத்தல் (3R) போன்ற செயற்பாடுகள் மீதான அதிகரித்துவரும் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களின் ஊடாக கொட்டுவதற்காக சேகரிக்கப்பட வேண்டிய களிவுகளின் கொள்ளளவில் குறைவு ஏற்படுவதற்கான சாத்தியம் இருப்பினும், தற்போதைய சமூக பொருளாதார வளர்ச்சியின் அடிப்படையில் அதிகரித்து வரும் இலத்திரணியல் மற்றும் மருத்துவக் கழிவுகள் போன்ற கழிவுகளை முகாமை செய்வதற்கான வினைத்திறனான கொள்கைகள், கருவிகள் மற்றும் நெறிமுறைகளின் தேவைப்பாடு எழுந்துள்ளது. இவ்வாறான கழிவுகளை முகாமை செய்வதற்கான முன்மொழிவுகளை மேற்கொள்ளுதல் இத்திட்டத்தினுடைய வரையெல்லைக்கு உட்படாத போதிலும், சிறந்த முறையில் ஆய்வுசெய்யப்பட்டு வினைத்திறனான முகாமைச் செயற்திட்டமானது உருவாக்கப்படும் பட்சத்தில், அவற்றை அமைப்பதற்கு பொருத்தமான அமைவிடங்களை இத்திட்டத்தில் முன்மொழியப்பட்ட நிலரீதியான கட்டமைப்பிற்குள் தெரிவுசெய்ய முடியும்.

*சமூக உட்கட்டமைப்பு அபிவிருத்தி.*

**2.5 சமூக உட்கட்டமைப்பு வசதிகள்**

**2.5.1 குறிக்கோள்.**- மனிதக் குடியிருப்புக்களின் அபிவிருத்தி மற்றும் பொருளாதார அபிவிருத்தியை அடைவதற்கு சமூக உட்கட்டமைப்பு வசதிகள் இன்றியமையாத அங்கமாகத் திகழ்கின்றது. எதிர்பார்க்கப்பட்ட மனித குடியிருப்பு கோலத்தினை அடைவதற்கு தேவையான வேறுபட்ட சமூக உட்கட்டமைப்பு வசதிகளில், கல்வி, சுகாதாரம் மற்றும் நிர்வாக சேவைகள் பிரதானமானவையாக அரசாங்கத்தினால் நோக்கப்படுகின்றன. "அண்மித்த பாடசாலையே- மிகச்சிறந்த பாடசாலை" (லங்கம பாசல- கொந்தம பாசல), "கட்டாய இடைநிலைக் கல்வி", "அனைவரிற்கும் உயர் கல்வி", பௌதிக ரீதியாக வினைத்திறனான நாட்டின் ஊடாக தொற்றா நோய்களிலிருந்து பாதுகாப்பு, நிர்வாகப் பரவலாக்கம், இலத்திரினியல் - அரசு (E-Government) போன்ற இந்தத் துறைசார்ந்த அண்மித்த கால கொள்கைகள், நாட்டினுடைய பௌதிக அபிவிருத்தியில் நேரடியாக தாக்கம் செலுத்துகின்றன.

இந்தப் பின்னணியில், கல்வி, சுகாதாரம் மற்றும் நிர்வாகத் துறைசார்ந்த உட்கட்டமைப்புக்கள் தொடர்பான கீழ்காணும் பொதுவான குறிக்கோள்கள் முன்மொழியப்பட்டுள்ளன.

**2.5.1.1 பொதுமக்களிற்கான சௌகரியம்.**- பௌதிக உட்கட்டமைப்பினைப் போன்று, பாடசாலைகள், மருத்துவமனைகள், நிர்வாக அலுவலகங்கள் போன்றவற்றின் அமைவிடங்களைத் தெரிவுசெய்வதில், பாவனையாளர்கள் மற்றும் சேவை வழங்குநர்களிற்கான சௌகரியங்களிற்கு முன்னுரிமை கொடுத்தல் முக்கியமான ஒரு காரணியாக அமைகின்றது. ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், இவ்வாறான வசதிகளின் தெரிவானது பிரதான போக்குவரத்துப் பாதை, நகர மையங்கள் மற்றும் ஒன்றுடன் ஒன்று மிகவும் அண்மித்த அமைவிடங்களாக திட்டமிடப்படமுடியும்.

**2.5.1.2 உச்சப் பயன்பாட்டிற்கான உபாயமார்க்க முதலீடு.**- கல்வி, சுகாதார மற்றும் நிர்வாக உட்கட்கட்டமைப்புக்கள் நாட்டின் அனைத்துப்

பாகங்களிலும் சிறப்பான முறையில் பரம்பற்படுத்தப்பட்டிருப்பதை அவதானிக்க முடியும். இருப்பினும், கல்வி மற்றும் சுகாதார வசதிகளிற்கான கேள்வி குறிப்பிட்ட வசதிகள் மற்றும் அமைவிடங்களை நோக்கிக் குவியப்படுத்தப்பட்டிருப்பதுடன், சமூக உட்கட்டமைப்புக்கள் மீதான முதலீடுகள், புதிய வசதிகளை அமைப்பதற்குப் பதிலாக ஏற்கனவே உள்ள வசதிகளை மேம்படுத்துவதற்கும் அதிகப்படுத்துவதற்கும் பயன்படுத்தப்படவேண்டும். முதலீடுகளைத் திட்டமிடும்பொழுது, விரிவான சாத்தியக்கூற்றுக் கற்கையானது, வசதிகளின் உச்சப் பயன்பாட்டை உறுதிப்படுத்தும் வகையில் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது.

*2.5.1.3* **பொருளாதார செயற்படுத்தலும் நிலைபேறான பாவனையும்.**- சமூக உட்கட்டமைப்புக்களின் மீது மேற்கொள்ளப்படும் பெரும்பாலான முதலீடுகள் பொருளாதாரத்தில் அதிகரிப்பை ஏற்படுத்தக்கூடிய பெறுதிகளை உருவாக்குவது இல்லை என்று பரவலாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. சிறப்பாக படிமுறைப்படுத்தப்பட்ட சேவைகள், அமைவிடங்களின் தெரிவு மற்றும் சமூகத்தின் பல படிநிலைகளிலுள்ளவர்களையும் உள்ளடக்கல், போன்ற அம்சங்கள் விரயங்களைக் குறைப்பதற்கும் செலவு மற்றும் பாவனைகளை உச்சப்படுத்துவதற்கும் உதவிபுரியும். இதேநேரத்தில், அதிகரித்துவரும் தன்னியக்க சேவைகளின் பாவனை, இலத்திரனியல்-கற்கை, இலத்திரனியல்- மதிநுட்ப ஆலோசனை போன்றவை அதிக வினைத்திறனானதும் குறைந்த செலவினங்களைக் கொண்டதுமான சேவைகளை வழங்குவதற்கு பயன்படுத்தப்படமுடியும்.

*2.5.2* **கல்வி.**- ஆரம்ப மற்றும் இடைநிலைக் கல்வி சார்பாக பிராந்தியங்களிற்கு இடையே அவதானிக்கக்கூடியதாகவுள்ள ஏற்றத் தாழ்வுகளை சமநிலைப் படுத்துவதற்கு, தற்போதுள்ள கொள்கைகள் மீது பாரியளவான மாற்றங்களை செய்யவேண்டிய தேவையுள்ளது. கல்வி.

தற்பொழுது, ஆரம்பக் கல்வி வசதிகள் நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் சிறப்பாக பரந்து காணப்படுவதுடன், கிராமப் புறங்களிற்கூட அதிகபட்சம் 02 கிலோமீட்டர் தூரத்தினுள் அவ்வாறான வசதிகளை அடைவதற்கான சந்தர்ப்பங்கள் உள்ளன. இவ்வாறான ஏற்கனவேஉள்ள வசதிகள், குறைந்தளவான மேம்படுத்தல் மற்றும் விஸ்த்தரிப்புக்களுடன், எதிர்பார்க்கப்பட்ட குடியிருப்புக்களின் பரம்பற் கோலத்திற்கு சிறந்த முறையில் சேவை அளிக்கும் வண்ணம் மாற்றி அமைக்கப்படமுடியும். இருப்பினும், அனைத்து நிலையங்களிலுமுள்ள வசதிகளின் தரம் தொடர்பாக எதிர்வு கூறுவது கடினமான விடயமாகும். பிரபல பாடசாலைகள் மற்றும் ஏனைய பாடசாலைகளிற்கு இடையே தரத்தில் பாரிய ஏற்றத்தாழ்வுகளை அவதானிக்க முடியும். அரசாங்கத்தினுடைய ''அண்மித்த பாடசாலையே- சிறந்த பாடசாலை'' என்ற கொள்கையை சாத்தியமாக்குவதற்கு, எதிர்வரும் பத்து வருட காலப்பகுதியினுள் ஆரம்பக் கல்வி உட்கட்டமைப்பின் மீது குறிப்பிடத்தக்க முதலீடுகளைச் செய்வதற்கான தேவைப்பாடு உள்ளது. இச்செயற்பாடானது, பாடசாலை கட்டிடங்களை இனங்காணல், சுகாதார வசதிகள், ஆசிரியர்களிற்கான தங்குமிட வசதிகள் மற்றும் சேவைகள் போன்றவற்றை உள்ளடக்க முடியும். பிரபல பாடசாலைகள் மீதுகாணப்படும் அதிகப்படியான கேள்விகளை குறைப்பதற்கு, ஆரம்பப் பாடசாலைகள் எந்தவிலை கொடுத்தாவது, இடைநிலைப் பாடசாலைகளிலிருந்து வேறுபடுத்தப்பட வேண்டும்.

அரசாங்கத்தினுடைய ''கட்டாய இரண்டாம் நிலைக் கல்விக்'' கொள்கையானது, பிரதானமான நகர மையங்களிற்கு அண்மித்துக் காணப்படும் பரந்துபட்ட இரண்டாம் நிலைப் பாடசாலைகளின் ஊடாக அடையப்படமுடியும். தற்போதைய இரண்டாம் நிலைப் பாடசாலைகளின் அமைவிடங்கள், குறிப்பிடத்தக்களவு மக்கள் செறிவையாவது கொண்ட பகுதிகளிலிருந்து அதிகபட்சம் பதினைந்து (15) கிலோமீட்டர் தூரத்தினுள் அமைந்திருப்பதை அவதானிக்கக் கூடியதாக இருப்பதுடன், நாடு தழுவிய ரீதியில் மாணவர்களிற்கான திருப்திப்படக்கூடிய போக்குவரத்து எல்லைக்குள் இந்த வசதிகள் காணப்படுகின்றன. சிறந்த கல்வியறிவுள்ள எதிர்கால சமுதாயத்தை உருவாக்குவதற்கும், இறுதியில் சமமான கல்வி வசதிகளை அனைத்து பாடசாலைகளிற்கும் வழங்குவதற்கும்,

ஆரம்பப் பாடசாலைகளைப் போன்று, நகர மற்றும் கிராமப்புற பாடசாலைகளிற்கு இடையே காணப்படும் ஏற்றத் தாழ்வுகள் எதிர்வரும் பத்து வருட காலத்தினுள் நீக்கப்படவேண்டும். வேறுபட்ட தரப்பினரால் பாடசாலை விடயங்கள் மீது செலுத்தப்படும் தேவையற்ற தலையீடுகள், இரண்டாம் நிலைக் கல்வியின் நிலைபேறான பயன்பாட்டின்மீது அதிக கவனம் செலுத்தவேண்டிய தேவையை உணர்த்துகின்றது.

உயர்நிலைக் கல்விமீதான கேள்வி அதிகரித்தவண்ணம் உள்ளது. தற்போதுள்ள அரச பல்கலைக் கழகங்கள் மற்றும் தனியார் பட்டமளிக்கும் நிறுவனங்கள், உருவெடுத்துவரும் கல்விசார் கேள்விகளை ஈடுசெய்யும் வகையில் அவற்றினுடைய கொள்ளளவை அதிகரிக்கவேண்டியுள்ளது. தற்போதைய கொள்ளவை விஸ்த்தரிப்பதற்காக, புதிய பல்கலைக் கழகங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களை நிறுவுவதற்கு, முன்மொழியப்பட்ட திட்டத்தில் இனங்காணப்பட்ட திரள்வு மையப் பகுதிகள் முன்மொழியப்படுகின்றன. பெரும்பாலான பிரதான நகரப் பகுதிகள், பல்கலைக் கழகங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களைக் கொண்டிருப்பினும், எதிர்காலத்தில் புதிய நிறுவனங்களை நிறுவுவதற்கும் விஸ்தரிப்புக்களை மேற்கொள்வதற்கும் , மீரிகமை, தம்புள்ளை, வெள்ளவாய மற்றும் புத்தளம் போன்ற இடங்களிற்கு அண்மித்த பகுதிகள், நேர்முகமான வெளிக் காரணிகளை உருவாக்குவதற்கும் அதன் மூலமாக உள்ளூர் பொருளாதாரத்தை பலப்படுத்துவதற்கும், முன்மொழியப்பட்ட உட்கட்டமைப்பு வசதிகள் ஊடாக அவ்வாறான கற்கை நிறுவனங்கள் பயன்பெறுவதற்கும், கருத்திலெடுக்கப்பட வேண்டியுள்ளது.

எதிர்கால வேலைவாய்ப்புக்களை அடைவதற்கான தொழில்நுட்ப ரீதியிலான தகைமையுள்ள தொழிற் படையை உருவாக்குவதற்கு, தொழில்நுட்பக் கல்விப் பயிற்றுவிப்பிற்கான உயர்வான கேள்வி எதிர்காலத்தில் உருவாகும். இவ்வறிக்கையின் பகுதி 5.2இல் குறிப்பிடப்பட்ட அனைத்து பெருநகர்ப் பிராந்தியம் மற்றும் பிரதான நகர்ப் பகுதிகளிலும் ஏற்கனவே தொழில்நுட்ப கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்கள் காணப்படுகின்றன. அவ்வாறான பகுதிகளில் காணப்படும் வசதிகள் உயர்தொழில்நுட்ப துறைசார் பயிற்சிகளை எழுந்துவரும் தொழிற் படையினரிற்கு வழங்கும் வகையில் மேம்படுத்தப்படமுடியும்.

சுகாதாரம்.

**2.5.3 சுகாதாரம்**.- கல்வி உட்கட்டமைப்பு வசதிகளைப் போன்று, சுகாதாரத் துறை வசதிகளும், படிநிலையான சேவைக் கட்டமைப்புடன், பொருத்தமான அமைவிடங்களில் சென்றடைவதற்கு சாத்தியமான இடைவெளிகளில், நாட்டின் அனைத்துப் பாகங்களையும் உள்ளடக்கிய வகையில் அமைந்துள்ளன. இவ்வுட்கட்டமைப்புக்களின் தரம் மற்றும் நிலை போன்றவை சிறப்பான சேவைகளை வழங்கும் பொருட்டு மேம்படுத்தப்படவேண்டும்.

தற்போதுள்ள நிர்வாக மாவட்ட கட்டமைப்புக்களிலிருந்து விலகி, தம்புள்ளை, எம்பிலிப்பிட்டிய, மகியங்கனை, மற்றும் வெள்ளவாய போன்றவை எதிர்வுகூறப்பட்ட குடியிருப்புக்களின் பரம்பற் கோலத்திற்கு சேவை அளிக்கும்வண்ணம், உயர் நிலை சேவை வசதிகளுடன் மேம்படுத்தப்படமுடியும் (கொழும்பு போதனா வைத்தியசாலைக்கு சமமாக). அதேநேரத்தில், கொழும்பிற்கு மேலதிகமாக, திருகோணமலை, மாத்தறை, அம்பாறை மற்றும் கிளிநொச்சி போன்ற பகுதிகளில் மேலும் நான்கு தேசிய தர சுகாதார நிலையங்கள் முன்மொழியப்படுகின்றன.

நிர்வாகம்.

**2.5.4 நிர்வாகம்**.- நிர்வாக சேவைகள் மக்களை அமைவிடங்களை நோக்கி ஈர்ப்பதற்கும், நகர பகுதிகளை செயற்படுத்துவதற்கும் முக்கியமாக அமைகின்றன. தற்போதைய நிர்வாக அலகுகள் மற்றும் படிமுறைகள் பிரித்தானியாவால் அறிமுகப்படுத்தப்பட்ட அமைப்பிலிருந்து விரிவடைந்த ஒன்றாக உள்ளது. முன்மொழியப்பட்ட குடியிருப்பு அபிவிருத்தி உபாயமார்க்கத்தை அடைவதற்கு இந்த நிர்வாகக் கட்டமைப்பு எதிர்வரும் பத்து வருட காலப்பகுதியில் மாற்றங்களிற்கு உட்படுத்தப்பட வேண்டி அமையலாம். இந்த திட்டமானது தற்போதைய மாவட்ட நிர்வாக கட்டமைப்பை அவற்றின் கொள்ளளவு ஏற்கனவே நிரம்பலடைந்துள்ளமை மற்றும் புதிய பகுதிகளின் அபிவிருத்திக்கு மக்களை ஈர்ப்பதற்கும், மாத்தளையிலிருந்து தம்புள்ளையிற்கு, பதுளையிலிருந்து வெள்ளவாய மற்றும் யாழ்ப்பாணத்திலிருந்து கிளிநொச்சி போன்ற பகுதிகளிற்கு எதிர்வரும் அண்மித்த காலங்களில் நகர்த்துவதற்கு முன்மொழிகின்றது.

**2.6 கைத்தொழில் அபிவிருத்தி**

கைத்தொழில் அபிவிருத்தி.

**2.6.1 குறிக்கோள்**.- உற்பத்தித் துறை அபிவிருத்தியானது இலங்கை அரசாங்கத்தினால் தொடர்ச்சியாக கவனம் செலுத்தப்பட்டு வந்த துறையாக அமைவதுடன், கைத்தொழில் அபிவிருத்தி சார்ந்த பல கொள்கைகள் கடந்த காலங்களில் தயாரிக்கப்பட்டுள்ளன. பல நிறுவனங்கள், கைத்தொழிற் பேட்டைகள், வெளியடங்கலான ஏற்றுமதி அபிவிருத்தி வலயம் மற்றும் கைத்தொழிற் தொகுதிகள் ஏற்கனவே உருவாக்கப்பட்டுள்ளதுடன் அவை செயற்பட்டும் வருகின்றன. இருப்பினும், தற்போதைய நிலைமையில், இவற்றில் பெரும்பாலானவை தனித்து இயங்குவதுடன் கைத்தொழிற் துறையை அபிவிருத்தி செய்வதற்கான விரிவான கொள்கை வழிகாட்டி ஒன்று தயாரிக்கப்படுவதற்கான தேவை இன்றும் காணப்படுகின்றது. ஆனபடியால், எதிர்கால கைத்தொழில் அபிவிருத்தி கொள்கையை கவனத்தில் கொண்டு பௌதிக அபிவிருத்தியை மேற்கொள்வதற்கான வழிகாட்டற் கொள்கையாக, பின்வரும் குறிக்கோள்கள் பரிந்துரைக்கப்படுகின்றன:

**2.6.1.1 அறிவு சார் மற்றும் பெறுமதி சேர் துறையில் அதிக கவனம்**.- இலங்கையினுடைய எதிர்கால பொருளாதார அபிவிருத்திக்கான நம்பிக்கைக்குரிய பகுதியாக அறிவு மற்றும் புத்தாக்கம் சார் கைத்தொழில், பெறுமதி சேர் கைத்தொழில்கள் அமைகின்றமை பரந்தளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயமாகும். நாட்டின் புவியியல் ரீதியான தந்திரோபாய அமைவிடம், தொழில்நுட்ப வசதிகளினால் மற்றும் எழுந்துவரும் புவியியல் சார்ந்த அரசியல் போக்கு போன்றவற்றால் ஏற்படும் போட்டி வாய்ப்புக்கள், தகவல் தொழில்நுட்பத்துடன் தொடர்புபட்ட கைத்தொழில், மீயுயர் தொழில்நுட்பம், மரபணுத் தொழில்நுட்பம், வான் போக்குவரத்து தொழில்நுட்பம், உயிர் மருத்துவ தொழில்நுட்பம், புத்தாக்க பெறுமதிசேர் உற்பத்தி போன்றவற்றை கல்வியறிவுமிக்க உயர் தகைமை பெற்ற தொழிற் படையினரின் பங்களிப்புடன் மேம்படுத்துவதற்கு அதிக முன்னுரிமை கொடுக்கப்படவேண்டியுள்ளது.

**2.6.1.2 சூழலை மாசாக்காத கைத்தொழில் துறையை ஊக்குவித்தல்**.- உற்பத்தித் தொழிற்சாலைகள் பச்சை வீட்டு வாயு வெளியேற்றத்தில் அதிகளவான பங்களிப்பை செய்கின்றன. புதிய புத்தாக்கம் சார்ந்த கைத்தொழிற் துறையானது, வினைத்திறனான பராமரிப்பு மற்றும் தன்னியக்கமயமாக்கல் உபாயங்களினூடாக "பூச்சிய காபன் வெளியீட்டு நிலைமையை" அடைவதற்கு உதவி புரியக்கூடியது.

எவ்வாறாயினும், 2050வரை பாரிய மற்றும் மென் உற்பத்திக் கைத்தொழில் துறையிலிருந்து முழுமையாக விடுபடுவதற்கான வாய்ப்புக்களைக் கொண்டிருக்கவில்லை. ஆனபடியால், அவ்வாறான தொழிற்சாலைகள், மாசு வெளியீடு அற்ற தொழில்நுட்பங்களை பயன்படுத்தல், தொழிற்சாலை தொடர்பான தர நிர்ணயங்களைப் பேணுதல் போன்றவற்றினூடாக, தொடர்ந்து அனுமதிக்கப்பட்ட மாசு வெளியீட்டு எல்லைக்குள் செயற்பட முடியும். உற்பத்தித் துறை தொழிற்சாலைகள், ஒன்றிலொன்று தங்கியிருக்கும் தொகுதி (systems symbioses), கைத்தொழில் பல்வகைமைத் தொகுதி (Industrial Ecology), இயற்கை கைத்தொழிற் பேட்டை (Eco-industrial parks) போன்ற உருவெடுத்துவரும் கொள்கைகளை, திட்டமிடல் மற்றும் வடிவமைத்தலின்போது உள்ளடக்குவதற்கு ஊக்குவிக்கப்படமுடியும்.

**2.6.1.3 தற்போதுள்ள துறைமுக உட்கட்டமைப்புகளை சிறந்த பாவனைக்கு உட்படுத்தல்**.- கைத்தொழிற் சாலைகளின் அமைவிடமானது அங்கு காணப்படும் உட்கட்டமைப்பு வசதிகளில் அதிகளவில் தங்கியுள்ளது. இறக்குமதி மற்றும் ஏற்றுமதியுடன் தொடர்புபட்ட பாரிய அளவிலான பொருத்தும் தொழிற்சாலைத் தளமானது, போக்குவரத்துச் செலவினங்கள் மற்றும் சுற்றாடற் பாதிப்புக்களைக் குறைக்கும் வண்ணம், பிரதானமான கப்பல்த் துறைமுகங்களை அண்மித்ததாக அமைக்கப்படமுடியும். ஏனைய பாரியளவான கைத்தொழில் பேட்டைகள், சுற்றாடல் உட்கட்டமைப்பு, நிறுவனங்களிற்கான ஒருங்கிணைந்த சேவைகளைப் பெற்றுக்கொள்ளல், மறைமுகமான வெளிக் காரணிகளைத் தவிர்த்தல் போன்ற வினைத்திறன்

மிக்கதும் பொருளாதார ரீதியில் இலாபகரமானதுமான வசதிகளைப் பொற்றுக்கொள்வதற்காக, அவற்றிற்கென பிரத்தியேகமாக ஒதுக்கப்பட்ட அமைவிடங்களில் செறிவுபடுத்தப்படமுடியும்.

**2.6.1.4 பாரம்பரிய கைத்தொழில் துறையைப் பாதுகாத்தல்.**- பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் குடிசைக் கைத்தொழில்கள் அவற்றின் நீண்டகால நிலைபேற்றுத் தன்மையை உறுதிப்படுத்தும் வகையில் பாதுகாக்கப்பட வேண்டும். இவ்வாறான கைத்தொழிற்துறைகள், அவை தொடர்பான காரணிகளை உள்ளடக்கி அவற்றிற்கென பிரத்தியேகமாக தயாரிக்கப்பட்ட கொள்கைகளின் அடிப்படையில், தேசிய பௌதிக திட்டமிடல் கொள்கையின் குறிக்கோள்களை பாதிக்காதவண்ணம் பாதுகாக்கப்படவேண்டும்.

**2.6.2 அபிவிருத்தித் தடப் பிராந்தியங்களை நோக்கி செறிவுபடுத்தல்.**- முன்மொழியப்பட்ட குடியிருப்புப் பரம்பற் கோலத்தை உறுதிப்படுத்துவதற்கு, பிரதான வேலைவாய்ப்பை உருவாக்கும் பிரதான கைத்தொழில் அபிவிருத்திகள், முன்மொழியப்பட்ட அபிவிருத்தித் தடப் பிராந்தியத்தினுள் செறிவுபடுத்தப்படுவதற்காக பரிந்துரைக்கப்படு கின்றன. கிழக்கு மேற்கு அபிவிருத்தித் தடப்பிராந்தியமானது, இலங்கையினுடைய எதிர்கால பொருளாதார அபிவிருத்தியை கொழும்பு மற்றும் திருகோணமலைத் துறைமுகங்களின் அமைவிடத்தினால் உருவாகும் எண்ணற்ற வாய்ப்புக்களின் ஊடாக செயற்படுத்தும் திறனைக் கொண்டுள்ளது. கிடைப்பனவிலுள்ள, போக்குவரத்து உட்கட்டமைப்பு, நிலம் மற்றும் மனித வளம், அதிகளவான கைத்தொழிற்துறை நடவடிக்கைகள், போன்றவற்றுடன் இந்தத் தடப் பிராந்தியத்தினுள் பாரியளவான வேலைவாய்ப்புக்கள் எதிர்காலத்தில் உருவாக்கப்பட முடியும்.

ஏற்கனவே உள்ளதும், முன்மொழியப்பட்ட உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் கிடைப்பனவிலுள்ள நிலம், போன்றவற்றின் அடிப்படையில், கொறணை, எக்கல, பியகம, கட்டுநாயக்கா, மீரிகமை, அலவ்வ, குருநாகல், இப்பாகமுவ, தம்புள்ளை, மற்றும் திருகோணமலை போன்ற பகுதிகள் பகுதிகளாக உற்பத்திக் கைத்தொழிலிற்காக இனங்காணப்பட்டுள்ளன. இந்த அமைவிடங்கள் ஏற்கனவே பிரத்தியேகமாக ஒதுக்கப்பட்ட கைத்தொழில் பேட்டைகளைக் கொண்டுள்ளதுடன் உற்பத்திக் கைத்தொழிலிற்கான 2030ஆம் ஆண்டுவரையான கேள்வியை ஈடுசெய்யக்கூடியதாக அமையும்.

நீர் வளத்தின் இருப்பிற்கிணங்க, ஏனைய மூன்று அபிவிருத்தித் தடப்பிராந்தியங்களில் குறிப்பாக, அம்பாந்தோட்டை, அம்பாறை மற்றும் கிளிநொச்சி போன்ற பகுதிகளில் துறைமுக அபிவிருத்தியுடன் இணைந்ததாக, பாரியளவான கைத்தொழில் அபிவிருத்திகள் முன்மொழியப்படுகின்றன.

புத்தாக்கம் சார் கைத்தொழில்கள்.

**2.6.2 புத்தாக்கம் சார்ந்த துறைகளிற்காக விசேட வலயங்கள்.**- இலங்கையின் பொருளாதாரத்தை பெருக்குவதற்கான முக்கிய கைத்தொழிலாக இனங்காணப்பட்ட புத்தாக்க கைத்தொழிலானது, ஆய்வு மற்றும் அபிவிருத்தியில் பரஸ்பர நன்மைகளை பெற்றுக்கொள்ளும் வகையில் ஏற்கனவே அமைந்துள்ள பல்கலைக் கழகங்களிற்கு அண்மித்ததாக அமைக்கப்படுவதற்கு முன்மொழியப்படுகின்றது. தற்பொழுது அபிவிருத்தி செய்யப்பட்டுவரும் கொழும்பு தொழில்நுட்ப நகர செயற்திட்டமானது மேற்குப் பிராந்தியத்தில் அவ்வாறான அபிவிருத்திக்கான வினையூக்கியாக அமைகின்றது. இதைப்போன்று குருநாகல் (வயம்பை பல்கலைக் கழகத்துடன் இணைந்ததாக), திருகோணமலை (கிழக்குப் பல்கலைக்கழகத்துடன் இணைந்ததாக) பகுதிகளில் தொழில்நுட்பப் பூங்காக்களை அபிவிருத்திசெய்வதற்கு முன்மொழியப்படுகின்றது.

பெறுமதிசேர் கைத்தொழில்கள்.

**2.6.3 பதப்படுத்தல் மற்றும் பெறுமதிசேர் கைத்தொழில்.**- விவசாயம் மற்றும் மரபு சாரா பெருந்தோட்டத்துறை, விலங்கு வேளாண்மை மற்றும் மீன்பிடி அபிவிருத்தி, பாரியளவான தொழிற்சாலை அபிவிருத்தி பேட்டைகள் போன்றவை, கொழும்பு- நீர்கொழும்புப் பகுதி, மீரிகமை, குருநாகல், தம்புள்ளை, மற்றும்

திருகோணமலைபோன்ற பிரதான அபிவிருத்தித் தடப் பிராந்தியத்தில் அமைந்த பகுதிகள், வடக்கு அபிவிருத்தித் தடப்பிராந்தியத்தில் கிளிநொச்சி, தெற்கு அபிவிருத்தித் தடப் பிராந்தியத்தில் எம்பிலிப்பிட்டிய, அம்பாந்தோட்டை, கிழக்கு அபிவிருத்தித் தடப்பிராந்தியத்தில் அம்பாறை போன்ற பகுதிகளிற்கு முன்மொழியப்படுகின்றன. இவற்றிற்கு மேலதிகமாக, அனுராதபுரம், வவுனியா, மன்னார், மகியங்கனை, மற்றும் வெள்ளவாய போன்ற பகுதிகள், பாரியளவான பதப்படுத்தல் மற்றும் பெறுமதிசேர் கைத்தொழில் அபிவிருத்திக்களை உள்ளடக்கமுடியும்.

பாரிய கைத்தொழிற் பேட்டைகள்.

**2.6.4 பாரிய கைத்தொழிற் பேட்டைகளை துறைமுகங்களை அண்மித்ததாக செறிவுபடுத்தல்.**- பாரியளவான பார உற்பத்திகள் மற்றும் பொருத்தும் தொழிற்சாலைகளிற்கான பொருத்தமான பகுதிகளாக திருகோணமலை மற்றும் அம்பாந்தோட்டை துறைமுகங்களை அண்மித்த பகுதிகள் காணப்படுகின்றன. எதிர்வுகூறக்கூடிய எதிர்காலப் பகுதிக்கான பெரும்பாலான உயர் தொழில்நுட்ப, பாரியளவான உற்பத்தித் தொழிற்சாலைகள், இறக்குமதி செய்யப்பட்ட மூலப்பொருட்களில் தங்கியிருப்பதுடன், அவற்றின் பெரும்பாலான உற்பத்திகள் வெளிநாட்டு சந்தைக்கு ஏற்றுமதிசெய்யப்படுவதற்கான இலக்கை கொண்டுள்ளமையால், துறைமுகங்களிற்கு அண்மித்து அமைவதன்மூலம் அவை இயல்பாகவே நன்மைகளைப் பெறுகின்றன. சுற்றாடல் பாதுகாப்பு நன்மைகளை உறுதிப்படுத்துவதற்கும், எதிர் மறையான விளைவுகளைத் தடுப்பதற்கும் பாரிய தொழிற்சாலைகள் உள்ளகப் பகுதிகளில் அமைவதை தவிர்க்கவேண்டிய தேவைப்பாடுஉள்ளது.

துறைமுகங்களிற்கு அண்மித்து அமையும் கொள்கைக்கு துணைபுரியும் வகையில், சரக்குப் போக்குவரத்து துறை சார்ந்த கைத்தொழில் அமைப்புக்கள் கொழும்பு - நீர்கொழும்புப் பகுதிகள், திருகோணமலை- கந்தளாய் பகுதி மற்றும் அம்பந்தோட்டை- சூரியவெவ பகுதிகளில் உருவாக்கம்பெறும்.

**2.7 விவசாயம் மற்றும் பெருந்தோட்டத் துறை**

விவசாயம் மற்றும் பெருந்தோட்டம்.

**2.7.1 குறிக்கோள்.**- இலங்கையினுடைய எதிர்கால பொருளாதார அபிவிருத்திக்கு விவசாய மற்றும் பொருந்தோட்டத்துறையிலிருந்து கிடைக்கப்பெறும் பங்களிப்பு ஒப்பீட்டளவில் குறைவானதாக இருப்பினும், உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கும், காலநிலை மாற்றத்தின் தாக்கங்களை ஈடுசெய்வதற்கும், உயிர்ப்பல்வகைமையை பாதுகாப்பதற்கும், தேசிய பௌதிக திட்டமிடல் கொள்கையில் இத்துறையினையும் சேர்த்துக்கொள்ளவதற்கான தேவைப்பாடு காணப்படுகின்றது. ஆனபடியால், உணவு உற்பத்தியில் தன்னிறைவை எட்டுதல், கூருணர்வுள்ள சுற்றாடல் அங்கங்களைப் பாதுகாத்தல், மற்றும் நீண்ட காலமாக வாழ்ந்து வரும் பாரம்பரியம் மற்றும் எதிர்கால சந்ததியினரின் தொடர்ச்சியை உறுதிப்படுத்தும் குறிக்கோள்களுடன், கீழேகாட்டப்பட்ட உபாயமார்க்கங்கள் முன்வைக்கப்படுகின்றன.

விவசாய மற்றும் பெருந்தோட்டத் துறைகளின் அபிவிருத்திக்காக தயாரிக்கப்படும் தேசிய மற்றும் துறைசார் திட்டங்களில் கீழேகாட்டப்பட்ட அம்சங்கள் கவனத்தில் கொள்ளப்படவேண்டும்:

குறைந்த மனிதவளப் பயன்பாடு.

**2.7.2 குறைவான மனித வளப் பயன்பாடு.**- உணவுப் பாதுகாப்பு மற்றும், பாரம்பரிய விவசாய கலாச்சாரத்தை பாதுகாப்பதற்காக இத்துறைமீது போதுமான கவனம் செலுத்தப்படவேண்டும். எவ்வாறாயினும், விவசாயத் துறையில் நேரடியாக தொடர்புபட்ட சனத்தொகையானது தற்போதைய முப்பது சதவீதத்திலிருந்து (30%) 2030ஆம் ஆண்டளவில் இருபது சதவீதமாக (20%) வீழ்ச்சியடைவதற்கான வாய்ப்புக்கள் உள்ளதுடன், துரிதமான நவீனமயமாக்கற் செயற்பாடு மற்றும் நவீன கண்டுபிடிப்புக்களினால் ஏற்படும் இந்த மாற்றமானது, பாரம்பரிய முறைகளை அழிவடையச் செய்யாது பேணப்படவேண்டியது முக்கிய தேவைப்பாடாகும். நவீன விவசாய சமூகமொன்றை உருவாக்குவதற்கான தேவை காணப்படும் அதேவேளை, தொழில்நுட்ப மேம்பாடு, தொடர்புபட்ட அதிகார சபைகளினால் வழங்கப்படும் பயிற்சிகள், சேவைகள் மற்றும் அமுலாக்கப்படும் நிகழ்ச்சித்திட்டங்கள், போன்றவை முன்மொழியப்பட்ட பெருநகர் பிராந்தியம் மற்றும் பிரதான நகரங்களின் பிராந்தியங்களிற்கான விரிவாக்கல் உதவிகளாக அமையமுடியும்.

வினைத்திறனான நிலப் பாவனை.

**2.7.3 வினைத்திறனான நிலப் பயன்பாடு**.- புள்ளிவிபரங்களின் அடிப்படையில், நெற் காணிகள் மற்றும் மேட்டுநிலப் பயிர்ச்செய்கை உள்ளடங்கலான, விவசாய நடவடிக்கைகளிற்குப் பயன்படும் மொத்த நிலப்பரப்பானது ஒரு மில்லியன் எழுநூறு ஆயிரம் கெக்டயர்களாக அமைவதுடன் (1.7 மில்லியன் Ha), இந்த நிலப்பரப்பானது நாட்டின் மொத்த நிலப்பரப்பில் கால்ப்பங்காக (25%) அமைகின்றது. மேலும் கடந்த பத்து ஆண்டு காலப்பகுதியில் பயிர்ச்செய்கைக்கு உட்படுத்தப்பட்ட நிலப்பரப்பளவானது 15% இனால் அதிகரித்துள்ளமையை புள்ளிவிபரங்கள் எடுத்துக்காட்டுகின்றன. இந்த நிலைமையானது இரண்டு பிரதான கவனத்திற் கொள்ளவேண்டிய நிலைமைகளை சுட்டிக்காட்டுகின்றது. ஒன்று, மேலதிக விவசாய நிலமானது வனப் பிராந்தியங்கள் மற்றும் பாதுகாக்கப்பட்ட பகுதிகளிலிருந்து எடுக்கப்பட்டவையாக அமைகின்றமை ஆரோக்கியமற்ற அம்சமாகும். இரண்டாவதாக இக்காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட உணவு உற்பத்தியின் அதிகரிப்பானது நில அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் குறைவானதாகக் காணப்படுகின்றமை, உற்பத்தித் திறனின்மீது கேள்விக்குறியை ஏற்படுத்துகின்றது. ஆனபடியால், பிரதேச செயலர் நிர்வாகப் பிரிவுகளிற்கு உள்பட்ட, விவசாய நிலங்களை கவனமாக மேற்பார்வை செய்வதற்கான கட்டமைப்பொன்று அவசியமாக அமைகின்றது.

விவசாயப் பாதுகாப்பு.

**2.7.4 நகர்ப்புறங்களில் அமைந்த விவசாய நிலங்களைப் பாதுகாத்தல்**.- நகரப் பகுதிகளில் காணப்படும் நெற் காணிகள் மற்றும் பெருந்தோட்ட நிலங்கள் உள்ளடங்கலான விவசாய நிலங்கள், பௌதிக அபிவிருத்திக்காக தொடர்ச்சியாக கோரப்பட்டுவருகின்றன. நகரப் புறங்களில் காணப்படும் நிலப்பரப்புக்கள் பொருளாதார ரீதியில் நெற்பயிர்ச் செய்கைக்கு பொருத்தமற்றதாக அமைகின்றபோதிலும், அவற்றுடன் தொடர்புபட்ட நகர அபிவிருத்தி திட்டங்கள், பல்லுயிர் வாழ்விடத் தொகுதிகளிற்கு இவற்றால் வழங்கப்படும் சேவைகள், வடிகாலமைப்பு, நகர வெப்பமயமாதல் செயற்பாட்டை குறைத்தல் மற்றும் காற்றோட்ட தடங்களை உருவாக்கல், பொதுத் திறந்த வெளிகளிற்கான தேவைகள், அமைவிடங்களின் தனித்துவமான இயற்கை அழகு போன்ற சந்தைப் பெறுமதிசாரா வேறு முக்கியமான பெறுமாணங்களை கவனத்திற் கொள்ளவேண்டும்.

உயர்தர பெருந்தோட்டத் துறை.

**2.7.5 உயர் தரம் வாய்ந்த பெருந்தோட்டத்துறை**.- பாரம்பரிய தேயிலை, இறப்பர், தென்னை பெருந்தோட்ட உற்பத்திகள் அந்நியச் செலவாணியை ஈட்டும் மூலங்களாக அமைந்திருப்பினும், பாரம்பரியம் சாராத ஏற்றுமதித் துறைகளின் பங்களிப்புக்களிற்கு மத்தியில் இவற்றின் பங்களிப்பு முக்கியத்துவம் குறைந்ததாக மாறிவருகின்றன. தொழிலாளர்களின் தட்டுப்பாடு, ஏனைய உற்பத்தியாளர்களினால் உருவாகும் போட்டித்தன்மை, பதிலீட்டுப் பொருட்களினால் ஏற்படும் சந்தை வீழ்ச்சி போன்ற தேயிலை மற்றும் இறப்பர் உற்பத்தித் துறையில் முகம்கொடுக்கும் பிரச்சனைகள், இலங்கையை தொடர்ந்தும் மரபுரீதியான பெருந்தோட்டத் துறை உற்பத்திச் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கான உத்தரவாதத்தை அளிக்கவில்லை. இதற்குப் பதிலாக, உயர்தரம் வாய்ந்த உற்பத்திகள் மட்டும் ஊக்குவிக்கப்படமுடியும்.

மத்திய கூருணர்வுப் பிரதேசத்தில் மீள்காடாக்கல்.

**2.7.6 மத்திய கூருணர்வுப் பிரதேசங்களில் மீள்காடாக்கல்**.- உயர் நிலப்பரப்பில் காணப்படும் தேயிலைத் தோட்டத்துறை காரணமாக ஏற்படும் சுற்றாடல் சார்பான பாதிப்புக்கள், மத்திய கூருணர்வுப் பகுதிகளை பாதுகாக்கவேண்டிய தேவை போன்றவற்றினால், இத்திட்டமானது வினைத்திறனற்ற பெருந்தோட்டத் துறையினை, வர்த்தக நோக்கற்ற வனமாக்கல் மற்றும் மரபு சாராத ஏற்றுமதிப் பயிர்ச்செய்கைக்காக பயன்படுத்துவதற்கு பரிந்துரைக்கின்றது. 300 மீட்டரிற்கு மேற்பட்ட உயரமான பகுதிகளில் காணப்படும் தேயிலைத் தோட்டப் பரப்பினை 2020-2050ஆண்டு காலப்பகுதியில் 01% ஆகக் குறைப்பதற்கு முன்மொழியப்படுகின்றது. கடுமையான விதிமுறைகளின் கீழ் பொருத்தமான நிலப்பாவனை உறுதிப்படுத்துவதுடன் கீழ்நாட்டு பெருந்தோட்ட செய்கையானது தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படமுடியும்.

நகர்ப்புற வனமாக்கல்.

**2.7.7 நகர்ப்புற வனமாக்கல்**.- முன்மொழியப்பட்ட அபிவிருத்தித் தடப் பிராந்தியத்தில் அமைகின்ற விவசாய மற்றும் இறப்பர் பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை நிலங்கள் எதிர்காலத்தில் வேறு அபிவிருத்தித் தேவைக்காக கோரப்பட முடியும். அவை இவ்வாறான செயற்பாடுகளிற்கு உற்பத்தித் திறனற்றவையாக அமைகின்றபோதிலும்,

காபன் வெளியீட்டில் அவற்றால் ஏற்படுத்தப்படக்கூடிய பங்களிப்பு, வளிமண்டல வெப்பநிலையைக் குறைத்தல், மற்றும் அவற்றால் உருவாக்கப்படும் இரம்மியம் மிக்க சுற்றாடல், போன்றவற்றை ஒவ்வொன்றாக கணிப்பீடு செய்து, நிலத்திற்கான சந்தைப் பெறுமதியுடன் ஒப்பிடுவதன் மூலம், உள்ளூர் பிரதேசங்களிற்காகத் தயாரிக்கப்படும் அபிவிருத்தித் திட்டங்களினூடாக மிகவும் பொருத்தமான வினைத்திறன் மிக்க பயன்பாட்டிற்கு ஒதுக்கமுடியும். பொதுவாக, நகர்ப்புறங்களின் நிலப்பரப்பில் அறுபது சதவீமான (60%) பகுதியானது, UN REDD நிகழ்ச்சித்திட்டத்தில் (2016) குறிப்பிடப்பட்ட தேசிய வன மேம்பாட்டு இலக்குகளை அடைவதற்காக ஒதுக்கப்படவேண்டியுள்ளது.

தெங்குப் பயிர்ச்செய்கையை பாதுகாத்தல்.

**2.7.8 தெங்குப் பயிர்ச்செய்கையை பாதுகாத்தல்.**- 2030ஆம் ஆண்டுவரை தெங்குப் பொருட்களிற்கான கேள்வியில் குறைவு ஏற்படுவதற்கான சாத்தியங்கள் இல்லாத படியால், பொரும்பாலான தெங்கு உற்பத்திப் பகுதிகள் பாதுகாக்கப்படவேண்டிய தேவைப்பாடு காணப்படுகின்றது. பயிர் நிலங்கள் துண்டாடப்படுதல் மற்றும் வேறு பாவனைக்காக மாற்றப்படுதல் போன்ற செயற்பாடுகள் பொருத்தமான பொருளாதார நடவடிக்கைகளின்மூலம் தீர்க்கப்படவேண்டும். பத்து ஏக்கர்களிற்கு குறைவான தென்னந் தோட்டங்களை நிலப்பிரிவிற்கு உட்படுத்துவதற்கு வழிசெய்யும் தற்போது நடைமுறையிலுள்ள கொள்கை கட்டமைப்பானது மீளாய்விற்கு உட்படுத்தப்படவேண்டும்.

மீன்பிடி மற்றும் நீர் வளத் துறையை அபிவிருத்தி செய்தல்.

### 2.8 மீன்பிடித்துறை

**2.8.1 குறிக்கோள்.**- மீன்பிடி மற்றும் நீர் வளத் துறைக்கான பத்து வருட அபிவிருத்திக் கொள்கைக் கட்டமைப்பானது 2007-2016 (2007) மீன்பிடித் துறை அபிவிருத்திக்கு தற்பொழுதுள்ள திட்டமாகக் காணப்படுகின்றது. இத்திட்டமானது கீழே தரப்பட்ட துறைசார்ந்த கொள்கை மற்றும் இலக்குக்களை அடைவதற்கான உபாய மார்க்கங்கள் மற்றும் நடவடிக்கைகளை உள்ளடக்குகின்றது.

- தேசிய மீன் உற்பத்தியை அதிகரிப்பதன் மூலமாக மக்களுடைய போசனை மட்டத்தினை அதிகரிப்பதும் உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்தலும்
- உற்பத்திக்குப் பின்னரான விரயங்களை குறைத்தலும் மீன் உற்பத்திகளின் தரத்தினை ஏற்றுக்கொள்ளக்கூடிய தரமட்டங்களிற்கு ஏற்றவகையில் தரமுயர்த்துதல்
- மீன்பிடி மற்றும் அது சார்ந்த துறைகளில் வேலைவாய்ப்பை அதிகரித்தல் மற்றும் மீனவ சமூகத்தினரின் சமூக-பொருளாதார நிலைமைகளைத் தரமுயர்த்துதல்
- மீன் உற்பத்திகளிலிருந்து கிடைக்கப்பெறும் அந்நியச் செலவாணியை அதிகரித்தல்
- கடற்கரை மற்றும் நீர்நிலை சுற்றாடலைப் பாதுகாத்தல்

தேசிய மீன்வளத்துறை அபிவிருத்தி உபாயமார்க்கம் 2010-2013 ஆனது மீன்பிடித் துறை அபிவிருத்திக்கான குறுகியகால திட்டமாகும். இந்த உபாயமார்க்கத்தில் கவனத்திற்கொள்ளப்பட்ட பகுதிகள் கீழே தரப்பட்டுள்ளன:

- 2013 ஆம் ஆண்டளவில் சராசரி நபரிற்கான வருடாந்த மீன் நுகர்வு மட்டத்தினை 21.9kg ஆக அதிகரித்தல்.
- உள்ளூர் மீன் உற்பத்தியை அதிகரித்தல். தேசிய மீன் உற்பத்தியை 2013 இல் இரட்டிப்பாக்குவதற்காக திட்டமிடப்பட்டுள்ளது.
- விலைரீதியான போட்டித்தன்மையை சந்தை ஊக்குவிப்பு முறைமூலம் உருவாக்குதல்.
- மீன்பிடித்துறை அபிவிருத்தி மூலம் மீனவர் சமூக அபிவிருத்திக்கான வழிமுறைகளை உருவாக்கல்
- கடலியல் தொழில்நுட்ப மேம்பாடு மற்றும் சர்வதேச கடல்சார் சட்ட ஒப்பந்தங்களின் அடிப்படையில் மீன்வளத்துறையின் நிலைபேற்றுத் தன்மைக்காக நடைமுறைப்படுத்தல் மற்றும் முகாமை செய்தல்.

இந்தத் திட்டங்களிற்கான காலப்பகுதிகள் ஏற்கனவே முடிவடைந்திருப்பினும், அவற்றின் குறிக்கோள்களின் அடைவுகள் இன்னமும் கணிக்கபட்டவேண்டியுள்ளதுடன் புதிய திட்டமானது தயாரிக்கப்படவேண்டியுள்ளது.

இலங்கையில் மீன்பிடித் துறையை அபிவிருத்தி செய்வதற்காக எதிர்காலத்தில் தயாரிக்கப்படும் திட்டங்களில், கீழே காட்டப்பட்ட அம்சங்களிற்கு போதுமான முக்கியத்துவம் வழங்கப்படவேண்டும்:

மீன்பிடித்துறை உட்கட்டமைப்பை மேம்படுத்தல்.

**2.8.2 தற்போதுள்ள உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தல்.**- தற்போதுள்ள கடற்கரை மற்றும் ஆழ்கடல் மீன்பிடி உட்கட்டமைப்பு வசதிகள், பிரதான மீன்பிடித் துறைமுகங்கள், தோணிகளை நங்கூரமிடும் பகுதிகள், சேகரிப்பு நிலையங்கள், சேமிப்பு வசதிகள் மற்றும் பயிற்சி வசதிகள் போன்றவை உள்ளடங்கலாக நாட்டின் அனைத்து கடற்கரைப் பிராந்தியங்களையும் உள்ளடக்குகின்றன. இருப்பினும், மீன்பிடித்துறையினை நவீனப் படுத்துவதற்கும், மீன்பிடித் துறையில் ஈடுபட்டுள்ள சமுதாயத்தின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துவதற்கும் உடனடியானதும் பாரியதுமான மேம்படுத்தல் நவவடிக்கைகள் தேவைப்படுகின்றன.

அறுபடை முகாமைத்துவம்.

**2.8.3 அறுபடைக்குப் பின்னதான முகாமைத்துவம், பதப்படுத்தல் மற்றும் பெறுமதி சேர்த்தல்.**- மீன்பிடி உற்பத்தி, உற்பத்திகளிற்கு பெறுமதி சேர்த்தல், பதப்படுத்தல் நிலையங்கள் போன்ற அத்தியாவசிய வசதிகள், பொதியிடும் அலகு மற்றும் குளிரூட்டப்பட்ட சேமிப்பு வசதிகள் போன்ற வினைத்திறனான முகாமைத்துவத்திற்கு துணைபுரியும் வசதிகள், கொழும்பு, நீர்கொழும்பு, பேருவளை, திருகோணமலை, காலி, மாத்தறை, தங்காலை, அம்பாந்தோட்டை, யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு, மட்டக்களப்பு, ஒலுவில் மற்றும் கல்பிட்டி போன்ற பகுதிகளில் ஏற்படுத்தப்படுத்தப்படவேண்டும்.

நன்நீர் மீன்பிடி அபிவிருத்தி.

**2.8.4 நன்நீர் மீன்பிடித்துறை அபிவிருத்தி.**- நன்னீர் மீன்பிடியானது பிரதான நீர்த்தேக்கங்களில் அபிவிருத்தி செய்யப்படக்கூடியதாக இருக்கும் அதேவேளை, நன்னீர் மீன்களின் இனப்பெருக்க வசதிகளில் காணப்படும் குறைபாடுகள் அமைவிடங்களைத் தெரிவுசெய்வதற்கு நன்கு கவனத்திற்கொள்ளப்படவேண்டும்.

இலத்திரனியல் உட்கட்டமைப்பு.

**2.9 இலத்திரணியல் உட்கட்டமைப்பு**

**2.9.1 குறிக்கோள்.**- ஒட்டுமொத்த உலகமும் இணையம் மற்றும் திறன் வசதிகளின் யுகத்திற்கு உருமாற்றம் பெறும் வேளையில், இலங்கையும் இதனுடைய தேசிய, பிராந்திய மற்றும் உள்ளூர் திட்டமிடல், நிர்வாகம், வெகுசனத் தொடர்பு, தொடர்பாடல், உள்நாட்டு மற்றும் சர்வதேச அலுவல்கள் போன்ற தொகுதிகளை அதிநவீன இலத்திரனியல் தொழில்நுட்பத்துடன் தயார்ப்படுத்த வேண்டியுள்ளது.

ஏற்கனவே சிறிய எண்ணிக்கையான தேசிய மட்ட முயற்சிகள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்கள் அமுல்ப்படுத்தப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில், கீழே காட்டப்பட்ட விடயங்கள் தேசிய பௌதிக திட்டமிடல் கொள்கையின் அமுலாக்கலிற்கான முக்கியத்துவத்தின் அடிப்படையில் குறித்துக்காட்டப்படுகின்றது.

இடரீதியான தகவல் உட்கட்டமைப்பு.

**2.9.2 இட ரீதியான தகவல் உட்கட்டமைப்பு.**- இடரீதியான தகவலானது அனைத்து மட்ட திட்டமிடல், நடைமுறைப்படுத்தல், மேற்பார்வை மற்றும் அமுலாக்கல் செயற்பாடுகளிலும் அடிப்படைத் தேவையாகக் காணப்படுகின்றது. தொழில்நுட்ப முன்னேற்றத்தின் உதவியுடன், இலத்திரனியல் வடிவிலுள்ள இட ரீதியான தகவலானது, விரைவான, நம்பகத் தன்மையுள்ள, துல்லியமான, மற்றும் செலவு குறைந்த பயன்பாட்டை அனைத்து வகையான வேலைகளிலும் உள்ளடக்குவதற்கான கேள்வியை கொண்டுள்ளது. தற்பொழுது பல அரச நிறுவனங்கள் இலத்திரனியல் இட ரீதியான தகவல்களைப் பயன்படுத்துகின்ற போதிலும், இவ்வாறான தகவல் திரட்டுக்கள் குறிப்பிட்ட ஒரு தேவைக்காக மட்டுப்படுத்தப்பட்ட வகையில் தனிப்பட்ட நிறுவனங்களால் வடிவமைக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகின்றன. அவ்வாறான தகவல்கள் அவற்றின் உரிமை, நெகிழ்வுத் தன்மைக் குறைபாடு, நிர்வாகக் கட்டுப்பாடுகள் போன்ற காரணங்களினால் பரந்தளவில் பகிரப்படுவதில்லை. இவ்வாறான இடரீதியான தகவல்களை சேகரித்தல் மற்றும் நிகழ்நிலைப்படுத்தல், உறுதிப்படுத்தல் மற்றும் இலத்திரனியல் வடிவாக்கல், பகிர்தல் மற்றும் ஒருங்கிணைத்தல் போன்ற செயற்பாடுகளிற்கு உட்படுத்துவதற்காக தேசிய மட்ட அதிகார நிறுவனம் ஒன்றின் தேவைப்பாடு அனைத்து அபிவிருத்தி இலக்குகளையும் எட்டுவதற்கான இக்காலகட்டத்திற்கு தேவையான தேசிய தேவைப்பாடாக அமைகின்றது.

டியிட்டல் உட்கட்டமைப்பு அமைச்சினால் ஆரம்பித்துவைக்கப்பட்டு, தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப நிறுவனத்தினூடாக (ICTA) அமுலாக்கப்பட்ட, தேசிய இடரீதியான தகவல் உட்கட்டமைப்பானது (NSDI) இதற்கான பெறுமதியான ஒரு கட்டமைப்பாகும். இந்த NSDI ஆனது பலவகைப்பட்ட இடரீதியான தகவல்களை, வேறுபட்ட நிறுவனங்களால் உருவாக்கப்பட்டு நிகழ்நிலைப்படுத்தப்பட்ட, பரந்துபட்ட பாவனைக்காக பலதரப்பட்ட நிறுவனங்களால் பல வகையான பாவனையாளர்களினால் பரந்தளவான தேவைகளிற்காக பயன்படுத்தப்படும், வேறுபட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை ஒருங்கமைக்கும் இலத்திரனியல் தளத்தை வழங்க வல்லது. ஆனபடியால், NSDI இனைப் பலப்படுத்துதல் தற்காலத்தில் முன்னுரிமை அளிக்கப்பட்ட தேவைப்பாடாக இங்கு குறிப்பிடப்படுகின்றது.

*2.9.3* **தனிநபர் தரவு / அடையாள உட்கட்டமைப்பு.**- இடரீதியான தகவல்களிற்கு சமாந்தரமாக, தனிநபர் இலத்திரனியல் தகவலானது, வினைத்திறனான, செலவு குறைந்த மற்றும் விரைவுபடுத்தப்பட்ட அனைத்து நாட்டு மக்களிற்கும் சேவை வழங்கும் பொறிமுறையை சுகாதாரம், கல்வி, சமூக நலன்புரி, வங்கி, பாதுகாப்பு, வருமான வரி மற்றும் தகமை அபிவிருத்தி போன்ற துறைகளில் மேற்கொள்வதற்கு இன்றைய காலகட்டத்தில் தேவைப்படும் உட்கட்டமைப்பாக திகழ்கின்றது. தனிநபர் தரவு உட்கட்டமைப்பு.

ஆட்பதிவுத் திணைக்களத்தினால் தற்பொழுது அறிமுகப்படுத்தப்பட்டுள்ள இலத்திரணியல் தேசிய அடையாள அட்டைஆனது சுட்டிக்காட்டப்படக்கூடிய தொடக்கமாக அமைகின்றபோதிலும், இது "இலத்திரனியல் அடையாளப்படுத்தல் செயற்பாட்டிற்கு" மிக விரைவாக உட்படுத்தப்படுவதன் மூலமாக பொதுமக்களின் விருப்பு மற்றும் அரசின் குறிக்கோள்களை பூர்திசெய்யும் வண்ணம் தரமுயர்த்தப்படவேண்டும். அபிவிருத்தி செய்யப்பட்ட இலத்திரனியல் "அடையாளமானது", தேவையான இரகசியப் பாதுகாப்பு, சட்டரீதியான ஏற்பாடுகள் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளிற்கு உட்படுத்தப்பட்டு, வேறுபட்ட நிறுவனங்களிற்கு இடையே உயிரியல் தகவலாக பகிரப்படுவதன் மூலமாக, மருத்துவ மற்றும் சுகாதார சேவைகளை வழங்கல், கல்வி அடைவுகள், பாதுகாப்புத் தேவைகள் மற்றும் பொதுச் சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்காகப் பயன்படுத்தப்பட முடியும். ஆட்பதிவுத் திணைக்களத்தினால் பேணப்படும் அவ்வாறான தகவல் திரட்டானது, வருடாந்தம் பாரியளவில் குறைப்பதுடன் அவ்வாறான நிறுவனங்களின் செயற்திறனையும் அதிகரிக்கும்.

***2.10* தற்போதுள்ள ஏனைய கொள்கைகள் மற்றும் திட்டங்கள்.**- கீழேதரப்பட்ட தேசிய மட்டக் கொள்கைகள் ஏற்கனவே வெளியிடப்பட்டு அல்லது தயாரிக்கப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது. இந்தக் கொள்கைகள், வழிகாட்டற் கொள்கையின் தயாரிப்பு மற்றும் தேசிய பௌதிக திட்டத்தின் தயாரிப்பில் கற்கைக் குட்படுத்தப்பட்டுள்ளன. இவை இந்த அறிக்கையின் பகுதி 3இல் குறிப்பிடப்பட்ட தேசிய பௌதிக திட்டமிடல் கொள்கையுடன் பெரும்பாலும் ஒத்துப்போகின்றன. ஆனபடியால், கீழ்க்காணப்படும் கொள்கைகள் இத்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் சந்தர்ப்பத்தில் பயன்படுத்தப்படவேண்டிய துறைசாந்த திட்டங்கள் மற்றும் கொள்கைகளாக அமைகின்றன. அபிவிருத்தி மற்றும் பாதுகாப்பிற்காக தற்போதுள்ள கொள்கைகள் மற்றும் திட்டங்கள்.

*2.10.1* வளித்தர முகாமைத்துவத்திற்கான நடவடிக்கைத் திட்டம் - தூயவளி நடவடிக்கைத் திட்டம் 2025

வள முகாமைத்துவ மத்திய நிலையத்தினால் தயாரிக்கப்பட்டது (AirMAC).

*2.10.2* தேசிய உயிர்ப் பல்வகைமை உபாயமார்க்க நடவடிக்கைத் திட்டம் (NBSAP) 2016-2022

மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அபிவிருத்தி அமைச்சின், உயிர்ப் பல்வகைமை செயலாளர் நாயகத்தினால், IUCN மற்றும் சர்வதேச இயற்கை பாதுகாப்பு கூட்டுறவு அமைப்பின், இலங்கைக்கான அலுவலகத்தின் தொழில்நுட்ப உதவிகளுடன் தயாரிக்கப்பட்டது. (வைகாசி 2016) (உரு 5.10.1.ஆ)

*2.10.3* தேசிய காலநிலை மாற்றாம் தொடர்பான கொள்கை (2012) மற்றும் தேசிய அனர்த்த முகாமைத்துவ கொள்கை (2010)

அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தினால் தயாரிக்கப்பட்ட தேசிய அனர்த்த முகாமைத்துவ திட்டம் (NDMP) - 2013-2017 இன் அடிப்படையில் தயாரிக்கப்பட்டது.

2.10.4 யானைகளைப் பாதுகாப்பதற்கான தேசியக் கொள்கை - 2006

மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சினால் தயாரிக்கப்பட்டது (பின்னிணைப்பு 4.3.1.ஆ)

2.10.5 தேசிய வனசீவராசி பாதுகாப்புக் கொள்கை - 2000

மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சினால் தயாரிக்கப்பட்டது

2.10.6 தேசிய REDD+- முதலீட்டு கட்டமைப்பு மற்றும் செயற்படுத்தல் திட்டம் (NRIFAP) 2017 REDD+இலங்கை REDD+ முதலீட்டு கட்டமைப்பு மற்றும் செயற்படுத்தல் திட்டம், 2017, இலங்கை UN-REDD நிகழ்ச்சித்திட்டத்தினால் தயாரிக்கப்பட்டது

2.10.7 இலங்கை சுற்றுலாத்துறை உயாமார்க்கத் திட்டம் (2017-2020)

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையினால் தயாரிக்கப்பட்டது (உரு 5.10.1.எ)

2.10.8 தேசிய கனியவள கொள்கை.- NASTEC இனால் இலங்கையினுடைய கனியவளத் துறையினை அதனுடைய உச்சப் பயன்பாடு, நாட்டின் கனிய வளத்திற்கு பெறுமதி சேர்த்தல், சமூக பொருளாதார அபிவிருத்தித் தேவைகளைப் பூர்த்தி செய்யும் அதேவேளை இலங்கையின் அபிவிருத்தி நடவடிக்கையில் சுற்றாடல் நிலைபேறான தன்மையை உறுதிப்படுத்துவதை குறிக்கோளாகக் கொண்டு வரையப்பட்டது.

2.10.9 தொலைத்தொடர்பு மற்றும் இலத்திரனியல் உட்கட்டமைப்பு

ஸ்ரீலங்கா டெலிக்கொம் PLC இனுடைய ஒளி இளை வலையமைப்பு (உரு 5.10.1.ஐ

2.10.10 தேசிய வீடமைப்புக் கொள்கை (2019 ஆம் ஆண்டு தை மாத திருத்தம்)

வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சினால் தயாரிக்கப்பட்டது

ஏற்கனவே வெளியிடப்பட்ட தேசிய வீடமைப்புக் கொள்கைக்கு மேலதிகமாக ,தனியார் துறையுடன் போட்டியிடும் தன்மையைக் கொண்ட குறைந்த வருமானம் மற்றும் நடுத்தர வருமானம் கொண்ட குழுக்களிற்காக பொருத்தமான பகுதிகளில் கட்டுப்படியாகும் செலவில் வீடமைப்பு வசதிகளை வழங்குவதற்கான அரச தலையீடு, நகரப் பகுதிகளில் ஆரோக்கியமான கலப்புச் சமூகக் கட்டமைப்பை உருவாக்குவதற்கு அவசியமாகின்றது.

எதிர்கால அபிவிருத்திக்கு தேவைப்படும் கொள்கைகள் மற்றும் திட்டங்கள்.

**2.11 தேவைப்படும் திட்டங்கள் மற்றும் கொள்கைகள்.**- இதேவேளையில், இத்திட்டத்தினால் எதிர்பார்க்கப்படும் அபிவிருத்தியை எட்டுவதற்கு கீழேதரப்பட்ட துறைகளில் தேசிய கொள்கைகள் மற்றும் திட்டங்களிற்கான தேவைப்பாடு இனங்காணப்பட்டுள்ளது.

**2.11.1 கடல் வள அபிவிருத்தி மற்றும் கடல் மாசாதல் தவிர்ப்பு**.- இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்கு பயன்படக்கூடிய பெரும்பாலான வளங்கள் இலங்கையின் கடற் பரப்பளவில் பரந்து காணப்படுகின்றதுடன் அவற்றை வினைத்திறனாகவும் நிலைபேறான முறையிலும் பயன்படுத்துவதற்கு தேசிய கொள்கை மற்றும் திட்டமொன்று தேவைப்படுகின்றது.

அதே நேரத்தில், அவற்றின் நம்பகத்தன்மை அவ்வாறான வளங்களின் நீண்டகால பாவனையில் தங்கியுள்ளது. கப்பல் போக்குவரத்து சார்ந்த நவடிவக்கைகள், சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகள், கடற்கரை மாசடைதல், நிலம்சார்ந்த கழிவுகளை கடலில் கொட்டுதல் மற்றும் அகழ்வு நடவடிக்கைகள் போன்றவை அவ்வாறான வளங்களின் நீண்டகால இருப்பு மற்றும் நிலைபேறான பாவனைக்கான முக்கிய சவால்களாகும். கடல் மாசாதல் தடுப்பு கொள்கைக்கான தேவை இந்த விடயம் தொடர்பாக முக்கியத்துவம் பெறுகின்றது

**2.11.2 மனிதவள அபிவிருத்தி.**- எந்தவொரு நாட்டினதும் அபிவிருத்திக்கும் மனிதவளமானது மிகவும் முக்கியமான அங்கமாகத் திகழ்கின்றது. இருப்பினும், மனித வளத்தினுடைய பாவனை செயற்திறனுடன் முகாமைசெய்யப்படாமை குறிப்பிடப்படவேண்டியுள்ளது. சில உயர் - ஊதியம் வழங்கும் துறையின் அனைத்து வகைகளிலும் பாரியளவான மனிதவளத் தட்டுப்பாடு (உதாரணம்- கட்டுமானம், உற்பத்தி, இலத்திரனியல், தகவல் தொழில்நுட்பம் போன்றவை) காணப்படும் அதேவேளை, இதற்கு நிகராக சில வரையறுக்கப்படாத தொழிற் துறைகளில் தேவைக்கு அதிகமான மனிதவளம் காணப்படுகின்றது (முச்சக்கரவண்டி சாரதிகள், பாதையோர வர்த்தகம் போன்றவை). இந்த நிலைமையானது, கல்வி அபிவிருத்தித் திட்டத்துடன் ஒருங்கிணைக்கப்பட்ட தேசிய மட்ட மனிதவள அபிவிருத்திக் கொள்கை மற்றும் திட்டத்திற்கான தேவைப்பாடு காலத்தின் தேவையாக அமைகின்றது.

**3.0 அமுலாக்கல் உபாய மார்க்கம்** அமுலாக்கல்.

**3.1 குறிக்கோள்.**- தேசிய பௌதிக திட்டமிடல் கொள்கையின் குறிக்கோளானது திட்டமிடல் மற்றும் அமுலாக்கலுடன் தொடர்புபட்ட அனைத்து அபிவிருத்தி சார் நிறுவனங்களிற்கும் அவற்றின் அபிவிருத்தியுடன் தொடர்புபட்ட செயற்பாடுகளிற்கான பரந்துபட்ட தேசிய மட்ட வழிகாட்டலை வழங்குவதுடன், இக்கொள்கையானது இந்த நாட்டினுடைய பௌதிக சுட்ராடலுடன் தொடர்புபட்ட வசதிகள், சேவைகளின் உட்கட்டமைப்புக்களை பௌதிக சுற்றாடலின் அபிவிருத்திக்காக நெறிப்படுத்துவதில் நேரடியான தாக்கத்தை செலுத்துகின்றது.

இந்த தேசிய பௌதிக திட்டமானது மேலே குறிப்பிடப்பட்ட தேசிய பௌதிக திட்டமிடல் கொள்கையின் நெறிப்படுத்தலை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட அபிவிருத்திக்கான சட்டகமாகும். இத்திட்டமானது விரிவான இடம்சார் கட்டமைப்பை வழங்கும் அதேவேளை, இதனுடைய அமுலாக்கல் செயற்பாடானது தொழில்நுட்ப ஏற்பாடுகள் மற்றும் விதிமுறைகளிற்கமைவான சட்டவரையறைகளின் ஊடாக செயற்படுத்தப்படவேண்டியுள்ளது. அவ்வாறான ஒவ்வொரு செயற்பாட்டின் கீழும் அமைகின்ற உபாயங்கள் கீழே தரப்பட்டுள்ளன

**3.2 தொழில்நுட்ப ஏற்பாடுகள்** தொழில்நுட்ப ஏற்பாடுகள்.

**3.2.1 விரிவான பிராந்திய அபிவிருத்தித் திட்டங்கள்.**- பிரதான தேசிய பௌதிக திட்டமானது, நகர மற்றும் நாட்டுத் திட்டமிடல் சட்ட மூலத்தினால் (2000 ஆம் ஆண்டு திருத்தச் சட்டம்) வழங்கப்பட்ட அதிகாரங்களின் அடிப்படையில், மாகணங்களிற்காக அல்லது விசேடமாக தெரிவுசெய்யப்பட்ட பிராந்தியங்களிற்காக தயாரிக்கப்படும் பிராந்திய பௌதிகத் திட்டங்களிற்கு விரிவுபடுத்தப்படமுடியும். பிராந்திய அபிவிருத்தித் திட்டங்கள்.

1. கிழக்கு மேற்கு அபிவிருத்தித் தடப்பகுதிக்கான பிராந்திய அபிவிருத்தித் திட்டம்
2. வடக்கு அபிவிருத்தித் தடப்பகுதிக்கான பிராந்திய அபிவிருத்தித் திட்டம்
3. தெற்கு அபிவிருத்தித் தடப்பகுதிக்கான பிராந்திய அபிவிருத்தித் திட்டம்
4. கிழக்கு அபிவிருத்தித் தடப்பகுதிக்கான பிராந்திய அபிவிருத்தித் திட்டம்
5. பெரிய கண்டிப் பிராந்திய அபிவிருத்தித் திட்டம்
6. பெரிய அனுராதபுரப் பிராந்திய அபிவிருத்தித் திட்டம்
7. ஒன்பது பிரதான நகரங்களிற்கான பிராந்திய அபிவிருத்தி திட்டங்கள்
8. மத்திய கூருணர்வுப் பிரதேசம் மற்றும் கூருணர்வுள்ள பிராந்தியங்களிற்கான பாதுகாப்புத் திட்டங்கள்
9. காடுகள், வனசீவராசி மற்றும் உயிர்ப் பல்வகைமைப் பகுதிகளிற்கான பாதுகாப்புத் திட்டங்கள்
10. படிமுறையில் அமைந்த நீரேந்து பிரதேசங்களின் தொகுதிகளை புணரமைப்பதற்கான திட்டங்கள்

மேலே குறிப்பிடப்பட்ட திட்டங்கள் தேசிய பௌதிக திட்டமிடல் திணைக்களம் அல்லது நகர அபிவிருத்தி அதிகார சபை, போன்ற அவ்வாறான செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு அதிகாரமளிக்கப்பட்டதும் தற்காலச் சூழ்நிலைக்கு ஏற்றவகையில் அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரிப்பதற்கான வளங்களைக் கொண்டதுமான நிறுவனங்களின் ஊடாக அபிவிருத்தி செய்யப்பட முடியும். இதற்கு மேலதிகமாக இவைசார்ந்த திட்டங்கள் வேறு நிறுவனங்களினூடாகத் தயாரிக்கப்படும் சந்தர்ப்பங்களில், அவற்றின் வேலைப்பாடுகள் தடையின்றி நகர்வதற்கும், உயர்மட்ட ஒருங்கிணைப்பை பேணுவதற்கும், திட்டங்கள் பிரதான திட்டத்திலிருந்து விலகிச் செல்வதைத் தடுப்பதற்கும், தேசிய பௌதிக திட்டமிடல் திணைக்களம் அல்லது நகர அபிவிருத்தி அதிகார சபையின் ஒருங்கமைப்புடன் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது.

இத்திட்டத்தில் குறிக்கப்பட்ட பெரும்பாலான ஒதுக்கங்கள் இலங்கையின் பல மாகாண மற்றும் நிர்வாக எல்லைகளை ஊடறுத்துச் செல்வதனால் மாகாண நிர்வாக அலகுகள் மற்றும் அவைசார்ந்த அரசியல் அதிகாரங்களினுடனான உயர்ந்தபட்ச ஒருங்கிணைப்பானது இத்திட்டங்களின் அமுலாக்கலிற்கு அத்தியாவசியமானதாகும்.

உள்ளூர் அபிவிருத்தித் திட்டங்கள்.

**3.2.2 விரிவான உள்ளூர் அபிவிருத்தித் திட்டங்கள்.**- உள்ளூர்ப் பிராந்தியங் களிற்காக அபிவிருத்தித் திட்டங்கள் 1978ஆம் ஆண்டு நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டமூலம் மற்றும் அதன் திருத்தச் சட்டங்கிளில் வழங்கப்பட்ட அதிகாரங்களின் அடிப்படையில், நகர அபிவிருத்தி அதிகார சபையினால் அல்லது நகர மற்றும் நாட்டுத் திட்டமிடல் சட்டத்தினால் (2000 ஆம் ஆண்டு திருத்தச் சட்டம்), தேசிய பௌதிக திட்டமிடல் திணைக்களம் அல்லது அவ்வாறான திட்டங்களைத் தயாரிப்பதற்கு அதிகாரமளிக்கப்பட்ட அபிவிருத்தி நிறுவனங்களினால் தயாரிக்கப்படுகின்றன. வெவ்வேறு அபிவிருத்தி சார்ந்த துறைகளிற்கான நிறுவனங்களினால் அவற்றுடன் தொடர்புபட்ட அபிவிருத்திச் செயற்திட்டங்கள் தொடர்புபட்ட சட்ட ரீதியான அதிகாரங்களின் அடிப்படையில் வடிவமைக்கப்பட்டு அமுலாக்கப்படுகின்றன.

மேலேகுறிப்பிடப்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்கள் தேசிய பௌதிக திட்டத்திற்கு அமைவாக செயற்படுத்தப்படுதல் கட்டாயமாக்கப் படுவதுடன், தவிர்க்க முடியாத காரணங்களிற்காக அவ்வாறான திட்டங்களில் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டிய தேவைப்பாடு உருவாகும் சந்தர்ப்பங்களில், அவ்வாறான மாற்றங்கள் அமைச்சுக்களிற்கு இடையேயான ஒருங்கிணைப்புக் குழுவின் மீள்பார்வைக்கு உட்படுத்தப்பட்டு (பகுதி 2.3.3. இல் குறிப்பிடப் பட்டுள்ளது), தேசிய பௌதிக திட்டமிடல் சபையால் அங்கீகரிக்கப்படவேண்டும் (பகுதி 6.3.1.இல் குறிப்பிடப்பட்டுள்ளது).

திட்டம் மற்றும் கொள்கை மீதான நிகழ்நிலைப் படுத்தல்.

**3.2.3 திட்டம் மற்றும் கொள்கை மீதான நிகழ்நிலைப்படுத்தல்.**- பத்து வருட கால முடிவில் (2028) தேசிய பௌதிக திட்டமிடல் கொள்கை மற்றும் திட்டம், திட்ட அமுலாக்கலின் போக்கு, திட்டத்தின் அடைவுகள், தேவையான நிகழ்நிலைப்படுத்தல் செயன்முறை போன்றவற்றை உள்ளடக்குவதற்காக, முழுமையான மீள்பார்வைக்கு உட்படுத்தப்படவேண்டிய தேவை காணப்படுகின்றது.

திட்டம் மற்றும் கொள்கை மீதான நிகழ்நிலைப்படுத்தற் செயற்பாட்டை மேற்கொள்வதற்கான படிமுறை பகுதி 01 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

மீள்பார்வைக்கு உட்படுத்தும் செயற்பாடானது, அனைத்துப் பங்குதாரர்களும் அடங்காலக, தொழில்நுட்ப ஆலோசனைக் குழுவின் வழிகாட்டலிற்கமைய தேசிய பௌதிக திட்டமிடல் திணைக்களத்தினால் முன்னெடுக்கப்பட முடியும். இச்செயற்பாட்டின் போது இவ்அறிக்கையின் பகுதி 03இல் குறிப்பிடப்பட்ட பிரதானமான நான்கு வழிகாட்டற் கொள்கைகள் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள் பிரதானமான அம்சமாக கருத்திற்கொள்ளப்படுவதுடன், காலத்திற்கு ஏற்றதான ஏனைய அம்சங்களும் திட்டம் மற்றும் கொள்கையின் சிறந்த பெறுபேறுகளிற்காக சேர்த்துக்கொள்ளப்படமுடியும்.

சட்ட விதிமுறைகளின் ஏற்பாடு.

### 3.3 சட்ட விதிமுறைகளின் ஏற்பாடு

**3.3.1 நாட்டின் தலைவரின் தலைமையில் அமைந்த தேசிய பௌதிக திட்டமிடல் சபையின் வருடாந்த முன்னேற்ற ஆய்வு.**- நகர மற்றும் நாட்டுத் திட்டமிடல் சட்டமூலத்தின் (2000 ஆம் ஆண்டு திருத்தச் சட்டம்) பகுதி 3 (1) இல் வழங்கப்பட்ட அதிகாரங்களின் அடிப்படையில், தேசிய பௌதிக திட்டமிடல் கொள்கை மற்றும் திட்டத்தை தயாரித்தல் மற்றும் அதன் அமுலாக்கற் செயற்பாடுகளை வழிநடத்தும் உயர் நிலை அதிகாரம் அளிக்கப்பட அமைப்பாக தேசிய பௌதிக திட்டமிடல் சபை அமைகின்றது.

அமைச்சுக்களிற்கு இடையேயான ஒருங்கிணைப்புக் குழுவினால் (பகுதி 6.3.3. இல் குறிப்பிடப்பட்டுள்ள) தேசிய பௌதிக திட்டமிடல் சபையின்

அங்கீகாரத்திற்காக வழங்கப்பட வேண்டிய வருடாந்த மீளாய்வானது, இத்திட்டத்தினுடைய வெற்றிகரமான அமுலாக்கல் மற்றும் மேற்பார்வைச் செயற்பாட்டிற்கு அவசியமாக அமைகின்றது. அமைச்சுக்களிற்கு இடையேயான ஒருங்கிணைப்புக் குழுவினால் திட்டமிடல் சபைக்கு வழங்கப்படும் அவ்வாறான அறிக்கைகள் மற்றும் அவற்றின் அடிப்படையில் திட்டமிடல் சபையினால் நெறிப்படுத்தப்படும் அவசியமான வழிகாட்டல்கள், அத்தியாவசியமான திருத்த நடவடிக்கைகள் மற்றும் தொடர்ச்சியான நிகழ்நிலைப் படுத்தற் செயற்பாடுகளை தேசிய பௌதிக திட்டமில் திணைக்களத்தினால் மேற்கொள்வதற்கு வழிசெய்யும்.

3.3.2 **தேசிய திட்டமிடல் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படும் பண ஒதுக்கங்களை அத்திட்டத்துடன் ஒத்துப் போகும் வகையில் நெறிப்படுத்தல்**.- தேசிய மற்றும் பிராந்திய ரீதியிலான செயற்திட்டங்களின் தயாரிப்பு மற்றும் அமுலாக்கல் செயற்பாடானது அரச திறைசேரியால் ஒதுக்கப்படும் நிதியில் அதிகளவில் தங்கியுள்ளது. தற்போதைய ஏற்பாடுகளிற்கு அமைய வருடாந்த வரவு செலவுத் திட்ட ஒதுக்கங்கள் மற்றும் செயற்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்கள் மீதான வெளிநாட்டு நிதி உதவிகளின் ஒதுக்கங்கள் தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் அனுமதிக்கு அமைவாகவே மேற்கொள்ளப்படுகின்றது. இந்தக் கட்டமைப்பினுள், தேசிய திட்டமிடல் திணைக்களமானது, தேசிய பௌதிக திட்டமிடல் கொள்கை மற்றும் அதன் திட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்ட திட்டத்தை அமுலாக்கும் கடமைப் பொறுப்பில் அதிகளவான கட்டுப்பாட்டைக் கொண்டுள்ளது.

இத்திடத்தை செயற்படுத்ததுவதற்கான பிரதான செயற்பாட்டாளராக தேசிய பௌதிக திட்டமிடல் திணைக்களத்துடன் இணைந்து செயற்படவேண்டிய, தேசிய திட்டமிடல் திணைக்களம் காணப்படுகின்றது.

நகர அபிவிருத்தி அதிகார சபை, வனப் பாதுகாப்புத் திணைக்களம், உள்ளூராட்சி அதிகார சபைகள், கடற்கரைப் பாதுகாப்புத் திணைக்களம், கமநல அபிவிருத்தித் திணைக்களம், காணி ஆணையாளர் நாகயத்தின் திணைக்களம், வீதி அபிவிருத்தி அதிகார சபை, மத்திய சுற்றாடல் அதிகார சபை போன்ற நிறுவனங்கள் தனியார் துறையின் நேரடி முதலீட்டினை, கவனத்தில் கொள்கின்றன. ஆனபடியால், தேசிய பௌதிக திட்டத்துடன் இவ்வாறான செயற்திட்டங்களின் பொருத்தப் பாட்டினை உறுதிசெய்வதற்கு, மேற்குறிப்பிட்ட வகையான நிறுவனங்களை தேசிய பௌதிக திட்டமிடல் கொள்கை அமுலாக்கலிற்கான பிரதானமான பங்காளர்களாக இணைத்துக் கொள்ளமுடியும்.

3.3.3 **தொடர்ச்சி மற்றும் பொருந்துகை தொடர்பாக அமைச்சுக்களிற்கு இடையேயான ஒருங்கமைப்புக் குழுவால் மேற்கொள்ளப்படும் வருடாந்த அமர்வு**.- நகர மற்றும் நாட்டுத் திட்டமிடல் சட்டமூலத்தின் (2000ஆம் ஆண்டு திருத்தச் சட்டம்) அதிகாரங்களிற்கமைய, அதனுடைய பகுதி 4 அ (1)இல் குறிப்பிடப்பட்ட குறிக்கோள்களிற்கமைவாக, அமைச்சுக்களிற்கு இடையேயான ஒருங்கிணைப்புக் குழுவானது நிறுவப்பட்டுள்ளது. அவ்வதிகாரங்களின் அடிப்படையில், வளர்ந்துவரும் தேவைப்பாடுகள் மற்றும் தொடர்புபட்ட நிறுவனங்களிடம் உருவாகும் புதிய தேவைப்பாடுகள் மற்றும் தேசிய பௌதிக திட்டத்தில் மேற்கொள்ளப்படவேண்டிய அவசியமான நிகழ்நிலைப்படுத்தல் அம்சங்கள் தொடர்பான விடயங்களைப் அபிவிருத்தி சார் நிறுவனங்களிற்கு இடையே பரிமாற்றிக்கொள்வதற்காக, அமைச்சுக்களிற்கு இடையேயான ஒருங்கமைப்புக் குழுவானது வருடாந்த அமர்வுகளை (ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட அமர்வுகள்) மேற்கொள்ள வேண்டியுள்ளது.

இக்குழுவினால் காலத்திற்குக் காலம் மேற்கொள்ளப்படும் பரிந்துரைகள் தொழில்நுட்ப ஆலோசனைக் குழுவினால் (TAC, 2000ஆம் ஆண்டு திருத்தச் சட்டத்தின் இ பகுதியில் வளங்கப்பட்ட அதிகாரங்களிற்கமைய நியமிக்கப்பட்ட) உள்வாரியாக ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு, தேசிய பௌதிக திட்டமிடல் சபையிடம் அதன் அங்கீகாரத்தைப் பெறுவதற்காக சமர்ப்பிக்கப்பட முடியும்.

*3.3.4* ***மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அலகுகளின் தகைமையை இத்திட்டத்தை செயற்படுத்துவதற்கு ஏற்ற வகையில் மேம்படுத்தல்.***- *முன்பு குறிப்பிடப்பட்டதற்கிணங்க, தேசிய பௌதிக திட்டத்தின் அமுலாக்கலானது, தேசிய, பிராந்திய மற்றும் உள்ளூராட்சி அதிகாரங்களை உடைய வேறுபட்ட நிறுவனங்களின் ஊடாக செயற்படுத்தப்பட வேண்டியுள்ளது. நகர அபிவிருத்தி அதிகார சபை, மத்திய சுற்றாடல் அதிகார சபை, வீதி அபிவிருத்தி அதிகார சபை போன்ற தேசிய மட்ட நிறுவனங்கள், அவற்றை அமுல்ப்படுத்துவதற்கு தேவையான தொழில்நுட்ப மற்றும் நிதி வளங்களைத் தன்னகத்தே கொண்டுள்ள அதேவேளை, மாகாண சபைகள் மற்றும் உள்ளூர் அதிகார சபைகள் அவ்வாறான தகைமைகளைக் கொண்டிருக்கவில்லை. மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அதிகார சபைகளின் உறுப்பினர்களின் ஆசீர்வாதத்துடன் அல்லது போதுமான தொழில்நுட்ப அறிவு பிரயோகப்படுத்தப்படாத நிலையில், நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் தற்போது நடைபெற்றுவரும், ''ஒருங்கிணைக்கப்படாத'', ''திட்டமிடப்படாத'', ''எழுந்த மாதிரியான'' அபிவிருத்திச் செயற்பாடுகள், சுற்றாடல் நிலைபேறான தன்மையைப் பாதிப்பதுடன், அவை பொருளாதார சாத்தியக்கூற்றுத் தன்மை அற்றதும் சமூக எதிர்பார்ப்புகளிற்கு எதிரானதுமாக அமைகின்றன.*

*தொடர்புபட்ட நிறுவனங்களில் திட்டங்களை விளங்கிக் கொள்ளல், அவற்றின் நோக்கங்களை அறிந்துகொள்ளல் மற்றும் நிர்வாக, அரசியல் அதிகாரங்களிற்கு அவற்றின் முக்கியத்துவத்தை விளங்கப்படுத்தக்கூடிய தொழில்நுட்ப தகைமையுடைய ஊழியர்கள் காணப்படாமை போன்ற காரணிகள், திட்டமிடல் சார்ந்த சுற்றாடலில், இந்த தொடர்புகளற்ற அமுலாக்கற் செயற்பாடுகளிற்கான பிரதானமான காரணங்களாக அமைகின்றன.*

*இவ்வாறான தடைகளை நீக்குவதற்கும், மேற்குறிப்பிட்ட இரண்டு நிர்வாக நிலைகளையும் பலப்படுத்துவதற்கும், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அதிகார சபைகளில் தகைமை பெற்ற ''நகரத் திட்டமிடலாளர்களை'' நியமிப்பதன்மூலம், தேசிய மட்ட திட்டமிடல் கொள்கைகளை உள்ளூர் மட்ட செயற்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களிடம் இணைத்துக் கொள்வதற்கும் உள்ளூர் மட்ட தேவைப்பாடுகளை தேசிய மட்ட திட்டங்கள் மற்றும் கொள்கைகளில் உள்ளடக்குவதற்குமாக முன்மொழியப்படுகின்றது. உள்ளூராட்சி அதிகார சபைகள் மற்றும் மாகாண சபைகள் திட்டமிடல் அமைப்பை உருவாக்கிக் கொள்ளவதற்காக தொடர்புபட்ட அமைச்சுக்களின் உதவியை நாடமுடியும்*

*3.3.5* ***ஒருங்கிணைந்த தொடர்ச்சியை உறுதிப்படுத்தும் பராமரிப்பாளர் மற்றும் கண்காணிப்பளர் குழுக்களை நிறுவுதல்.***- *மேலே குறிப்பிடப்பட்ட வரையறுக்கப்பட்ட விதிமுறைகளிற்கு மேலதிகமாக, திட்டத்தின் அமுலாக்கலில் மக்கள் பங்களிப்பை உறுதிப்படுத்துவதற்காக, தேசிய பௌதிக திட்ட அமுலாக்கத்திற்கான ''காப்பாளர் குழு'' ஒன்றினை நிறுவுதல் முன்மொழியப்படுகின்றது. இக்குழுவானது சட்டரீதியான கட்டமைப்பாக உருவாக்கப்படினும், அதனுடைய செயற்பாடுகள் அரச சார்பற்ற நிறுவனங்கள், மாணவர் அமைப்புக்கள், ஊடக அமைப்புக்கள் மற்றும் தன்னார்வக் குழுக்களைக் கொண்டமைந்த திறந்த அமைப்பாகப் பேணப்படமுடியும்.*

*இக்காப்பாளர் குழுவானது, இக்கொள்கை மற்றும் திட்டத்தின் அமுலாக்கலில் விலகிச்செல்லும் அம்சங்கள் மற்றும் மேம்படுத்தப்படவேண்டிய அம்சங்கள் தொடர்பான தகவல்களை தேசிய பௌதிக திட்டமிடல் திணைக்களம் மற்றும் தேசிய திட்டமிடல் திணைக்களத்திற்கு அறிவிப்பதற்கான கலந்துரையாடல்களை அடிக்கடி மேற்கொள்ளும். திட்டம் மற்றும் கொள்கையில் பாரியளவில் விலகிச்செல்லும் எந்தவொரு செயற்பாடு அவதானிக்கப்படும் பட்சத்தில் அல்லது ஒத்துப்போகாத செயற்பாடுகளை சுட்டிக்காட்டுவதற்கான அதிகாரம் இந்தக் காப்பாளர் குழுவிற்கு வழங்கப்படமுடியும்.*

**அட்டவணை 01 கிழக்கு மேற்கு அபிவிருத்தித் தடப் பிராந்தியத்தினுள் அமையும் பிரதேச செயலாளர் பிரிவுகள் (DSD)**

| அபிவிருத்தித் தடப் பிராந்தியம் / பெருநகர் பிராந்தியம் / பிரதான நகரம் | | **DS** பிரிவுகள் | |
|---|---|---|---|
| | | தொடர்புபட்ட தடப் பிராந்திய வலயத்தில் அமையும் **DSD (10 Km** சுற்று வட்டத்தினுள்) | தொடர்புபட்ட தடப் பிராந்திய வலயத்தில் அமையும் **DSD (10 -20 Km** சுற்று வட்டத்தினுள்) |
| | கிழக்கு- மேற்கு தடப் பிராந்தியம் | | |
| 1 | கொழும்பு பெருநகர் பிராந்தியம் | கொழும்பு, திம்பிரிக்கசாய, ஸ்ரீ ஜெயவர்த்தனபுர கோட்டை, தெகிவளை, மகரகமை, கொலண்ணாவை, களனி, இரத்மலானை, மொரட்டுவை, கஸ்பாவை, பியகமை, மகர | கோமாகமை, வத்தளை, ஜா-எல, கடுவலை |
| 2 | நீர்கொழும்பு-கட்டுநாயக்கா பெருநகர்ப் பிராந்தியம் | கத்தன, நீர்கொழும்பு, வென்னப்புவை | |
| 3 | கம்பகா- பெருநகர்ப் பிராந்தியம் | கம்பஹா | மினுவாங்கொடை, திவுலப்பிட்டிய, அத்தனகலை, தோம்பே |
| 4 | மீரிகமை – வரக்காப்பொல | மீரிகமை, வரக்காபொலை, நாரம்மல | ருவன்வல்ல, கலிகமுவை, பண்ணலை |
| 5 | குருநாகல்- பெருநகர்ப் பிராந்தியம் | குருநாகல், மல்லவப்பிட்டிய, மாவத்தகமை, மஸ்பொத்த, வீரம்புகெதர, இப்பாகமுவை, ரீதிகமை | பமுணாகொட்டுவை, கங்கேவத்தை, பல்லேபொலை, யத்வத்தை, மாத்தளை |
| 6 | பொல்காவலை – அலவ்வை | பொல்காவலை, அலவ்வை | நாரம்மல, றபுக்கணை, குளியாப்பிட்டிய கிழக்கு, கேகாலை |
| 7 | தம்புள்ளை பெருநகர்ப் பிராந்தியம் | தம்புள்ளை, கலேவலை, பலுகஸ்வவை, | பொல்பிட்டிகமை, கெக்கிராவை, பலகலை |
| 8 | | | கிங்குறாங்கொடை, மெதிரிகிரிய |
| 9 | திருகோணமலை பெருநகர் பிராந்தியம் | கந்தளாய், கிண்ணியா, தம்பலகாமம், திருகோணமலை நகரம் மற்றும் கிரவட்ஸ் | குச்சவெளி, மொறவேவ, மூதூர் |
| 10 | களுத்துறை -பேருவளை | களுத்தறை, பேருவளை | மத்துகமை, தொடன்கொடை, மிலானிய |
| 11 | பாணந்துறை கொறணை | பாணந்துறை, பண்டாரகமை | கொறணை |
| | | | |
| | வடக்குத் தடப்பிராந்தியம் | | |
| 12 | யாழ்ப்பாண பெருநகர்ப் பிராந்தியம் | யாழ்ப்பாணம், நல்லூர், தென்மராட்சி, பச்சிளைப்பள்ளி | வலிகாமம் வடக்கு, வலிகாமம் தெற்கு, வலிகாமம் தென்-மேற்கு, வலிகாமம் மேற்கு, தீவு தெற்கு, காரைநகர், கரவெட்டி, ஊர்காவற்துறை, கோப்பாய் வடமராட்சி கிழக்கு, வடமராட்சி வடக்கு |
| 13 | பரந்தன் | கண்டாவளை | |
| 14 | கிளிநொச்சி | கராச்சி | ஒட்டுசுட்டான DSD இன் பகுதி |
| | | | |
| | தெற்குத் தடப்பிராந்தியம் | | |
| 15 | காலி பெருநகர்ப் பிராந்தியம் | அக்மீமனை, காலி போ கிரவட்ஸ், கபறாதுவை, வலிகமை, இமதுவ, போப்பே-பொட்டல | கிக்கடுவை, யக்கலமுல்லை |
| 18 | எம்பிலிப்பிட்டிய பெருநகர் பிராந்தியம் | எம்பிலிப்பிட்டிய | சீவனகலை |
| 19 | அம்பாந்தோட்டை பெருநகர்ப் பிராந்தியம் | அம்பலாந்தோட்டை, அம்பாந்தோட்டை, சூரியவெவ | அகுன்கொலபெலஸ், லுணுகம்வேர |
| 20 | திஸ்ஸமகாராமை – கதிர்காமம் | கதிர்காமம் மற்றும் திஸ்ஸமகாராமையின் பகுதிகள் | |

| அபிவிருத்தித் தடப் பிராந்தியம் / பெருநகர் பிராந்தியம் / பிரதான நகரம் | | DS பிரிவுகள் | |
|---|---|---|---|
| | | தொடர்புபட்ட தடப் பிராந்திய வலயத்தில் அமையும் DSD (10 Km சுற்று வட்டத்தினுள்) | தொடர்புபட்ட தடப் பிராந்திய வலயத்தில் அமையும் DSD (10 -20 Km சுற்று வட்டத்தினுள்) |
| | கிழக்குத் தடப் பிராந்தியம் | | |
| 22 | மட்டக்களப்பு பெருநகர்ப் பிராந்தியம் | ஏறாவூர் நகரம், காத்தான்குடி, மண்முனை வடக்கு, மண்முனை (ஆரைப்பட்டை) | மண்முனை மேற்கு, ஏறாவூர்பற்று |
| 23 | கல்முனை பெருநகர்ப் பிராந்தியம் | கல்முனை முஸ்லிம், கல்முனை தமிழ், காரைதீவு, மண்முனை தெற்கு மற்றும் இறுவில்பத்து, சாய்ந்தமருது | நாவிதன்வெளி, போறதீவுப்பற்று |
| | | | |
| | தெற்குப் பிராந்தியம் | | |
| 24 | அம்பாறை பெருநகர்ப் பிராந்தியம் | அம்பாறை | உகணவின் பகுதி |
| 25 | சம்மாந்துறை | நிந்தவூர், சம்மாந்துறை | |
| 26 | அக்கரைப்பற்று | அட்டாளைச்சேனை, அக்கரைப்பற்று | |
| 27 | வாழைச்சேனை | கொரளைப்பற்று (வாழைச்சேனை), கொறளைப்பற்று மேற்கு | கொறளைப்பற்று மத்தி, கொறளைப்பற்று தெற்கு |
| 28 | ஏனைய பகுதிகள் | எறகாமம், மண்முனை தெற்கு | ஆலையடி வேம்பு, திருக்கோவில் |
| | | | |
| | பெருநகர் பிராந்தியங்கள் | | |
| 29 | கண்டி | கண்டி, குண்டசாலை, கரிஸ்பத்துவை, பத்ததும்புற | உடநுவரை, யட்டிநுவரை, அக்குறணை, பகத்தகேவாகெட்டவின் பகுதி |
| 30 | அநுராதபுரம் | நுவரகம்பலாத்த கிழக்கு, மிகிந்தளை மற்றும் நுவரகம்பலாத்த மத்தியின் பகுதிகள், நொச்சாதூவ | மிகிந்தளை மற்றும் நுவரகம்பலாத்த மத்தியின் பகுதிகள் |
| | | | |
| | பிரதான நகரங்கள் | | |
| 31 | மகியங்கனை | மகியங்கனை DS மற்றும் மினிப்பே DS இன் பகுதிகள் | |
| 32 | முல்லைத்தீவு | கரைத்துறைப்பற்று | வெலிஓயா |
| 33 | மன்னார் | மன்னார் | |
| 34 | நுவரேலியா | நுவரேலியா DS இன் பகுதி (MC பகுதி உள்ளடங்கலாக) | |
| 35 | பொலண்ணறுவை | தமன்கடுவை DS இன் பகுதி | |
| 36 | புத்தளம் | புத்தளம் | |
| 37 | இரத்தினபுரி | இரத்தினபுரி DS மற்றும் இலபத்த DS இன் பகுதி | |
| 38 | வவுனியா | வவுனியா DS மற்றும் வவுனியா தெற்கு DS இன் பகுதிகள் | |
| 39 | வெள்ளவாயை | எல, வெள்ளவாயை DS இன் பகுதி | |

அட்டவணை 02: முன்மொழியப்பட்ட நகராக்கற் திரழ்வுக் கோலம் - 2050

| | தடப் பிராந்தியம்/ பெருந்கர்ப் பிராந்தியம்/ நகரம்/சிறுநகரம் | அண்ணள வான பரப்பளவு (**Sq.km**) | தற்போதைய சனத்தொகை (2012) | தற்போதைய வருடாந்த வளர்ச்சி வீதம் | எதிர்பார்க்கப்படும் சனத்தொகை – அண்ணளவாக **(2050)** | எதிர்பார்க் கப்படும் வருடாந்த வளர்ச்சி வீதம் |
|---|---|---|---|---|---|---|
| | கிழக்கு- மேற்கு தடப் பிராந்தியம் | | | | | |
| 1 | கொழும்பு பெருநகர் பிராந்தியம் | 740 | 3,039,917 | 0.5 | 3,500,000 | 0.4 |
| 2 | நீர்கொழும்பு- கட்டுநாயக்கா பெருநகர்ப் பிராந்தியம் | 180 | 445,538 | 0.2 | 600,000 | 0.6 |
| 3 | கம்பகா- வெயன்கொடை பெருநகர்ப் பிராந்தியம் | 230 | 375,998 | 1.7 | 600,000 | 2.0 |
| 4 | குருநாகல் - நகர்ப் பிராந்தியம் | 1,163 | 517,271 | 1.4 | 1,000,000 | 2.5 |
| 5 | தம்புள்ளை- பெருநகர்ப் பிராந்தியம் | 1,873 | 326,663 | 1.4 | 500,000 | 1.4 |
| 6 | திருகோணமலை பெருநகர் பிராந்தியம் | 2,595 | 371,882 | 1.7 | 700,000 | 2.3 |
| 7 | களுத்துறை – பேருவளை | 149 | 323,732 | 1.3 | 500,000 | 1.4 |
| 8 | பாணந்துறை – கொறணை | 218 | 403,054 | 1.8 | 500,000 | 0.6 |
| 9 | மீரிகமை – வரக்காப்பொல | 390 | 277,163 | 1.1 | 400,000 | 1.2 |
| 10 | பொல்காவலை – அலவ்வை | 231 | 128,823 | 1.0 | 200,000 | 1.5 |
| 11 | ஏனைய பகுதிகள் | 300 | 180,000 | 2.0 | 200,000 | 0.3 |
| | | | **6,390,041** | | **8,700,000** | |
| | வடக்குத் தடப்பிராந்தியம் | | | | | |
| 1 | யாழ்ப்பாண பெருநகர்ப் பிராந்தியம் | 1,152 | 619,000 | | 1,000,000 | 1.6 |
| 2 | பரந்தன் | 250 | 27,170 | | 50,000 | 2.2 |
| 3 | கிளிநொச்சி | 523 | 71,359 | | 150,000 | 2.9 |
| | | | **717,529** | | **1,200,000** | |
| | தெற்குத் தடப்பிராந்தியம் | | | | | |
| 1 | காலி பெருநகர்ப் பிராந்தியம் | 141 | 241,305 | 0.6 | 300,000 | 0.6 |
| 2 | மாத்தறை பெருநகர்ப் பிராந்தியம் | 261 | 282,501 | 0.7 | 400,000 | 1.1 |
| 3 | அம்பாந்தோட்டை பெருநகர்ப் பிராந்தியம் | 749 | 173,309 | 1.8 | 300,000 | 1.9 |
| 4 | எம்பிலிப்பிட்டிய | 383 | 133,600 | 1.3 | 200,000 | 1.3 |
| 5 | தங்காலை – பெலியத்தை | 258 | 128,499 | 1.2 | 200,000 | 1.5 |
| 6 | திஸ்ஸமகாராமை – கதிர்காமம் | 295 | 86,826 | 1.2 | 100,000 | 0.4 |
| 7 | ஏனைய பகுதிகள் | 134 | 167,264 | 1.3 | 200,000 | 0.5 |
| | | | **1,213,304** | | **1,700,000** | |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

| | தடப் பிராந்தியம்/ பெருநகரப் பிராந்தியம்/ நகரம்/ சிறுநகரம் | அண்ணளவான பரப்பளவு (**Sq.km**) | தற்போதைய சனத்தொகை (2012) | தற்போதைய வருடாந்த வளர்ச்சி வீதம் | எதிர்பார்க்கப்படும் சனத்தொகை – அண்ணளவாக **(2050)** | எதிர்பார்க்கப்படும் வருடாந்த வளர்ச்சி வீதம் |
|---|---|---|---|---|---|---|
| | கிழக்குத் தடப் பிராந்தியம் | | | | | |
| 1 | மட்டக்களப்பு பெருநகரப் பிராந்தியம் | 977 | 261,244 | 0.9 | 300,000 | 0.4 |
| 2 | கல்முனை | 320 | 236,422 | -1.7 | 250,000 | 0.2 |
| 3 | அம்பாறை | 497 | 75,000 | 0.7 | 150,000 | 2.6 |
| 4 | சம்மாந்துறை | 138 | 76,135 | 0.0 | 100,000 | 0.8 |
| 5 | அக்கரைப்பற்று | | | | | |
| 6 | வாளைச்சேனை | 62 | 70,959 | 0.0 | 100,000 | 1.1 |
| 7 | ஏனைய பகுதிகள் | 453 | 78,634 | -4.9 | 100,000 | 0.3 |
| | | 574 | 82,397 | -3.3 | 100,000 | 0.6 |
| | பெருநகர் பிராந்தியங்கள் | | | | | |
| 1 | கண்டி | 430 | 758,863 | 0.9 | 1,000,000 | 0.8 |
| 2 | அநுராதபுரம் | 1,670 | 311,798 | 1.4 | 500,000 | 1.6 |
| | | | | | | |
| | பிரதான நகரங்கள் | | | | | |
| 1 | மகியங்கனை | 297 | 70,025 | 0.5 | 100,000 | 1.1 |
| 2 | முல்லைத்தீவு | 785 | 62,000 | | 100,000 | 1.6 |
| 3 | மன்னார் | 220 | 68,184 | | 100,000 | 1.2 |
| 4 | நுவரெலியா | 163 | 92695 | 0.2 | 100,000 | 0.2 |
| 5 | பொலன்னறுவை | 229 | 80,448 | 0.6 | 100,000 | 0.6 |
| 6 | புத்தளம் | 182 | 82,443 | 1.6 | 100,000 | 0.6 |
| 7 | இரத்தினபுரி | 131 | 106,861 | 0.8 | 100,000 | -0.2 |
| 8 | வவுனியா | 300 | 75,000 | | 100,000 | 0.9 |
| 9 | வெள்ளவாயை | 271 | 71,563 | 1.0 | 100,000 | 1.2 |
| | | 297 | 70,025 | 0.5 | 100,000 | 1.1 |
| 10 | ஏனைய நகரங்கள் | 785 | 62,000 | | 100,000 | 1.6 |
| | | | | | | |
| | | | | | **18,100,000** | **1.0** |

**பின்னிணைப்பு 1: மத்திய கூருணர்வுப் பகுதியில் அமையும் பிரதேச செயலாளர் பிரிவுகள்**

| | மாகாணம் | மாவட்டம் | DSD | நிலப்பரப்பு(km2) |
|---|---|---|---|---|
| 1 | ஊவா | பதுளை | பதுளை | 49.29 |
| 2 | | | பண்டாரவளை | 70.06 |
| 3 | | | எல | 109.37 |
| 4 | | | கல்தமுல்லை | 415 |
| 5 | | | காலி எல | 170.14 |
| 6 | | | அப்புத்தளை | 70.33 |
| 7 | | | கந்தகெட்டிய | 152.62 |
| 8 | | | லுணுகலை | 141.81 |
| 9 | | | மீககிவுள்ளை | 108.72 |
| 10 | | | பசறை | 137.28 |
| 11 | | | ரெதிமாளியத்தை | 135.92 |
| 12 | | | சொறணாத்தோட்டை | 438.28 |
| 13 | | | ஊவா பறணகமை | 80.89 |
| 14 | | | வெலிமடை | 193.9 |
| 15 | | மொனராகலை | படல்கும்புற | 235.99 |
| 16 | | | பிபிலே | 483.52 |
| 17 | | | மடுல்லை | 722.52 |
| 18 | | | மதகமை | 241.14 |
| 19 | | | மொனராகலை | 292.54 |
| 20 | தெற்கு | கலி | நெலுவை | 152.29 |
| 21 | | | தவலமை | 174.15 |
| 22 | | மாத்தறை | கொட்டப்பொலை | 179.33 |
| 23 | | | பஸ்கொடை | 153.94 |
| 24 | | | பிட்டபெத்தறை | 136.56 |
| 25 | மேல் | களுத்தறை | பாலிந்தநுவரை | 283.23 |
| 26 | மத்தி | கண்டி | அக்குறணை | 30.32 |
| 27 | | | தெல்தோட்டை | 51.17 |
| 28 | | | டொலுவை | 100.17 |
| 29 | | | கங்கா இகல கொறள்ளை | 88.92 |
| 30 | | | கண்டி போ கிரவட்ஸ் மற்றும் கங்கவத்தை கொறளை | 50.07 |
| 31 | | | கரிஸ்பத்துவை | 64.96 |
| 32 | | | கத்தரலியத்தை | 58.69 |
| 33 | | | குண்டசாலை | 80.82 |
| 34 | | | மததும்புற | 190.35 |
| 35 | | | மினிப்பே | 249.28 |
| 36 | | | பண்விலை | 91.95 |
| 37 | | | பஸ்வகே கொறள்ளை | 121.9 |
| 38 | | | பத்ததும்புற | 48.96 |
| 39 | | | பத்தகேவாகெட்ட | 83.5 |
| 40 | | | பூயாப்பிட்டிய | 58.34 |
| 41 | | | தும்பனை | 49.93 |
| 42 | | | உடதும்பற | 90.6 |
| 43 | | | உடபலாத்த | 277.07 |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

| | மாகாணம் | மாவட்டம் | DSD | நிலப்பரப்பு(km2) |
|---|---|---|---|---|
| 44 | | | உடுநுவர | 67.23 |
| 45 | | | யட்டிநுவர | 69.79 |
| 46 | | மாத்தளை | அம்பன்கங்கை கொறளய | 55.38 |
| 47 | | | தம்புள்ளை | 455.13 |
| 48 | | | கல்வல | 198.6 |
| 49 | | | லக்கல- பெலகமை | 373.84 |
| 50 | | | மாத்தளை | 72.9 |
| 51 | | | நவுல | 285.17 |
| 52 | | | பல்லேபொல | 81.54 |
| 53 | | | றத்தோட்டை | 105.23 |
| 54 | | | உக்கேவெல | 77.91 |
| 55 | | | யட்டவத்தை | 65.62 |
| 56 | | நுவரேலியா | அம்பகமுவை | 487.91 |
| 57 | | | கங்குறான்கெத்தை | 228.62 |
| 58 | | | கொத்மலை | 223.72 |
| 59 | | | நுவரேலியா | 483.57 |
| 60 | | | வலப்பணை | 321.52 |
| 61 | சப்பிரகமுவை | கேகாலை | அறநாயக்க | 124.42 |
| 62 | | | புலத்கோகுபிட்டிய | 127.25 |
| 63 | | | டிக்கோவிட்ட | 193.24 |
| 64 | | | தெரணியகலை | 222.08 |
| 65 | | | கலிகமுவை | 127.5 |
| 66 | | | கேகாலை | 109.06 |
| 67 | | | மாவனல்லை | 114.9 |
| 68 | | | றம்புக்கணை | 130.33 |
| 69 | | | யட்டியாந்தோட்டை | 178.07 |
| 70 | | இரத்தினபுரி | அயகமை | 157.69 |
| 71 | | | பலாங்கொடை | 274.16 |
| 72 | | | எகலியகொடை | 141.93 |
| 73 | | | எலபத்த | 86.85 |
| 74 | | | கொடக்கவல | 155.75 |
| 75 | | | இம்புல்பே | 255.26 |
| 76 | | | ககவத்தை | 102.68 |
| 77 | | | கலவாணை | 384.75 |
| 78 | | | கிரில்ல | 79.57 |
| 79 | | | கொலண்ண | 183.03 |
| 80 | | | குருவிட்ட | 174.67 |
| 81 | | | நிவிட்டிகலை | 157.91 |
| 82 | | | ஒபநாயக்க | 75.88 |
| 86 | | | பெல்மதுல்லை | 144.84 |
| 84 | | | இரத்தினபுரி | 326.79 |
| 85 | | | வெலிகபொலை | 203.53 |
| 86 | வடமேல் | குருநாகல் | மாவத்தகமை | 109.62 |
| 87 | | | ரீதிகமை | 222.54 |

**பின்னிணைப்பு 02: கடற்கரைப் பாதுகாப்பு வலயத்தினுள் அமையும் பிரதேச செயலர் பிரிவுகள் மற்றும் ஏனைய தகவல்களின் பட்டியல்**

| மாவட்டம் | DS பிரிவுகள் | GNDகளின் எண்ணிக்கை | நிலத்தை நோக்கிய 300m பகுதி (km$^2$) |
|---|---|---|---|
| கொழும்பு | கொழும்பு | 9 | 2.89 |
| | திம்பிரிக்கசாய | 6 | 2.01 |
| | தெகிவளை-கல்கிஸ்சை | 2 | 0.45 |
| | மொறட்டுவை | 15 | 3.18 |
| | இரத்மலாணை | 4 | 1.49 |
| கம்பகா | நீர்கொழும்பு | 27 | 11.03 |
| | வத்தளை | 6 | 5.61 |
| | கத்தன | 10 | 9.2 |
| களுத்துறை | பாணந்துறை | 13 | 2.46 |
| | களுத்துறை | 12 | 3.83 |
| | பேருவளை | 18 | 4.08 |
| காலி | வென்தோட்டை | 10 | 3.24 |
| | பலப்பிட்டிய | 13 | 3.99 |
| | கிக்கடுவை | 43 | 7.45 |
| | காலி | 15 | 3.7 |
| | கபறாதுவை | 24 | 6.04 |
| | அம்பலாங்கொடை | 7 | 0.63 |
| மாத்தறை | தேவிநுவரை | 16 | 2.98 |
| | டிக்வெல்லை | 17 | 4.22 |
| | வெலிகமை | 19 | 5.84 |
| | மாத்தறை | 10 | 2.87 |
| அம்பாந்தோட்டை | திஸ்ஸமகாராமை | 3 | 19.22 |
| | அம்பாந்தோட்டை | 10 | 10.31 |
| | அம்பலாந்தோட்டை | 8 | 3.46 |
| | தங்காலை | 20 | 9.3 |
| மன்னார் | மாந்தை மேற்கு | 11 | 11.95 |
| | மன்னார் | 31 | 28.63 |
| | நாநாட்டான் | 7 | 6.94 |
| | முசலி | 6 | 8.98 |
| புத்தளம் | வண்ணாத்திவில்லு | 9 | 20.75 |
| | கல்ப்பிட்டி | 32 | 45.86 |
| | புத்தளம் | 11 | 6.47 |
| | மண்டல | 11 | 7.35 |
| | ஆராய்ச்சிக்கட்டுவை | 6 | 4.3 |
| | சிலாபம் | 8 | 2.92 |
| | மகாவெவ | 10 | 3.77 |
| | நாத்தாண்டிய | 6 | 1.75 |
| | வென்னப்புவை | 10 | 2.9 |
| யாழ்ப்பாணம் | பருத்தித்துறை | 17 | 6.16 |
| | கோப்பாய் | 11 | 11.07 |
| | தெல்லிப்பளை | 7 | 3.95 |
| | சங்காணை | 9 | 5.97 |
| | மருதங்கேணி | 16 | 33.85 |
| | சாவகச்சேரி | 22 | 23.72 |
| | நல்லூர் | 15 | 6.17 |
| | ஊர்காவற்துறை | 20 | 16.88 |
| | வேலணை | 38 | 35.18 |
| | சண்டிலிப்பாய் | 8 | 3.21 |
| | நெடுந்தீவு | 6 | 33.21 |
| கிளிநொச்சி | பச்சிளைப்பளை | 3 | 14.53 |
| | பூநகரி | 7 | 45.35 |
| | கண்டாவளை | 5 | 15.49 |
| முல்லைத்தீவு | கரைத்துறைப்பற்று | 5 | 29.88 |
| அம்பாறை | கல்முனை | 28 | 2.16 |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

| மாவட்டம் | DS பிரிவுகள் | GNDகளின் எண்ணிக்கை | நிலத்தை நோக்கிய 300m பகுதி ($km^2$) |
|---|---|---|---|
| | காரைதீவு | 5 | 0.89 |
| | நிந்தாவூர் | 10 | 2.19 |
| | அட்டாளைச்சேனை | 9 | 2.01 |
| | அக்கரைப்பற்று | 6 | 1.09 |
| | ஆலையடிவேம்பு | 1 | 0.67 |
| | திருக்கோவில் | 11 | 5.3 |
| | பொத்துவில் | 20 | 8.68 |
| | லகுகலை | 5 | 18.1 |
| | சாய்ந்தமருது | 8 | 0.36 |
| மட்டக்களப்பு | கோரளைப் பற்று வடக்கு | 18 | 31.18 |
| | கோரளைப் பற்று | 7 | 5.22 |
| | ஏறாவூர் பற்று | 22 | 7.21 |
| | மண்முனை வடக்கு | 25 | 13.63 |
| | காத்தான்குடி | 8 | 1.23 |
| | மண்முனைப்பற்று | 18 | 6.51 |
| | மண்முனைப்பற்று தெற்கு மற்றும் ஏறுவில் | 49 | 14.91 |
| திருகோணமலை | திருகோணமலை நகரம் மற்றும் கிறவட்ஸ் | 22 | 22.33 |
| | தம்பலகாமம் | 2 | 1.47 |
| | மூதூர் | 10 | 13.24 |
| | கிண்ணியா | 9 | 4.58 |
| | வெருகல் ஈச்சிலம்பற்று | 3 | 8.35 |
| | குச்சவெளி | 21 | 38.18 |

இலங்கையினுடைய கடற்கரை வலயமானது கடற்கரைப்பாதுகாப்பு சட்ட மூலத்தின் அடிப்படையில் சராசரி கடல் மட்ட உயரத்தில் கடற்கரைப் பகுதியிலிருந்து 300 மீற்டர்களை உள்ளடக்கிய தரைப்பகுதியும், அருவி முகங்கள் மற்றும் கடல் நீரேரிப் பகுதிகள் அல்லது கடலுடன் தொடுக்கும் ஏனைய நீர் நிலைகளில், நிரந்தரமாகவோ அல்லது பருவகால அடிப்படையிலேயோ, நிலப்பக்கமான எல்லையானது இயற்கையான கடலைத் தொடுக்கும் பகுதியில் வரையப்படும் நேர் கோட்டில் அந்த இடத்திலிருந்து நிர்நிலையின் முடிவுவரை வரையப்படும் கோட்டிற்கு செங்குத்தான 2 கிலோமீட்டர் பகுதியை உள்ளடக்கும்.

**பின்னிணைப்பு 03: மிகவும் முக்கியமான நெற்பயிர்ச்செய்கையைக் கொண்ட DSD பகுதிகளில் மொத்தப் பரப்பளவின் அடிப்படையில் %**

| **DSD** பெயர் | மாவட்டம் | நெல் பயிர்ச்செய்கை பரப்பளவு **%** |
|---|---|---|
| அம்பாறை | அம்பாறை | 20 |
| மதவாச்சி | அனுராதபுரம் | 20 |
| வத்தளை | கம்பகா | 20 |
| மகர | கம்பகா | 20 |
| கோப்பாய் | யாழ்ப்பாணம் | 20 |
| பேருவளை | களுத்துறை | 20 |
| மினிப்பே | கண்டி | 20 |
| அம்பன்பொல | குருநாகல் | 20 |
| கணேவத்தை | குருநாகல் | 20 |
| வாரியப்பொல | குருநாகல் | 20 |
| கோபிகணே | குருநாகல் | 20 |
| வீரம்புகெதர | குருநாகல் | 20 |
| கெக்கிராவை | அனுராதபுரம் | 21 |
| அம்பலாங்கொடை | காலி | 21 |
| களனி | கம்பகா | 21 |
| கட்டுபொத்தை | குருநாகல் | 21 |
| கரைத்துறைப்பற்று | முல்லைத்தீவு | 21 |
| தேகிட்டகண்டிய | அம்பாறை | 22 |
| ககடகஸ்திகிலிய | அனுராதபுரம் | 22 |
| வெலிவிட்ட-திவித்துறை | காலி | 22 |
| ஜா-எல | கம்பகா | 22 |
| வேலணை | யாழ்ப்பாணம் | 22 |
| கராச்சி | கிளிநொச்சி | 22 |
| கல்கமுவை | குருநாகல் | 22 |
| மஸ்பொத்த | குருநாகல் | 22 |
| கம்புறுப்பிட்டிய | மாத்தறை | 22 |
| கல்முனை | அம்பாறை | 23 |
| பலகல | அனுராதபுரம் | 23 |
| கிரபாவை | குருநாகல் | 23 |
| பொல்பிட்டிகமை | குருநாகல் | 23 |
| இப்பாகமுவை | குருநாகல் | 23 |
| பொல்காவெலை | குருநாகல் | 23 |
| மாத்தறை | மாத்தறை | 23 |
| கொமாகமை | கொழும்பு | 24 |
| ஊர்காவற்துறை | யாழ்ப்பாணம் | 24 |
| சாவகச்சேரி | யாழ்ப்பாணம் | 24 |
| முத்துகம | களுத்தறை | 24 |
| மகாவ | குருநாகல் | 24 |
| பண்டுவஸ்நுவர | குருநாகல் | 24 |
| வெலிகமை | மாத்தறை | 24 |

| **DSD** பெயர் | மாவட்டம் | நெல் பயிர்ச்செய்கை பரப்பளவு **%** |
|---|---|---|
| பத்தகமை | காலி | 27 |
| போப்- பொடல்ல | காலி | 27 |
| கரவெட்டி | யாழ்ப்பாணம் | 27 |
| வேலணை | யாழ்ப்பாணம் | 27 |
| நம்பாவை | அனுராதபுரம் | 28 |
| ஊர்காவற்துறை | யாழ்ப்பாணம் | 28 |
| மலிபடை | மாத்தறை | 28 |
| ஏறாவூர் பற்று | மட்டக்களப்பு | 29 |
| கம்பகா | கம்பகா | 29 |
| களுத்தறை | களுத்தறை | 29 |
| நிக்கவரட்டிய | குருநாகல் | 29 |
| கிண்ணியா | திருகோணமலை | 29 |
| சங்காணை | யாழ்ப்பாணம் | 30 |
| ஊர்காவற்துறை | யாழ்ப்பாணம் | 30 |
| அம்பலாந்தோட்டை | அம்பாந்தோட்டை | 31 |
| மிலாணிய | களுத்தறை | 31 |
| வவுனியா தெற்கு | வவுனியா | 31 |
| கல்நேவ | அனுராதபுரம் | 32 |
| கொறளைப் பற்று மேற்கு | மட்டக்களப்பு | 32 |
| பென்தோட்டை | காலி | 33 |
| வேலணை | யாழ்ப்பாணம் | 33 |
| மூதூர் | திருகோணமலை | 33 |
| நாச்சாதுவை | அனுராதபுரம் | 35 |
| நாநாட்டான் | மன்னார் | 35 |
| பதவி ஸ்ரீபுர | திருகோணமலை | 36 |
| அங்குன்கோலாபெலஸ | அம்பாந்தோட்டை | 37 |
| கரைத்துறைப் பற்று | முல்லைத்தீவு | 37 |
| கரைத்துறைப் பற்று | முல்லைத்தீவு | 38 |
| தலவ்வை | அனுராதபுரம் | 39 |
| மண்முனை மேற்கு | மட்டக்களப்பு | 41 |
| கரவெட்டி | யாழ்பாணம் | 41 |
| இராசநாய | அனுராதபுரம் | 45 |
| அக்கரைப்பற்று | அம்பாறை | 46 |
| மன்னார் | மன்னார் | 48 |
| தீகவொடை | மாத்தறை | 48 |
| கண்டாவளை | கிளிநொச்சி | 49 |
| மண்முனை தென்மேற்கு | மட்டக்களப்பு | 51 |
| அட்டாளைச்சேனை | அம்பாறை | 54 |
| தம்புத்தேகமை | அனுராதபுரம் | 54 |
| சம்மாந்துறை | அம்பாறை | 64 |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

| **DSD** பெயர் | மாவட்டம் | நெல் பயிர்ச்செய்கை பரப்பளவு **%** |
|---|---|---|
| | | |
| கஸ்பாவை | கொழும்பு | 25 |
| சண்டிலிப்பாய் | யாழ்ப்பாணம் | 25 |
| எகித்துவெவ | குருநாகல் | 25 |
| திருக்கோவில் | அம்பாறை | 26 |
| கலேபிந்துனுவெவ | அனுராதபுரம் | 26 |
| பண்டாரகமை | களுத்தறை | 26 |
| லங்காபுர | பொலண்ணறுவை | 26 |
| இப்பலோகம | அனுராதபுரம் | 27 |

| **DSD** பெயர் | மாவட்டம் | நெல் பயிர்ச்செய்கை பரப்பளவு **%** |
|---|---|---|
| | | |
| காரைதீவு | அம்பாறை | 64 |
| ஆலையடிவேம்பு | அம்பாறை | 66 |
| போறதீவுப் பற்று | மட்டக்களப்பு | 69 |
| கரைத்துறைப் பற்று | முல்லைத்தீவு | 72 |
| நயினாதீவு | அம்பாறை | 73 |
| மண்முனை வடக்கு | மட்டக்களப்பு | 78 |
| கரவெட்டி | யாழ்பாணம் | 96 |

**பின்னிணைப்பு 03: மிகவும் முக்கியமான இறப்பர் பெருந்தோட்டத்தை கொண்டDSD பகுதிகளில் மொத்தப் பரப்பளவின் அடிப்படையில் %**

| **DSD** பெயர் | மாவட்டம் | இறப்பர் பயிர்ச்செய்கை பரப்பளவு **%** |
|---|---|---|
| மிலானியா | களுத்துறை | 16 |
| மாவத்தகமை | குருநாகல் | 16 |
| மிலிம்பத்த | மாத்தறை | 16 |
| கோமாகமை | கொழும்பு | 17 |
| யக்கலமுல்லை | காலி | 17 |
| யட்டவத்தை | மாத்தளை | 17 |
| வெலிவிட்டிய-திவித்துறை | காலி | 18 |
| அறநாயக்க | கேகாலை | 20 |
| பேருவளை | களுத்தறை | 22 |
| அம்பன்கங்கை | மாத்தளை | 23 |
| அயகமை | இரத்தினபுரி | 24 |
| பெல்மதுள்ளை | இரத்தினபுரி | 24 |
| நாகொடை | காலி | 25 |
| மாத்தளை | மாத்தளை | 27 |
| எல்பிட்டிய | காலி | 28 |
| வலல்விட்ட | களுத்தறை | 28 |
| நிவிட்டிகல | இரத்தினபுரி | 28 |
| மாவனல்லை | கேகாலை | 29 |
| அகலவத்தை | களுத்துறை | 30 |
| தம்பனே | கண்டி | 30 |
| கொறணை | களுத்துறை | 31 |
| கேகாலை | கேகாலை | 31 |
| வரக்காபொலை | கேகாலை | 35 |
| புலத்சிங்கள | களுத்துறை | 37 |

| **DSD** பெயர் | மாவட்டம் | இறப்பர் பயிர்ச்செய்கை பரப்பளவு **%** |
|---|---|---|
| மதுருவல | களுத்துறை | 37 |
| கலிகமுவை | கேகாலை | 40 |
| பண்டாரகமை | களுத்துறை | 42 |
| எலபத | இத்தினபுரி | 42 |
| யட்டியாந்தோட்டை | கேகாலை | 43 |
| கிரில்ல | இத்தினபுரி | 43 |
| குருவிட்ட | இத்தினபுரி | 44 |
| மத்துகமை | களுத்தறை | 45 |
| புலத்கொகுபிட்டிய | கேகாலை | 45 |
| பாலிந்த நுவரை | களுத்தறை | 46 |
| தெரணியகலை | கேகாலை | 49 |
| தொடன்கொடை | களுத்தறை | 54 |
| பாதுக்கை | கொழும்பு | 55 |
| கங்வல்லை | கொழும்பு | 56 |
| ருவன்வெல்ல | கேகாலை | 58 |
| எகலியகொடை | இரத்தினபுரி | 60 |
| தெகியோவிட்ட | கேகாலை | 72 |

**பின்னிணைப்பு 03:மிகவும் முக்கியமான தேயிலை பெருந்தோட்டத்தை கொண்ட DSD பகுதிகளில் மொத்தப் பரப்பளவின் அடிப்படையில் %**

| **DSD** பெயர் | மாவட்டம் | தேயிலைப் பயிர்ச்செய்கை பரப்பளவு **%** |
|---|---|---|
| அக்மீமன | காலி | 10 |
| உட தும்புற | கண்டி | 10 |
| அக்குறண | கண்டி | 10 |
| இம்புல்பே | இரத்தினபுரி | 10 |
| கொடக்கவெல | இரத்தினபுரி | 11 |
| புலத்கொகுபிட்டிய | கேகாலை | 12 |
| அத்துரலிய | மாத்தறை | 12 |
| பத்தகம | காலி | 13 |
| பெல்மடுல்லை | இரத்தினபுரி | 13 |
| வெலிமடை | பதுள்ளை | 14 |
| பூஜாப்பிட்டிய | கண்டி | 14 |
| முலத்தியான | மாத்தளை | 16 |
| அம்பன்கங்கை | மாத்தளை | 18 |
| பஸ்கொடை | மாத்தறை | 18 |
| கங்குறான்கெத்தை | நுவரேலியா | 19 |
| தவலமை | காலி | 20 |
| சொறனாத்தோட்டை | பதுள்ளை | 21 |
| பத்த கேவாகெத்த | கண்டி | 22 |
| உடநுவர | கண்டி | 22 |
| ஊவா பரணகமை | பதுள்ளை | 23 |
| மததும்புறை | கண்டி | 23 |
| யட்டிநுவரை | கண்டி | 23 |
| வலப்பணே | நுவரேலியா | 23 |
| ககவத்தை | இரத்தினபுரி | 23 |
| கொட்டபொல | மாத்தறை | 25 |
| பசற | பதுள்ளை | 27 |
| உக்வெல்லை | மாத்தளை | 29 |
| பிட்டபத்தர | மாத்தளை | 30 |
| றத்தோட்டை | மாத்தளை | 32 |
| எல | பதுள்ளை | 37 |
| பண்டாரவளை | பதுள்ளை | 37 |
| நுவரெலியா | நுவரேலியா | 40 |
| பஸ்பகே கொறள்ளை | கண்டி | 41 |
| பதுள்ளை | பதுள்ளை | 43 |
| காலி-எல | பதுள்ளை | 44 |
| அப்புத்தளை | பதுள்ளை | 45 |
| அம்பன்கமுவை கொறள்ளை | நுவரேலியா | 46 |
| கங்கா இகல கொறள்ளை | கண்டி | 47 |
| கொத்மலை | நுவரேலியா | 48 |
| டொலுவை | கண்டி | 52 |
| உடபலாத்த | கண்டி | 54 |
| பண்வில | கண்டி | 61 |
| டெல்தோட்டை | கண்டி | 65 |

**பின்னிணைப்பு 03: மிகவும் முக்கியமான தெங்குப் பெருந்தோட்டத்தை கொண்ட DSD பகுதிகளில் மொத்தப் பரப்பளவின் அடிப்படையில் %**

| **DSD** பெயர் | மாவட்டம் | தெங்குப் பயிர்ச்செய்கை பரப்பளவு **%** | **DSD** பெயர் | மாவட்டம் | தெங்குப் பயிர்ச்செய்கை பரப்பளவு **%** |
|---|---|---|---|---|---|
| களனி | கம்பகா | 10 | கல்ப்பிட்டி | புத்தளம் | 37 |
| பாணந்துறை | களுத்துறை | 10 | மண்டல | புத்தளம் | 37 |
| வெருகல் ஈச்சிலம்பற்று | திருகோணமலை | 10 | இப்பாகமுவை | குருநாகல் | 38 |
| மண்முனை வடக்கு | மட்டக்களப்பு | 11 | பள்ளம | புத்தளம் | 39 |
| கோமாகமை | கொழும்பு | 11 | டிக்வெல்லை | மாத்தறை | 41 |
| கேகாலை | கேகாலை | 11 | ரீதிகமை | குருநாகல் | 42 |
| நிக்கவரட்டிய | குருநாகல் | 12 | பொல்காவெலை | குருநாகல் | 43 |
| கொடக்கவெல | இரத்தினபுரி | 12 | கெனவத்தை | குருநாகல் | 47 |
| ஜா-எல | கம்பகா | 13 | மாவத்தகமை | குருநாகல் | 47 |
| மகர | கம்பகா | 14 | றம்புக்கணை | கேகாலை | 50 |
| கல்கமுனை | கேகாலை | 14 | குருநாகலை | குருநாகல் | 50 |
| மாத்தறை | மாத்தறை | 14 | ஆராய்ச்சிக்கட்டுவ | புத்தளம் | 50 |
| பென்தோட்டை | காலி | 15 | சிலாபம் | புத்தளம் | 50 |
| மகாவ | குருநாகலை | 15 | நீர்கொழும்பு | கம்பகா | 51 |
| வரக்காப்பொல | கேகாலை | 16 | கோபின்கனே | குருநாகல் | 51 |
| கபறாதுவை | காலி | 17 | வென்னப்புவை | புத்தளம் | 52 |
| மினுவாங்கொடை | கம்பகா | 17 | மகாவெவ | புத்தளம் | 54 |
| வத்தளை | கம்பகா | 17 | அலவ்வ | குருநாகல் | 55 |
| கிரிந்த-புகுள்வெல | மாத்தறை | 17 | மஸ்பொத்த | குருநாகல் | 58 |
| போப்பே- பொட்டல | காலி | 18 | நாத்தாண்டிய | புத்தளம் | 59 |
| பல்லேபொல்ல | மாத்தளை | 18 | வாரியப்பொல | குருநாகல் | 60 |
| இராசநாயக்கபுர | குருநாகலை | 20 | பண்டுவாஸ்நுவர | குருநாகல் | 60 |
| தெவிநுவர | மாத்தறை | 20 | பன்னல | குருநாகல் | 61 |
| காத்தான்குடி | மட்டக்களப்பு | 22 | திவுலப்பிட்டிய | கம்பகா | 62 |
| கிக்கடுவை | காலி | 22 | கந்தானை | கம்பகா | 62 |
| கட்டுவனை | அம்பாந்தோட்டை | 22 | கட்டுப்பொத்தை | குருநாகல் | 62 |
| களுத்துறை | களுத்தறை | 22 | மல்லவப்பிட்டிய | குருநாகல் | 63 |
| தங்காலை | அம்பாந்தோட்டை | 23 | பெலியத்தை | அம்பாந்தோட்டை | 65 |
| காலி | காலி | 26 | பின்கிரிய | குருநாகல் | 65 |
| தோம்பே | கம்பகா | 26 | நாரம்மல | குருநாகல் | 66 |
| வெலிகமை | மாத்தறை | 26 | தன்கொட்டுவை | புத்தளம் | 66 |
| பச்சிலைப்பள்ளி | கிளிநொச்சி | 27 | நீர்கொழும்பு | கம்பகா | 67 |
| அத்தனகலை | கம்பகா | 28 | வீரம்புகெதர | குருநாகல் | 67 |
| வீரகெட்டிய | அம்பாந்தோட்டை | 28 | முன்தலை | புத்தளம் | 67 |
| பியகமை | கம்பகா | 29 | குளியாப்பிட்டிய கிழக்கு | குருநாகல் | 68 |
| பேருவளை | களுத்தறை | 32 | மாதம்பை | புத்தளம் | 68 |
| கல்பிட்டி | புத்தளம் | 33 | குளியாப்பிட்டிய மேற்கு | குருநாகல் | 69 |
| புத்தளம் | புத்தளம் | 33 | உடுபெத்தாவை | குருநாகல் | 77 |
| ஒக்கேவல | அம்பாந்தோட்டை | 34 | ஊர்காவற்துறை | யாழ்ப்பாணம் | 88 |
| மீரிகமை | கம்பகா | 36 | கொரளைப் பற்று வடக்கு | மட்டக்களப்பு | 92 |

**பின்னிணைப்பு 04: விவசாய பாதுகாப்பு வலயத்தினுள் பிரயோகிக்கக்கூடிய சட்டங்கள்**

*2003ஆம் ஆண்டு 22ஆம் இலக்க விதைகள் சட்டம்*
*1999 ஆம் ஆண்டு 35ஆம் இலக்க தாவர பாதுக்காப்புச் சட்டம்*
*1951ஆம் ஆண்டு 25ஆம் இலக்க மண் பாதுகாப்புச் சட்டம் விதைகள் சட்டம்*
*1996ஆம் ஆண்டு 24ஆம் இலக்க மண் பாதுகாப்புச் சட்டம்*
*1994ஆம் ஆண்டு 6ஆம் இலக்க கிருமி நாசினிகள் கட்டுப்பாட்டுச் சட்டம் (திருத்தச் சட்டம்)*

பின்னிணைப்பு 05: நீர் பாதுகாப்பு வலயத்தினுள் வரும் மாவட்டங்கள் மற்றும் இவற்றில் அடங்கும் DSD களின் எண்ணிக்கை.

| மாவட்டம் | **DSD** களின் எண்ணிக்கை |
|---|---|
| அம்பாறை | 12 |
| அனுராதபுரம் | 22 |
| பதுள்ளை | 14 |
| மட்டக்களப்பு | 07 |
| கொழும்பு | 07 |
| காலி | 17 |
| கம்பகா | 13 |
| அம்பாந்தோட்டை | 11 |
| யாழ்ப்பாணம் | 04 |
| களுத்தறை | 12 |
| கண்டி | 19 |
| கேகாலை | 11 |
| கிளிநொச்சி | 04 |
| குருநாகலை | 29 |
| மன்னார் | 06 |
| மாத்தளை | 11 |
| மாத்தறை | 14 |
| மொனராகலை | 11 |
| முல்லைத்தீவு | 07 |
| நுவரேலியா | 05 |
| பொலன்னறுவை | 07 |
| புத்தளம் | 15 |
| இரத்தினபுரி | 17 |
| திருகோணமலை | 11 |
| வவுனியா | 07 |

**பின்னிணைப்பு 06: நீர் பாதுகாப்பு வலயத்துடன் தொடர்புபட்ட சட்டங்கள்**

அரச காணிகள் சட்டம்
நில அபிவிருத்திச் சட்டம்
நீர்ப்பாசனச் சட்டம்
விவசாய அபிவிருத்திச் சட்டம்
நீர் வள அபிவிருத்திச் சட்டம்
வனச் சட்டம்
வனசீவராசிகள் சட்டம்
தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை சட்டம்
மண் பாதுகாப்புச் சட்டம்
அனர்த்த முகாமைத்துவச் சட்டம்
கடற்கரைப் பாதுகாப்புச் சட்டம்
காணி சீர்திருத்தச் சட்டம்
நகர அபிவிருத்தி அதிகார சபை சட்டம் திருத்தம்
பெருந்தோட்டப் பயிர்ச்செய்கைகளான தேயிலை/ இறப்பர்/ தென்னை சார்ந்த சட்டங்கள்
மகாவலி அதிகார சபைச் சட்டம்

**பின்னிணைப்பு 07 - இயற்கைப் பாதுகாப்பு வலயம் தொடர்பான கொள்கைகள்**

**வனம்**
தேசிய வனக் கொள்கை - 1995

***வன சீவராசிகள்***
வன சீவராசிகள் பாதுகாப்பிற்கான தேசிய கொள்கை - 2000
யானைகள் பாதுகாப்பிற்கான தேசிய கொள்கை– 2006

**உயிர்ப்பல்வகைமை**
தேசிய உயிர்ப்பல்வகைமை உபாயமார்க்க நடவடிக்கைத் திட்டம் 2016 - 2022

**மீன்பிடி**
தேசிய மீன்பிடி மற்றும் நீர் வள கொள்கை (2006)
கரையோர வலய மற்றும் கரையோர வளங்கள் முகாமைத்துவ திட்டம் - 2016

**வளிமண்டல வளங்கள்**
தேசிய வளிமண்டல தர முகாமைத்துவ கொள்கை - 2000
சுற்றாடல்
தேசிய சுற்றாடற் கொள்கை - 2003

சதுப்பு நிலங்களிற்கான தேசிய கொள்கை - 2005

**கனியங்கள்**
மணல் மற்றும் கட்டுமான தொழிற்துறைக்கான வளங்கள் மீதான தேசிய கொள்கை - 2006
கனிய வளங்களிற்கான தேசிய வரைபுத் திட்டம் - 2017

06-752

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.